சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

★★★

தினமணி

ஞாயிற்றுக்கிழமை
8 மார்ச் 2020
தருமபுரி
18 பக்கங்கள் ரூ.7

இன்றைய 4 பக்க
கொண்டாட்டம்



பரத கண்டத்தில் ஸ்திரீகளின் ஸ்தானம்
வ.வேசுப்ரமண்ய ஐயர்

- ரோஜா மலரே ! – குமாரி சச்சு
- மாறி வரும் சென்னை முகம் !
- கிரிக்கெட் வீரர்களுக்குப் பிடித்த ஹீரோ !
- சினிமாவில் மிகை என்பது இருந்து கொண்டே இருக்கும் ! – கே.எம்.பாஸ்கரன்



இன்றைய இதழுடன் 32 பக்க கதிர் இணைப்பு

மயிலாடுதுறை மாவட்டம்: விரைவில் நடவடிக்கை

நாகை அரசு விழாவில் முதல்வர் அறிவிப்பு



திருச்சியிலிருந்து நாகப்பட்டினம் அரசு மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவுக்கு சனிக்கிழமை வரும் வழியில் திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் அருகேயுள்ள சித்தமல்லி கிராமத்தின் வயல்வெளியில் நாற்றுநடும் பணியை பார்வையிடும் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி.

நாகப்பட்டினம், மார்ச் 7: நாகை மாவட்டத்தைப் பிரித்து மயிலாடுதுறையைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய மாவட்டம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலனையில் உள்ளது. இதனை அரசு விரைவாக நிறைவேற்றும் என்று முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி தெரிவித்தார்.

நாகை மாவட்டம், ஒரத்தூரில் சனிக்கிழமை ரூ. 394.85 கோடி மதிப்பில் நாகை அரசு மருத்துவக் கல்லூரி உள்பட 14 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், ரூ. 343.84 கோடி மதிப்பில் நிறைவேற்றப்பட்ட 66 திட்டங்களை அர்ப்பணித்தும், பயனாளிகளுக்கு ரூ. 101.18 கோடி மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை வழங்கியும் முதல்வர் பேசியது:

தமிழகத்தில் மாவட்டந்தோறும் மருத்துவக்கல்லூரி அமைக்கவேண்டும் என்பது மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் கனவாக இருந்தது. அதை நிறைவேற்றும் வகையில், ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகள் அமைக்க மத்திய அரசின் அனுமதியைப் பெற்று சரித்திர சாதனையைப் படைத்துள்ளது தமிழக அரசு.

உலகத் தரம் வாய்ந்த மருத்துவச் சிகிச்சையானது அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் தமிழக அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சையில் இந்திய அளவில் தமிழகம் முதன்மைப் பெற்று, கடந்த 5 ஆண்டுகளாக தேசிய விருதை பெற்று வருகிறது. புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கும் வகையில் ரூ. 190 கோடி மதிப்பீட்டில் 10 அரசு மருத்துவக் கல்லூரிகளில் உயர் தொழில்நுட்பக் கருவிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

சென்னை அடையாறு புற்று நோய் மையத்தை புற்றுநோய் சிகிச்சைக்கான ஒப்புயர்வு மையமாக தரம் உயர்த்த ரூ. 120 கோடி மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூ. 59 கோடி மதிப்பில் மதுரை, கோவை, தஞ்சை, நெல்லை அரசு மருத்துவமனைகளில் 4 புற்றுநோய் சிகிச்சை மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடந்த 8 ஆண்டுகளில் 13 ஆயிரம் மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

மீனவர்களின் நலன்: மீனவர்களின் நலனுக்காக, முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மீன்வளத் துறையில் பெரிய முதலீடுகளை தமிழக அரசு செய்து வருகிறது. பல திட்டங்கள் மீனவர்களின் நலனுக்காக நிறைவேற்றப்பட்டுள்ளன.

சாதனை மேல் சாதனை என இந்தியாவில் தொடர்ந்து சாதனைப் படைக்கும் அரசாக திகழ்ந்து கொண்டுள்ளது தமிழக அரசு.

மக்கள் நலனுக்கான தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. ஆனால், அவற்றை மறைத்து எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின், இந்த ஆட்சியில் ஒன்றுமே நடைபெறவில்லை, மக்களுக்கு எதுவுமே கிடைக்கவில்லை என தவறான பொய் பிரசாரத்தை மேற்கொண்டு வருகிறார்.

தனி மாவட்டம்...: நாகை மாவட்ட மக்களின் நீண்ட கால கனவுமயிலாடுதுறையைதனிமாவட்டமாக்கவேண்டும்என்றகோரிக்கை. இதனை அமைச்சர் ஓ.எஸ். மணியன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் எஸ். பவுன்ராஜ், வி. ராதாகிருஷ்ணன், பி.வி. பாரதி ஆகியோர் தொடர்ந்து என்னிடம் வலியுறுத்தி வந்தனர். இதன்படி, நாகை மாவட்டத்தைப் பிரித்து மயிலாடுதுறையைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய மாவட்டத்தை அமைக்க அரசு பரிசீலித்து வருகிறது. இந்தக் கோரிக்கையை அரசு விரைவாக நிறைவேற்றும் என்றார் முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி.

தமிழக கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஓ.எஸ். மணியன், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் சி. விஜயபாஸ்கர் ஆகியோர் பேசினர். மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன் விழாவில் பங்கேற்காததையொட்டி, அவரது வாழ்த்துரை, விழா அரங்கில் திரையிடப்பட்டது.

அமைச்சர்கள் திண்டுக்கல் சி. சீனிவாசன், செல்லூர் கே. ராஜு, எஸ்.பி. வேலுமணி, வெ. சரோஜா, கே.சி. கருப்பணன், கடம்பூர் ராஜு, வெல்லமண்டி என். நடராஜன், கே.டி. ராஜேந்திரபாலாஜி, எம். ஆர். விஜயபாஸ்கர், வி.எம். ராஜலெட்சுமி, எஸ். வளர்மதி, பி. தங்கமணி, கே.பி. அன்பழகன், எம்.சி. சம்பத், ஆர். காமராஜ், இரா. துரைக்கண்ணு, ஆர்.பி. உதயகுமார், கே.சி. வீரமணி, பா. பென்ஜமின், நிலோபர் கபீல், க. பாண்டியராஜன், சேவூர் எஸ்.ராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ்,

ஆட்சியர் பிரவீன் பி.நாயர், நாகை தொகுதி மக்களவை உறுப்பினர் எம். செல்வராசு, முன்னாள் எம்.பி. தம்பித்துரை, சட்டப்பேரவை உறுப்பினர்கள் எஸ். பவுன்ராஜ், வி. ராதாகிருஷ்ணன், பி.வி. பாரதி, எம். தமிமுன்அன்சாரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பிஎஸ்என்எல் இழப்பு இரண்டரை மடங்கு அதிகரிப்பு

புது தில்லி, மார்ச் 7: பொதுத் துறையைச் சேர்ந்த பிஎஸ்என்எல் நிறுவனத்துக்கு ஏற்பட்ட இழப்பு 2019 ஏப்ரல்-டிசம்பர் காலகட்டத்தில் இரண்டரை மடங்கு அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.


இதுகுறித்து மத்திய தொலைத்தொடர்புத் துறை இணையமைச்சர் சஞ்சய் தத் தோர் கூறியுள்ளதாவது:

பிஎஸ்என்எல் நிறுவனத்துக்கு ஏற்பட்ட மொத்த இழப்பு நடப்பு 2019-20 ஆம் நிதியாண்டில் டிசம்பர் 31-ஆம் தேதி நிலவரப்படி ரூ.39,089 கோடியை எட்டியுள்ளது. கடந்த 2018-19 நிதியாண்டில் இந்நிறுவனத்தின் இழப்பு ரூ.14,904 கோடியாக காணப்பட்டது. ஆக, கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில், நடப்பு நிதியாண்டில் பிஎஸ்என்எல் நிறுவனத்தின் இழப்பானது இரண்டரை மடங்கு அளவுக்கு அதிகரித்துள்ளது.

தொடர்ந்து இழப்பை சந்தித்து வரும் பிஎஸ்என்எல் மற்றும் எம்டிஎன்எல் நிறுவனங்களை மீட்டெடுக்கும் வகையில் மத்திய அரசு கடந்த ஆண்டு அக்டோபர் 23-இல் ரூ.68,751 கோடி மதிப்பிலான திட்டத்துக்கு ஒப்புதல் அளித்தது. இதில், 4ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு மற்றும் விருப்ப ஓய்வு திட்டத்தை நடைமுறைப்படுத்தல் உள்ளிட்டவையும் அடங்கும் என்றார் அவர்.

பிஎஸ்என்எல் பணியாளர்களில் 78,300 பேரும், எம்டிஎன்எல் நிறுவனத்தில் 14,378 பேரும் விருப்ப ஓய்வு திட்டத்தை தேர்ந்தெடுத்துள்ளனர். இதனால் அவ்விரு நிறுவனங்களின் நிதிச் சுமை கணிசமான அளவில் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அன்பழகன் உடல் தகனம்



சென்னை, மார்ச் 7: மறைந்த முதுபெரும் திராவிட இயக்கத் தலைவரும் திமுக பொதுச் செயலாளருமான க.அன்பழகனின் உடல் சென்னையில் உள்ள மின் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

சுவாசக்கோளாறு காரணமாக அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த க.அன்பழகன் சனிக்கிழமை (மார்ச் 7) அதிகாலை ஒரு மணியளவில் காலமானார். கண்ணாடிப் பேழையில் க.அன்பழகனின் உடல் வைக்கப்பட்டு அவர் வழக்கமாக அணியும் பச்சை துண்டு அணிவிக்கப்பட்டு, அதன் மேல் திமுகவின் இருவண்ணக் கொடிகள் போர்த்தப்பட்டது.

அவரது உடலுக்கு மாலை அணிவித்து திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி செலுத்தினார். அதைத் தொடர்ந்து ஆம்புலன்ஸ் வாகனத்தில் அவரது உடல் ஏற்றப்பட்டு, கீழ்ப்பாக்கம் ஆஸ்பிரான் தோட்டம் இல்லத்துக்கு அதிகாலை 4 மணியளவில் கொண்டுவரப்பட்டு பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அரசியல் கட்சியினர், திரைப்பட பிரபலங்கள், கட்சிப் பிரமுகர்கள் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர்.

சனிக்கிழமை மாலை 4.40 மணியளவில் அவரது உடல் வாகனத்தில் ஏற்றப்பட்டு இறுதி ஊர்வலம் புறப்பட்டது. அந்த வாகனத்தில் அன்பழகனின் குடும்பத்தினர் அமர்ந்திருந்தனர்.

மு.க.ஸ்டாலின், பொருளாளர் துரைமுருகன், மக்களவை திமுக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, துணைத் தலைவர் கனிமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, தயாநிதி மாறன், ஆர்.எஸ்.பாரதி, துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, வி.பி.துரைசாமி மற்றும் , கவிஞர் வைரமுத்து உள்பட ஆயிரக்கணக்கானோர் ஊர்வலத்தில் நடந்து வந்தனர். நியூ ஆவடி சாலை வழியாக ஊர்வலம் சென்று வேலங்காடு மின்மயானத்தை 5.40 மணியளவில் அடைந்தது. வழிநெடுக திமுகவினர் க.அன்பழகன் புகழைப் பறைசாற்றும் வகையில் முழக்கங்கள் எழுப்பியவாறே வந்தனர்.

வேலங்காடு மின்மயானத்தில் க.அன்பழகன் உடலுக்கு மு.க.ஸ்டாலின், துரைமுருகன், கி.வீரமணி, காங்கிரஸ் முன்னாள் தலைவர் கே.வீ.தங்கபாலு, அன்பழகனின் குடும்பத்தினர் உள்ளிட்டோர் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். அன்பழகனின் கொள்ளுப்பேரன் இறுதிச் சடங்குகளை செய்தார். அதைத் தொடர்ந்து அவரது உடல் தகனம் செய்யப்பட்டது.

லேசான மழை பெய்ய வாய்ப்பு

சென்னை, மார்ச் 7: வெப்பச்சலனம் காரணமாக, தமிழகத்தில் ஒரிரு இடங்களில் ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 8) லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இதுகுறித்துசென்னைவானிலைஆய்வுமைய அதிகாரி சனிக்கிழமை கூறியது: வெப்பச்சலனம் மற்றும் தென் உத்தரப்பிரதேசத்தில் மத்திய பகுதிகளிலிருந்து உள்தமிழகம் வரை காணப்படும் மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தில் ஒரிரு இடங்களில்ஞாயிற்றுக்கிழமை(மார்ச்8)லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னையில் வானம் பொதுவாக மேகமூட்டமாக இருக்கும் என்றார் அவர்.

மழை அளவுஃ சனிக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி தேனி மாவட்டம் மஞ்சளாறுவில் 40 மி.மீ., பெரியகுளத்தில் 30 மி.மீ. திருச்சிராப்பள்ளியில் புலிவலம், சோத்து பாறையில் தலா 20 மி.மீ., கோயம்புத்தூர் மாவட்டம் ஆழியார், திருப்பூர், ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானையில் தலா 10 மி.மீ. மழை பதிவானது.


ஓமனிலிருந்து வந்த தமிழருக்கு கரோனா

ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையின் தனி பிரிவில் சிகிச்சை

சென்னை, மார்ச் 7: தமிழகத்தில் முதன்முறையாக ஆண் ஒருவருக்கு கரோனா வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. அவருக்கு சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள்ள தனிப் பிரிவில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக சுகாதாரத் துறை அமைச்சர் சி.விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.

சீனாவில் உருவான கரோனா வைரஸ் தொற்று உலகம் முழுவதும் மிக வேகமாகப் பரவி வருகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை, இது வரை 34 பேர் கரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்நிலையில், தமிழகத்தில் முதல்முறையாக தமிழகத்தைச் சேர்ந்த ஆண் ஒருவருக்கு கரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு சனிக்கிழமை அறிவித்தது.

முதல் கரோனா பாதிப்புஃ இது குறித்து சுகாதாரத் துறை வட்டாரங்கள் கூறுகையில் 'காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 45 வயது டைய ஆண் ஒருவர், கடந்த 12 ஆண்டுகளாக ஓமன் நாட்டில் தங்கியிருந்து, பொறியியல் தொடர்பான பணி செய்து வருகிறார். தற்போது, காஞ்சிபுரத்தில் வீடு கட்டி வருவதால், அடிக்கடி தமிழகத்துக்கு வந்து செல்வது வழக்கம். இந்நிலையில், கடந்த பிப்ரவரி மாதம் 27-ஆம் தேதி ஓமனில் இருந்து அவர் தமிழகத்துக்கு வந்துள்ளார்.



இதைத் தொடர்ந்த சில நாள்களில் அவருக்கு சளி, காய்ச்சல், இருமல் தொந்தரவு இருந்துள்ளது. இதையடுத்து, காஞ்சிபுரத்தில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார். ஆனாலும், அவருக்கு காய்ச்சல், சளி சரியாகவில்லை.

இதையடுத்து, கடந்த மார்ச் 1-ஆம் தேதி, சென்னையில் உள்ள அரசு ஸ்டான்லி மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் அனுமதிக்கப்பட்ட அவரைப் பரிசோதித்ததில், அவருக்கு கரோனா வைரஸ் பாதிப்புக்கான அறிகுறிகள் கண்டறியப்பட்டது. இதனால், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள்ள கரோனா சிகிச்சைக்கான தனிப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவரது ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, கிண்டியில் உள்ள கிங்ஸ் ஆய்வகத்தில் பரிசோதித்ததில், அவருக்கு கரோனா பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது. இருப்பினும், அவரது ரத்த மாதிரிகள் மகாராஷ்டிர மாநிலம் புணேவில் உள்ள உயர் ஆய்வகத்துக்கு மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டதில், அங்கும் அவருக்கு கரோனா உறுதி சனிக்கிழமை (மார்ச் 7) செய்யப்பட்டது.

கரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டவருக்கு சர்க்கரை நோய் உள்ளதால், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் உள்ள தனி வார்டில் சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தற்போது, அவரது உடல் நிலை சீராக உள்ளது. அவர் பூரணமாக குணமடையும் வரை தீவிர சிகிச்சை அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உறவினர்களுக்கும் பரிசோதனைஃ கரோனாவால் பாதிக்கப்பட்டவர் தமிழகத்துக்கு வந்த பிறகு சந்தித்த அவரது உறவினர்கள், நண்பர்கள் என அனைவரையும் கண்டறிந்து அவர்கள் அனைவரையும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த சுகாதாரத் துறை அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். மேலும், கரோனா வைரஸ் தொடர்பாக கிண்டியில் உள்ள கிங்ஸ் ஆய்வகத்தில் 55 பேரின் ரத்த மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. அதில், ஒருவருக்கு மட்டுமே கரோனா பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அச்சமடைய வேண்டாம்ஃ இது குறித்து சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கரின் சுட்டுரைப் பதிவில், 'தமிழ்நாடு சுகாதாரத் துறை சார்பில் கரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மாவட்டவாரிய தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த சூழ்நிலையை எதிர்கொள்வதற்கான அனைத்து வசதிகளும் தமிழக அரசிடம் உள்ளது. மக்கள் அச்சமடைய வேண்டாம்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.



க.அன்பழகன் மறைவு: திமுகவினர் அஞ்சலி, ஊர்வலம்

வாழப்பாடி, மார்ச் 7: தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் க.அன்பழகன் மறைவையொட்டி, பல்வேறு பகுதிகளில் தி.மு.க. சார்பில் அமைதி ஊர்வலம் மற்றும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வாழப்பாடி ஒன்றியச் செயலர் சக்கரவர்த்தி தலைமையில், வாழப்பாடி அக்ரஹாரத்தில் இருந்து மன்னாயக்கன்பட்டி பிரிவு சாலை அருகிலுள்ள கிழக்கு மாவட்ட அலுவலகத்துக்கு அமைதி ஊர்வலம் சென்ற தி.மு.க.வினர், அன்பழகன் திருவுருவப் படத்துக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். வாழப்பாடி மற்றும் பேளூர் பேருந்து நிலையப் பகுதிகளிலும் அன்பழகன் திருவுருவப் படத்துக்கு கட்சி நிர்வாகிகளும், தொண்டர்களும் அஞ்சலி செலுத்தினர். வாழப்பாடி நகரச் செயலர் செல்வம், பேளூர் நகரச் செயலர் ராமமூர்த்தி மற்றும் நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்துகொண்டனர்.

தம்மம்பட்டியில்...

தம்மம்பட்டி, செந்தாரப்பட்டி, கெங்கவல்லி, தெடாவூர் ஆகிய பேரூராட்சிப் பகுதிகளில் நகரச் செயலர்கள் தலைமையிலும், வாழக்கோம்பை, கொண்டயம்பள்ளி, ஒதியத்தூர், கூடமலை, மூலப்புதூர் உள்ளிட்ட ஊராட்சிப் பகுதிகளில் ஊராட்சி திமுக செயலர்கள் தலைமையிலும் திமுகவினர் க.அன்பழகனின் படத்துக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இதில் நகர, ஒன்றிய, கிராம நிர்வாகிகள் பங்கேற்றனர்.



வாழப்பாடியில் தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் க.அன்பழகன் திருவுருவப் படத்துக்கு அஞ்சலி செலுத்திய தி.மு.க.வினர்.

ஆட்டையாம்பட்டியில்...

இளம்பிள்ளை பேரூர் திமுக சார்பில், க.அன்பழகன் திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் வீரபாண்டி ஒன்றிய அவைத் தலைவர் கே.பி.சீனிவாசன், இளம்பிள்ளை பேரூராட்சி முன்னாள் தலைவர்கள், பேரூராட்சி முன்னாள் துணைத் தலைவர் துரை மற்றும் கட்சி நிர்வாகிகள் மற்றும் கட்சியின் முன்னோடிகள், கட்சித் தொண்டர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

ஆத்தூரில்...

ஆத்தூர் நகர திமுக சார்பில் க.அன்பழகன் திருஉருவப் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நகரச் செயலர் கே.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகர துணை செயலர்கள் ஏ.ஜி.ராமச்சந்திரன், ஜெ.காசியம்மாள், மாவட்ட இலக்கிய அணி செயலர் முல்லை பன்னீர்செல்வம், பொருளாளர் ஜி.ராஜேந்திரன், மாவட்டப் பிரதிநிதி மாணிக்கம், முன்னாள் நகர மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதே போல் நரசிங்கபுரத்தில் நகரச் செயலர் என்.பி.வேல்முருகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் துணை செயலர் எஸ்.மனோகரன், பொருளாளர் ரமேஷ், பாண்டியன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். ஆத்தூர் ஒன்றியக் கழகத்தின் சார்பில் ஒன்றியச் செயலர் வே.செழியன் தலைமையில் அன்பழகன் திருஉருவப் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தலைவாசலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒன்றியப் பொறுப்பாளர் சாத்தப்பாடி மணி (எ) பழனிசாமி தலைமையில் அன்பழகன் திருஉருவப் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

மகளிர் தின விழா கொண்டாட்டம்

வாழப்பாடி, மார்ச் 7: வாழப்பாடி ஜே.சி.ஐ. மெட்ரோ மற்றும் நெஸ்ட் அறக்கட்டளை சார்பில், முத்தம்பட்டி தனியார் மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் சர்வதேச மகளிர் தின விழா சனிக்கிழமை கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு, கல்லூரி முதல்வர் பிரகாஷ் தலைமை வகித்தார். தமிழ்த் துறை தலைவர் கௌசல்யா வரவேற்றார். நெஸ்ட் அறக்கட்டளை இயக்குநர்கள் ஜவஹர், கலைச்செல்வி, ஜே.சி.ஐ. நிர்வாகிகள் விஜிபிரியா சங்கீதா ஆகியோர் பல்கலைக்கழகத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவியருக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினர்.

ஜே.சி.ஐ. சார்பில் சுபாஷ், கவிஞர் மன்னன் ஆகியோர் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த பெண்கள் குறித்து மாணவியருக்கு எடுத்துரைத்து, தன்னம்பிக்கை பயிற்சி அளித்தனர். மாணவியர் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. மூன்றாமாண்டு மாணவி இலக்கியா நன்றி கூறினார்.

தம்மம்பட்டியில்...

கெங்கவல்லி அருகே கடம்பூர் அரசு தொடக்கப் பள்ளியில், சர்வதேச மகளிர் தினவிழா சனிக்கிழமை நடைபெற்றது.

தலைமையாசிரியர் செல்வம் தலைமை வகித்தார். பெண்கள் தினம் பற்றி மீனாம்பிகா பேசினார். பி.டி.ஏ. பெண் நிர்வாகிகள், எஸ்.எம்.சி. பெண் உறுப்பினர்கள் மகளிர் தினம் பற்றி பேசினர். அனைவருக்கும் பள்ளியின் சார்பில் பரிசுகள் வழங்கியும், பொன்னாடை போர்த்தியும் கௌரவிக்கப்பட்டனர்.

நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் கருத்தரங்கம்



சேலம் நியூரோ பவுண்டேஷன் மருத்துவமனை சார்பில், தனியார் ஹோட்டலில் சனிக்கிழமை நடைபெற்ற நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் கருத்தரங்கில் பேசுகிறார் மருத்துவமனை இயக்குநர் டாக்டர் நடராஜன்.

சேலம், மார்ச் 7: சேலம் நியூரோ பவுண்டேஷன் மருத்துவமனை சார்பில், நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் கருத்தரங்கம் சனிக்கிழமை தொடங்கியது.

சேலம் தனியார் ஹோட்டலில் தொடங்கிய கருத்தரங்கில், கொல்கத்தாவைச் சேர்ந்த பிரபல நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் ஆர்.என்.பட்டாச்சார்யா மற்றும் சென்னை மருத்துவக் கல்லூரி நரம்பியல் சிகிச்சை மைய இயக்குநர் ஏ.திருவள்ளுவன் ஆகியோர் கலந்துகொண்டு பேசினர்.

நியூரோ பவுண்டஷேன் மருத்துவமனை மேலாண் இயக்குநர் மருத்துவர் ஆர்.நடராஜன் தலைமையில் கருத்தரங்க நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. முதல் நாள் நிகழ்ச்சியில் நரம்பியல் மருத்துவ நிபுணர்களின் விரிவுரையோடு, நேரலையாக மூளை அறுவை சிகிச்சை ஒளிபரப்பப்பட்டது. இதில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் பங்கேற்றனர்.

இரண்டாம் நாளான ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சியில், தமிழக அரசின் கூடுதல் தலைமைச் செயலர் வெ.இறையன்பு பங்கேற்று பேசுகிறார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மருத்துவர் வி.சுரேஷ்குமார் தலைமையிலான குழு செய்து வருகிறது.

கொலை வழக்கில் தொடர்புடைய இருவர் குண்டர் தடுப்புச் சட்டத்தில் சிறையிலடைப்பு

சேலம், மார்ச் 7: சேலத்தில் கொலை மற்றும் கொலை முயற்சி வழக்கில் தொடர்புடைய இருவரை போலீஸார் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தில் சிறையில் அடைத்தனர்.

சேலம் சீலநாயக்கன்பட்டியைச் சேர்ந்த க.அருண்குமார் (எ) அருண் (27), தனது கூட்டாளியான செவ்வாய்ப்பேட்டையைச் சேர்ந்த மோ.குணசேகரன் (எ) கெத்தை சேகருடன் (35) சேர்ந்து கடந்த பிப். 5–ஆம் தேதி எஸ்.ஆர்.பேட்டை பகுதியில் குணசேகரனின் உறவினரான சஞ்சீவிராயன்பேட்டையைச் சேர்ந்த கார்த்திக்கை முன் விரோதம் காரணமாக தகாத வார்த்தைகளால் பேசி, கண்ணாடி டம்ளரால் தலையில் தாக்கியுள்ளனர். இதைக் கண்ட அப்பகுதியினர் அவர்களை பிடிக்க முயன்ற போது, பொதுமக்களிடம் கத்தியைக் காட்டி மிரட்டியுள்ளனர். புகாரின் பேரில் அன்னதானப்பட்டி போலீஸார் வழக்குப் பதிந்து அருண்குமார், குணசேகரன் ஆகிய இருவரையும் கைது செய்து விசாரணை மேற்கொண்டனர். இதில் அருண்குமார் மீது கடந்த 2018 மே மாதம் சங்ககிரி வைகுந்தம் பகுதியில் வசித்த சின்னுசாமியை கொலை செய்த காரணத்துக்காக சங்ககிரி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் வெளியே வந்த அருண்குமார், கடந்த 2018 அக்டோபர் மாதம் தாதகாப்பட்டி கேட் அருகே இளநீர் வியாபாரம் செய்து வந்த சிவா என்பவரிடம் கத்தியைக் காட்டி பணம் கேட்டு மிரட்டியுள்ளார். இதுகுறித்த புகாரின்பேரில் அன்னதானப்பட்டி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டனர். மேலும், குணசேகரன் தொடர் குற்றங்களில் ஈடுபட்டதற்காக ஏற்கெனவே கடந்த 2013, 2016, 2017–ஆம் ஆண்டுகளில் குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் அருண்குமார் மற்றும் குணசேகரன் ஆகியோர் தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபட்டு பொதுமக்களின் பொது அமைதியைக் கெடுக்கும் வகையில் நடந்துகொண்டமையால், சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரிவு காவல் துணை ஆணையர் பி.தங்கதுரையின் பரிந்துரைப்படி, சேலம் மாநகர காவல் ஆணையர் த.செந்தில் குமார், அவர்களை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில்வைக்கவெள்ளிக்கிழமை உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து அருண்குமார் மற்றும் குணசேகரன் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இன்றைய நிகழ்ச்சிகள்

சேலம்

உலக மகளிர் தின விழா–சிறப்பு கருத்தரங்கம் மற்றும் கவியரங்கம்: சேலம் மாவட்ட நூலக அலுவலர் அர.கோகிலவாணி பங்கேற்பு, மாவட்ட மைய நூலகம், அரசு கலைக் கல்லூரி வளாகம், சேலம், காலை 10 மணி.

மனவளக் கலை யோகா பயிற்சி வகுப்பு: அறிவுத் திருக்கோயில் யோகா மற்றும் ஆன்மிக கல்வி மையம், சொர்ணபுரி, சேலம், காலை 10 மணி.

சிறப்பு சொற்பொழிவு: ஆரோக்கிய கலை என்ற தலைப்பில் பேச்சாளர் ஆர்.சுரேஷ்குமார் சொற்பொழிவு, ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் ஆஸ்ரமம், ராமகிருஷ்ண சாலை, சேலம், மாலை 5.30 மணி.

பட்டமளிப்பு விழா: அரசு பொறியியல் கல்லூரி, கருப்பூர், சேலம், காலை 10 மணி.

சேலம் அரசு பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழா: ஏரோ ஸ்பேஸ் முதன்மை செயல் அதிகாரி ரா.சுந்தரம், கல்லூரி முதல்வர் ஜி.விமலா ரோஸ்லின் பங்கேற்பு, முத்தையன் கலையரங்கம், காலை 10 மணி.

சங்ககிரி

சங்ககிரி ரோட்டரி சங்கம், இன்னர்வீல் சங்கம் இணைந்து நடத்தும் தேசிய மகளிர் தின விழா: தலைமை–ரோட்டரி சங்கத் தலைவர் எஸ்.துரைசாமி, இன்னர்வீல் சங்கத் தலைவி வசந்தி முரளிதரன், பங்கேற்பு–நீதிபதிகள் சங்ககிரி எம்.மேகலாமைதிலி, எம்.பாக்கியம், எம்.உமாமகேஸ்வரி, டி.சுந்தர்ராஜன், எடப்பாடி எம்.மாலதி, பவானி, ஊராட்சிக்கோட்டை மின்வாரிய செயற்பொறியாளர் ஹெலினாகிறிஸ்டோபர். சங்ககிரி ரோட்டரி சங்க வளாகம், மாலை 6 மணி.

சங்ககிரி மலைக்கோட்டை உழவாரப்பணி: தண்ணீர் தண்ணீர் அமைப்பு சார்பில் சங்ககிரி மலைக்கோட்டையில் உழவாரப் பணிகள் தொடக்கம், தலைமை–தலைவர் சண்முகம், பொருளாளர் பாலாஜி, காலை 6.30 மணி.

பொங்கல் விழா தினசரி சிறப்பு பூஜைகள்: சங்ககிரி மலைக்கோட்டை மாரியம்மன், சங்ககிரி வி.என்.பாளையம் ஸ்ரீ சக்தி மாரியம்மன், வாணியர் காலனி அருள்மிகு அல்லிகுண்டம் மாரியம்மன் கோயில்களில் பொங்கல் திருவிழாவை யொட்டி சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேகம், பூஜைகள், மாலை 6 மணி.

இஸ்கான் கோயிலில் நாளை சைதன்ய மகாபிரபு அவதார திருநாள் விழா

சேலம், மார்ச் 7: அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம் (இஸ்கான்) சார்பில், சைதன்ய மகா பிரபுவின் அவதார திருநாள் மார்ச் 9–ஆம் தேதி விமரிசையாக நடைபெற உள்ளது.

சேலம் கருப்பூர் இஸ்கான் கோயிலில் மார்ச் 9–ஆம் தேதி மாலை 6.30 மணிக்கு பஜனை, இரவு 7 மணிக்கு அபிஷேகம், இரவு 7.30 மணிக்கு கௌரலீலா என்ற தலைப்பில் உபன்யாசம் நடைபெற உள்ளது. இரவு 8.30 மணிக்கு ஆரத்தியும், தொடர்ந்து பிரசாத விருந்து ஆகியவை நடைபெற உள்ளன.

அரசுப் பேருந்துகளை சேதப்படுத்தி மோதலில் ஈடுபட்ட 24 பேர் கைது

ஓமலூர், மார்ச் 7: தாரமங்கலம் அருகே அரசுப் பேருந்துகளை சேதப்படுத்தி மோதலில் ஈடுபட்ட 24 பேரை தாரமங்கலம் போலீஸார் சனிக்கிழமை கைது செய்தனர்.

தாரமங்கலம் ஒன்றியத்தில் உள்ள துட்டம்பட்டி கிராமம், கோனேரிவளவு பகுதியைச் சேர்ந்த செந்தில், கூலி தொழிலாளி. இவருக்கு 2 மகன்கள். 3–ஆம் வகுப்பு படிக்கும் இவரது மூத்த மகன் கதிர்வேலை பள்ளியில் விடுவதற்காக இருசக்கர வாகனத்தில் சென்ற போது, பின்னால் வந்த லாரி மோதியதில் சம்பவ இடத்திலேயே சிறுவன் கதிர்வேல் உயிரிழந்தார்.

இந்த விபத்தை அறிந்த அப் பகுதி பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து, இளைஞர்கள் சிலர் விபத்தை ஏற்படுத்திய லாரியை அடித்து உடைத்து சேதப்படுத்தினர். மேலும், லாரியில் இருந்த பல லட்ச ரூபாய் மதிப்புள்ள பால் உணவுப் பொருள்களை உடைத்து ஏரியில் கொட்டினர். மேலும், லாரியின் டீசல் டேங்கை உடைத்து தீ வைக்க முயன்றனர்.

மேலும், அந்த வழியாக வந்த இரண்டு அரசுப் பேருந்துக்களை அடித்து உடைத்து நொறுக்கினர். தகவல் அறிந்து அங்கே வந்த ஓமலூர் டி.எஸ்.பி. பாஸ்கரன் மற்றும் போலீஸார் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால், இளைஞர்கள் பலரும் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டனர். புகாரின் பேரில், ஐந்து பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து தாரமங்கலம் போலீஸார் விசாரணை நடத்தினர்.

அதைத் தொடர்ந்து பிரச்னையில் ஈடுபட்ட 24 பேரை போலீஸார் கைது செய்து, ஓமலூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சேலம் மத்திய சிறையில் அடைத்தனர். மேலும், இந்த வழக்கில் முக்கியக் குற்றவாளிகளான 20–க்கும் மேற்பட்டோரை தேடி வருகின்றனர்.

இளம்பெண் தூக்கிட்டுத் தற்கொலை

தம்மம்பட்டி, மார்ச் 7: கெங்கவல்லி அருகே இளம்பெண் சனிக்கிழமை அதிகாலை தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

கெங்கவல்லி அருகே வீரகனூரையடுத்த கிழக்குராஜபாளையத்தைச் சேர்ந்தவர் மனோகரன். இவரது மனைவி லதா (32). இவர்களிருவரும் திருப்பூரிலுள்ள பனியன் நிறுவனத்தில் வேலைபார்த்து வருகின்றனர். இவர்களது மகன்கள் சிவா, சுரேந்தர் ஆகிய இருவரும் பெரம்பலூர் மாவட்டம், பீலூரில் உள்ள பாட்டி வீட்டில் தங்கி படித்து வருகின்றனர்.

இந்நிலையில், மனோகரன், லதா ஆகிய இருவரும் கடந்த மாதம் உறவினர் வீட்டு காதுகுத்து விழாவுக்கு கிழக்குராஜபாளையம் வந்துள்ளனர். சில தினங்களில் மனோகரன் திருப்பூர் சென்றுவிட்ட நிலையில், லதா மட்டும், கிழக்குராஜபாளையத்திலேயே இருந்து வந்துள்ளார். இந்நிலையில், சனிக்கிழமை அதிகாலை லதா வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

புகாரின் பேரில், லதாவின் உடலை மீட்ட வீரகனூர் போலீஸார், வழக்குப் பதிந்து லதாவின் தற்கொலைக்கு காரணம் குறித்து விசாரித்து வருகின்றனர்.

बैंक ऑफ़ बड़ौदा Bank of Baroda

சேலம் சிட்டி கிளை
எண்.221, K.J.பிளாசா,
மெய்யனூர் மெயின் ரோடு,
சேலம் – 636004

வரைவு கேட்பு அறிவிப்பின் சுருக்கப் படிவம்

கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர் தவணை செலுத்த தவறி விட்ட காரணத்தால் வங்கி கீழே குறிப்பிட்டுள்ள அடமானத்திலுள்ள மோட்டார் வாகனத்தை கடன்தாரர்களால் தன்னுடன் மேற்கொள்ளப்பட்ட அடமான ஒப்பந்தத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் மீளக்கைப்பற்றி/பறிமுதல் செய்து உள்ளது. மேலும் இந்த வாகனம் **"எங்குள்ளதோ அங்கு" "என்ன உள்ளதோ அது"** என்ற அடிப்படையில் வாகன ஏல அறிவிப்பில் விவரிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் நிபந்தனைகளுக்குமிணங்க ஏல விற்பனை செய்யப்படுகிறது.

வ. எண்.	கடன்தாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர் பெயர்	நிலுவைத் தொகை 29.02.2020 தேதி அன்று	தயாரிப்பு/மாடல் மற்றும் பதிவு எண்.	RTO வாகனப் பதிவு எண்.	ரிவர்வ் விலை/முன் வைப்புத் தொகை
1.	**A. லூர்துசாமி,** த/பெ.அருள்நாதம், எண்.298, கொரகுட்டை, வேப்பிலை, ஓமலூர் தாலூகா, சேலம் – 636351	**ரூ.4,18,153.00**	Renault KWID RXT 1.0 climber	TN/ 30 /TMP 2018/2829	ரூ. 2,25,000/- ரூ. 22,500/-

விற்பனை விபரம் :

ஏலம் நடைபெறும் இடம் : சேலம், ஏலம் நடைபெறும் நாள் : 24.03.2020 (செவ்வாய்க்கிழமை) நண்பகல் 12.00 மணிக்கு, வாகனத்தைப் பார்வையிடும் நாள்/இடம் : 17.03.2020 (செவ்வய்க்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 வரை, பேங்க் ஆப் பரோடா, சேலம் சிட்டி கிளை, எண்.221, K.J.பிளாசா, மெய்யனூர் மெயின் ரோடு, சேலம் – 636004. ஒப்பந்தப்புள்ளி மற்றும் முன்வைப்பு தொகை செலுத்துவதற்கான இறுதி நாள் : 23.03.2020 (திங்கட்கிழமை).

விருப்பமுள்ள ஏலதாரர்கள் **ரூ.22,500/–**க்கான **"பேங்க் ஆப் பரோடா, சேலம் சிட்டி கிளை"** என்ற பெயரில் ஒவ்வொரு வாகனத்துக்கும் தனித்தனியே எடுக்கப்பட்ட வங்கி வரைவை ஏலத்தில் கலந்து கொள்ளும் முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். ஏலத்தில் வென்றவர்கள் ஏல தினத்தன்று ஏலம் கோரிய தொகையில் 25 சதவீதத்தையும், மீதத் தொகையை அன்றிலிருந்து 7 நாட்களுக்குள்ளும் செலுத்திவிட வேண்டும். வங்கி காரணம் ஏதும் காட்டாது எந்த ஒரு ஏலக் குறிப்பினையும் ஏற்கவோ / நிராகரிக்கவோ, அல்லது ஏலத்தைத் தள்ளிவைக்கவோ, ரத்து செய்யவோ உரிமை உடையதெனத் தெரிவிக்கலாகிறது. வாகன ஏல விபரமும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவமும் www.bankofbaroda.co.in என்ற வங்கியின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் வங்கிக் கிளையிலும் கிடைக்கும். தயவு செய்து அதை சரிபார்த்துக் கொள்ளவும். மேலும் விவரங்களுக்கு **தொலைபேசி எண். 0427–2334713/14, செல்.9489205991** என்ற கிளை எண்களை தொடர்பு கொள்ளவும்.

இடம் : சேலம்
தேதி : 07.03.2020 **கிளை மேலாளர்**

லட்சுமி விலாஸ் வங்கி

பிராந்திய அலுவலகம் : பிளாட்டினம் ஜுப்லி பில்டிங், எண். 68, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்-641 001.

டெண்டர் மற்றும் வாகனங்கள் ஏல அறிவிப்பு

லட்சுமி விலாஸ் வங்கி, கீழ்கண்ட கிளைகளின் கடன்பெற்ற கடன்தாரர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய வாகனங்கள் கடனை திரும்ப செலுத்தத் தவறியதால் அவர்களின் வாகனங்கள் வங்கியால் சுவாதீனமாக்கப்பட்டு கீழ்கண்ட விபரங்களுடன் தற்போது உள்ள நிலையில் உள்ளது உள்ளபடி (As is What is Basis) விற்பனை செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஏலம் நடைபெறும் இடம்	**லட்சுமி விலாஸ் வங்கி சுவர்ணபுரி கிளை,** 49A, அத்வைத ஆஸ்ரம் ரோடு, சேலம்–636004.
வாகனத்தைப் பார்வையிடும் நாள், நேரம் & இடம்	**09–03–2020 தேதி முதல் 11–03–2020 தேதிவரை, காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை.** தொடர்புக்கு : 99656 28999.
டெண்டர் ஏலம் விண்ணப்ப படிவத்தை சமர்பிக்க கடைசி நாள் / அஞ்சல்	12.03.2020, மாலை 4.00 மணி வரை.
ஏலம் நடைபெறும் நாள் & நேரம்	13.03.2020, காலை 11.00 மணி

வ. எண்	கிளை பெயர்	கடன்தாரர் பெயர்	கடன் எண்.	வாகன வகை	மாடல்	பதிவு எண்.	நிர்ணயத் தொகை	முன்வைப்பு தொகை (10%)
1.	மேச்சேரி	S.தீபா	0468745000000498	AL - 3118 BSIV	2017	TN 93 3583	ரூ.14,00,000.00	ரூ.1,40,000.00
2.	செவ்வாய் பேட்டை	K. தேவராஜன்	0664659000000153	EICHER 2016 H HSD BS III - TANKER	2016	TN 30 BF 5897	ரூ.5,65,000.00	ரூ.56,500.00
3.	செவ்வாய் பேட்டை	K. தேவராஜன்	0664659000000153	EICHER 2016 H HSD BS III - TANKER	2016	TN 30 BF 5845	ரூ.5,65,000.00	ரூ.56,500.00

முக்கியமான விதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட தொகையில் 10 சதவீதத்திற்குண்டான முன்வைப்பு தொகையை (EMD) ஏலம் நடைபெறுவதற்கு முன்பாக தி லட்சுமி விலாஸ் வங்கி அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி பெறும் வண்ணம், சேலத்தில் செலுத்தத்தக்க வகையில் கேட்பு வரைவோலையை டெண்டர் விண்ணப்பத்துடன் செலுத்த வேண்டும்.
2. ஏலத்தில் அதிக தொகை கூறி இறுதியாக வெற்றி பெற்ற ஏலதாரர் ஏலத்தொகையில் முன்பணம் உட்பட 25 சதவீதத் தொகையினை உடனடியாக டிமாண்ட் டிராப்ட் மூலமோ / பணமாகவோ (பான் கார்டு உடன்) அன்றே செலுத்த வேண்டும். மீதமுள்ள 75 சதவீதத் தொகையினை 19.03.2020 ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டும். அவ்வாறு தொகையினை மேற்கண்ட முறைப்படி செலுத்தத் தவறும்பட்சத்தில் ஏலம் ரத்து செய்யப்படும். அவ்வாறு ரத்து செய்யப்படும் பட்சத்தில் வெற்றி பெற்ற ஏலதாரர் செலுத்திய முன்வைப்புத் தொகைதிருப்பித் தரப்பட மாட்டாது.
3. மேற்கண்ட ஏல நிர்ணய தொகைக்கு ஏற்ப தற்போது நடைமுறையில் இருக்கும் உரிய GST வரியையும், ஏலத்தில் வெற்றிபெறும் ஏலதாரர்களே செலுத்த வேண்டும். மேலும் வாகன பார்க்கிங் கட்டணத்தையும் (Parking Charges) வெற்றி பெறுபவர்களே செலுத்த வேண்டும்.
4. ஏலத்தை தள்ளி வைக்கவோ அல்லது ரத்து செய்யவோ அல்லது எந்த காரணமில்லாமல் விதிகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றம் செய்யவோ அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.
5. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் தகவல்களுக்கு உட்பட்டு வாகனத்தில் எந்த வில்லங்கங்களும் இல்லை, மேலும் அறியப்படாத மற்றும் எதிர்காலத்தில் ஏதேனும் வில்லங்கம் நேரிட்டால் அதற்கு தி லட்சுமி விலாஸ் வங்கி பொறுப்பேற்காது. மேலும் பிற விபரங்கள், ஏல விதிகள் மற்றும் நிபந்தனைகள் அறிய மேற்கண்ட எங்கள் அலுவலக முகவரியை தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
லட்சுமி விலாஸ் வங்கி
பிராந்திய அலுவலகம், கோயமுத்தூர்

இடம் : கோயமுத்தூர்
தேதி : 07.03.2020

திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் லிட்.
(டி.யு.சி.எஸ்.லிட்)
எண்.:156, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை–600005.
PH: 044-23453401, 23453402, 23453403 | Fax: 044-23453436 | E-mail: tucsltd@gmail.com

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டத்தின் கீழ் (ICDP) திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தின் தி.நகர் இராமேஸ்வரம் ரோடில் சொந்த இடத்தில் அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டுவதற்காக 16.03.2020 அன்று நடைபெற இருந்த ஒப்பந்தப்புள்ளி (Tender) நிர்வாகக் காரணங்களுக்காக இரத்து செய்யப்படுகிறது.

இணைப் பதிவாளர்/
மேலாண்மை இயக்குநர்

செ.ம.தொ.இ/1256/ஒப்பந்தப்புள்ளி/2020

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தேனி மாவட்டம்
ஒப்பந்தப்புள்ளி கோரும் படிவம் எண். 2813/2018/தி9 நாள் : 06.03.2020
ஒப்பந்த படிவம் இனம் வாரியான விலை

தேனி மாவட்டம், தேனி ஊராட்சி ஒன்றியம், சீலையம்பட்டி ஊராட்சி தொகுப்பில் (Cluster) 2018-2019 ஆம் ஆண்டிற்கு National Rurban Mission (NRuM) Phasr III - திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள சாலை மற்றும் வாழ்வாதாரப் பணிகளுக்கான கட்டமைப்பு பணிகள் மற்றும் இயந்திரங்கள் நிறுவுதல் பணிகளுக்கு சிப்பம் வாரியாக மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது
(குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அழைப்பு)

1. ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை www.tntenders.gov.in என்ற இணைய தள முகவரியில் இலவசமாக 09.03.2020 முதல் 23.03.2020 வரையிலான காலத்தில் எடுத்துக் கொள்ளலாம்.
2. நேரம் மற்றும் நாள்

1.	மின் ஒப்பந்தப்படிவம் பதிவிறக்கம் செய்ய கடைசி நாள் மற்றும் நேரம்	23.03.2020 பிற்பகல் 3.00 மணி வரை
2.	மின் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்	23.03.2020 பிற்பகல் 4.00 மணி வரை
3.	மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்	23.03.2020 பிற்பகல் 4.00 மணி

3. இதர விவரங்கள் ஒப்பந்த நமூனாவில் தெரிந்துகொள்ளலாம்

செ.ம.தொ.இ./1258/ஒப்பந்தப்புள்ளி/2020 திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தேனி

MSTC LIMITED
3rd Floor, ISPAT Bhawan, No. 5, Kodambakkam High Road, CHENNAI - 600 034. Mob. : 9499054102 / 9176397264

E-TENDER cum E-AUCTION SALE

A/c NLCIL, Neyveli EA-41305 on 16/03/2020 Mat: Cond Angles, Channels, Plate Cut Bits, Conveyor Frames, etc. EA-41306 on 16/03/2020 Mat: Cond Dozer KO-208. EA-41307 on 17/03/2020 Mat: Cond Mukand Crane. A/c NTPL, Tuticorin EA-41338 on 17/03/2020 Mat: Dry Fly Ash Qty: 80000 MT. For details visit website: www.mstcecommerce.com / www.mstcindia.co.in. BIDDERS SHOULD REGULARLY VISIT ABOVE WEBSITES TO KEEP THEMSELVES UPDATED

SOUTH INDIAN Bank

பிராந்திய அலுவலகம் : சுங்கம், திருச்சி ரோடு
கோயமுத்தூர் - 641 018
போன் & ஃபேக்ஸ்: (0422) 2303694, 2302398, 2303618
E-mail : ro1002@sib.co.in

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV-A (காண்க விதி 8(6) ன் நிபந்தனை)

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான ஏல விற்பனை அறிவிப்பு.

தி சௌத் இந்தியன் பேங்க் லிட்., சேலம் லீ பஜார் கிளை, ஸ்ரீ லட்சுமி காம்ப்ளக்ஸ், 4/33, ஓமலூர் மெயின் ரோடு, ஸ்வர்ணபுரி அஞ்சல், சேலம் லீ பஜார், சேலம் மாவட்டம், தமிழ்நாடு – 636004 (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்)–ன் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய **29.02.2020** தேதி வரையான தொகை **ரூ.17,46,95,971/– (ரூபாய் பதினேழு கோடியே நாற்பத்தாறு லட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஒன்று மட்டும்)** தொகையை கடன்தாரர்கள் **1. M/s.வீனஸ் P.P.V. ஸ்பின்னிங் மில்ஸ் பி.லிட்.,** A4 – யூனிட், சேலம் தொழில் கூட்டுறவு எஸ்டேட் லிட், உடையாம்பட்டி, சேலம் – 636140, மற்றும் **உத்தரவாதமளித்தவர்கள்/இயக்குநர்கள் – 2.திரு.V.சேகர்,** த/பெ.லேட். P.P. வரதராஜு, **M/s. வீனஸ் P.P.V. ஸ்பின்னிங் மில்ஸ் பி.லிட்., – ன் நிர்வாக இயக்குனர்,** எண்.5-A, வைத்தி வீதி, செவ்வாய் பேட்டை, சேலம் – 636002, மற்றும் **3.திரு.K.துரைராஜ்,** த/பெ. லேட்.கிருஷ்ணசாமி, **M/s.வீனஸ் P.P.V. ஸ்பின்னிங் மில்ஸ் பி.லிட்.,–ன் இயக்குனர்,** எண்.49, வாசகசாலை வீதி, செவ்வாய்பேட்டை, சேலம் – 636002 என்பவரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட **24.01.2019** தேதியில் தி சௌத் இந்தியன் பேங்க் லிட்., பிராந்திய அலுவலகம், திருச்சி ரோடு, சுங்கம், கோயமுத்தூர் – 18 (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் அடையாள சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை **26.03.2020** தேதியன்று விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர் (கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு எப்படி உள்ளதோ அங்கு அப்படி அதே நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை **ரூ.5,35,00,000/– (ரூபாய் ஐந்து கோடியே முப்பத்து ஐந்து லட்சம் மட்டும்)** மற்றும் முன் வைப்புத் தொகை (EMD) **ரூ.53,50,000/– (ரூபாய் ஐம்பத்து மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)** என்பதாகும்.

அசையாச் சொத்து விபரம்

தமிழ்நாடு, சேலம் மாவட்டம், இணை 3 சேலம் (மேற்கு) சார் பதிவு மாவட்டம், சேலம் தாலுகா, பெரியேரி கிராமம், பிளாக் எண்.31, வார்டு AC, டவுன் சர்வே எண்.44/2B1, புதிய டவுன் சர்வே எண்.2, 3 மற்றும் 4, இதிலுள்ள 18 சென்ட் நிலம், வழக்கமான வழித்தட உரிமைகளுடன், அங்குள்ள அனைத்து அபிவிருத்திகளுடன், அதன் பாத்தியதைகள் மற்றும் பயன்களுடன். திரு. V.சேகருக்குச் சொந்தமான இச்சொத்து, இணை–3 சேலம் சார் பதிவு அலுவலகத்து, பகிர்மான ஆவண எண்.219/1977 மற்றும் தானத் தீர்வு ஆவண எண்.502/2014 ல் விவரிக்கப்பட்டுள்ளது. எல்லைகள் விபரம் : கிழக்கு – 14 அடி தென்வடல் பொது வழித்தடம், மேற்கு – சின்னவீரபோயன் மற்றும் கொண்டபோயனுக்குச் சொந்தமான நிலம், வடக்கு – சேலம்–ஓமலூர் மெயின் ரோடு, தெற்கு – V.கோபுவின் பின்னர் நடராஜ செட்டிக்குச் சொந்தமான சொத்து.

விற்பனையின் விரிவான நிபந்தனை விபரங்களுக்கு, சௌத் இந்தியன் பேங்க் லிமிடெட்டின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) இணையதளத்திலுள்ள (www.southindianbank.com) லிங்க்கினைப் பார்வையிடவும்

தேதி: 02.03.2020 அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்
இடம்: கோயமுத்தூர் தி சௌத் இந்தியன் பேங்க் லிட்.

FEDERAL BANK **தி பெடரல் பேங்க் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: ஆல்வாய், கேரளா
LCRD/சென்னை டிவிசன்: முதல் தளம், எண்.57, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, EPF அலுவலகம் அருகில், சென்னை-600014. Ph: 044 - 2813 1373 / 0988

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 and Security Interest (Enforcement) Rules, 2002) கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட **பெடரல் பேங்க் லிமிடெட்,** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம் 13(12) பிரிவு மற்றும் விதி 3-ன்கீழ் **20.11.2019 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட கடன்தாரர்கள்:** 1.Sri.செல்வம்.K, S/o.குப்புசாமி, முகவரி எண்.78/86, மான்குட்டைப்பாளையம், சீதாராம்பாளையம் அஞ்சல், திருசெங்கோடு தாலுகா, நாமக்கல் மாவட்டம்-637209, தமிழ்நாடு மாநிலம். 2.Smt.கவிதா செல்வம், W/o. செல்வம்.K, முகவரி எண்.78/86, மான்குட்டைப்பாளையம், சீதாராம்பாளையம் அஞ்சல், திருசெங்கோடு தாலுகா, நாமக்கல் மாவட்டம்-637209, தமிழ்நாடு மாநிலம் மற்றும் மாற்று முகவரி 132 B, நாடார் தெரு, மான்குட்டைப்பாளையம், சீதாராம்பாளையம் அஞ்சல், திருசெங்கோடு தாலுகா, நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு மாநிலம் ஆகியோர் **Federal Prathyasha** கடன் கணக்கு எண்.**17936600000489**-ன்கீழ் செலுத்த வேண்டிய **02.11.2019** அன்றுள்ளபடி ₹ **4,93,082/-** (ரூபாய் நான்கு லட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து எண்பத்திரெண்டு மட்டும்) (இந்த தொகை 02.11.2019 வரை வட்டியுடன்) மற்றும் 03.11.2019 முதல் திரும்ப செலுத்தும் காலம் வரை மாதாந்திர இருப்பின் மீது ஆண்டிற்கு @ 12.80 % வட்டி மற்றும் @ 2% அபராத வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள் ஆகியவற்றை **அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று அறிவிப்பு அனுப்பப்பட்டது.**

கடன்தாரர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை முழுவதையும் செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பதென்னவென்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், மேற்சொன்ன 8வது விதியின் படியும், **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 07.03.2020 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் உடைமையாக்கி உள்ளார்.**

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின்மீது கடன்தாரர்களின் மீது கவனம் ஈர்க்கப்படுகிறது. (சுடுபெற்ற சொத்து)

இது முதற்கொண்டு கடன்தாரர்களோ அல்லது மற்ற பொதுமக்களோ இந்த சொத்தில் எந்தவிதமான பரிவர்த்தனைகளும் வைத்துக்கொள்ளக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் **அது பெடரல் பேங்க் லிமிடெட்–க்கு வந்து சேர வேண்டிய Federal Prathyasha** கடன் கணக்கு எண்.**17936600000489**-ன்கீழ் செலுத்த வேண்டிய **03.02.2020** அன்றுள்ளபடி ₹ **4,93,756/-** (ரூபாய் நான்கு லட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து எழுநூற்று ஐம்பத்தாறு மட்டும்) (இந்த தொகை 02.02.2020 வரை வட்டியுடன்) மற்றும் 03.02.2020 முதல் திரும்ப செலுத்தும் காலம் வரை மாதாந்திர இருப்பின் மீது ஆண்டிற்கு @ 12.80 % வட்டி மற்றும் @ 2% அபராத வட்டி, கட்டணங்கள், இதர செலவுகளுக்கு கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

அடமானத்தில் உள்ள அசையா சொத்து விவரம்

நாமக்கல் பதிவு மாவட்டம், திருச்செங்கோடு சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.108 (பகுதி), பட்டா படி T.S.எண்.507, TSLR எண்.14, வார்டு எண்.A, ப்ளாக் எண்.14, கதவு எண்.115/2, சீதாராம்பாளையம் கிராமம், திருச்செங்கோடு தாலுகா, நாமக்கல் மாவட்டம் என்னும் முகவரியில் 748 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும், அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 4.8 மீட்டர், தெற்கு பக்கம் 5.2 மீட்டர், வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 14.4 மீட்டர், மேற்கு பக்கம் 13.4 மீட்டர், எல்லைகள்: ஜெயமணி வீட்டிற்கு கிழக்கு, தங்கவேல்-ன் காலி நிலத்திற்கு மேற்கு, கந்தசாமி வீட்டிற்கு வடக்கு, கருவேப்பம்பட்டி மெயின் ரோட்டிற்கு தெற்கு, திருச்செங்கோடு சார்-பதிவு அலுவலகத்தில் 08.02.2010 தேதியிட்ட விற்பனை பத்திர எண்.1147/2010-ல் மேலும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது. சொத்தானது செல்வம்.K பெயரில் உள்ளது.

தி பெடரல் பேங்க் லிமிடெட்
உதவி துணை தலைவர்
தேதி : 07.03.2020 (SARFAESI Act கீழ் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)

சிவாலயங்களில் சனி பிரதோஷ சிறப்பு வழிபாடு

வாழப்பாடி, மார்ச் 7: வாழப்பாடி அருகே பிரசித்தி பெற்ற பேளூர் தான்தோன்றீஸ்வரர் மற்றும் வாழப்பாடி அக்ரஹாரம் காசி விஸ்வநாதர் கோயிலில், சனி பிர தோஷ சிறப்பு பூஜை வழிபாடு நடைபெற்றது.

வாழப்பாடி அருகே பிரசித்தி பெற்ற பேளூர் தான்தோன்றீஸ்வ ரர் கோயிலில் சனி பிரதோஷத்தை யொட்டி, நந்தீஸ்வரருக்கு பழம், பால், தேன், சந்தனம், விபூதி, மலர் அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு பூஜை வழிபாடு நடைபெற் றது. மூலவரான தான்தோன்றீஸ் வரரும், தர்மசம்வர்த்தனி அம்பா ளும் புஷ்ப அலங்காரத்தில் பக்தர் களுக்கு அருள்பாலித்தனர். பக் தர்கள் அனைவருக்கும் அன்னதா னம் வழங்கப்பட்டது.

வாழப்பாடி அக்ரஹாரம் காசி விஸ்வநாதர் கோயிலில் நடை பெற்ற பிரதோஷ வழிபாட்டில், நந்தீஸ்வரர், காசி விஸ்வநாதர், காசிவிசாலாட்சி அம்பாளுக்கும் அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இதில், சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் பெற்றனர். பக் தர்களுக்கு, பிரதோஷ வழிபாட்டு கட்டளைதாரர்கள் வாயிலாக அன்னதானம் வழங்கப்பட்டது.

சங்ககிரியில்... சங்ககிரி மலை யடிவாரத்தில் உள்ள அருள் மிகு சௌந்தரநாயகி உடனமர் சோமேஸ்வரர் கோயிலில் பிர தோஷத்தையொட்டி காலையில் சிறப்பு அபிஷேகங்கள், அலங்கா ரம் செய்யப்பட்டு பூஜைகள் நடை பெற்றன. பின்னர் மாலையில் உற் சவ மூர்த்தி சுவாமிகளுக்கு பால், இளநீர், மஞ்சள், சந்தனம், திரு நீறு உள்ளிட்ட பல்வேறு திரவி யங்களைக் கொண்டு அபிஷேகம், அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பின்னர் பக்தர்கள் நந்தியின் காதில் தங்க ளது வேண்டுதல்களை கூறிச் சென் றனர். கோயில் வளாகத்தில் பெண் கள் மற்றும் குழந்தைகள் கடவுள் பாடல்களை எழுதி சுவாமி பாதத் தில் வைத்து வழிபட்டனர்.



ஆத்தூர் அக்ரஹார வரசித்தி விநாயகர் திருக்கோயிலில் அமைந்துள்ள நந்தி, சிவனுக்கு நடைபெற்ற சிறப்பு அபிஷேகம் மற்றும் ஆராதனை. (நடுவில்) சங்ககிரி மலையடிவாரத்தில் உள்ள அருள்மிகு சௌந்தரநாயகி உடனமர் சோமேஸ்வரர் சுவாமிகளின் உற்சவமூர்த்திகளுக்கு செய்யப்பட்டிருந்த சிறப்பு அலங்காரம். (வலது) பேளூர் தான்தோன்றீஸ்வரர் கோயிலில் சனி பிரதோஷ சிறப்பு பூஜை வழிபாட்டில் பக்தர்களுக்கு அருள்பாலித்த நந்தீஸ்வரர்.

ஆத்தூரில்... ஆத்தூர் வசிஷ்ட நதிக்கரையோரம் அமைந்துள்ள ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆல யம், ஸ்ரீ கைலாச நாதர் திருக்கோ யில், அக்ரஹார வரசித்தி விநாய கர் (சனிமூலப் பிள்ளையார்) ஆல யங்களில் சனி மகா பிரதோஷம் வெகு விமரிசையாக நடைபெற் றது. இதில் நந்தியம்பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்று, பின்னர் நந்தியம்பெருமான் மீது சிவா, பார்வதி ஊர்வலமாக ஆல யத்தை வலம் வந்தனர். இதில் ஏரா ளமான பக்தர்கள் கலந்துகொண் டனர். இதனையடுத்து சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது.

இதே போல், பிரதோஷ காலத் தில் ஆத்தூர் கோட்டை ஸ்ரீ பிர சன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலில் சக்கரத்தாழ்வார், லஷ்மிநரசிம்மர் சந்நிதியில் சிறப்பு அபிஷேகம், ஆராதனை நடை பெற்றது. இதில் ஏராளமான பக் தர்கள் கலந்து கொண்டனர்.

தம்மம்பட்டியில்... தம்மம் பட்டி ஸ்ரீகாசிவிசாலாட்சி உட னுறை காசிவிஸ்வநாதர் திருக்கோ யிலில் பொதுமக்கள் கொண்டு வந்த 108 லி. பால், 50 லி. தயிர், சந் தனம், குங்குமம், அரிசிமாவு, இள நீர், திருமஞ்சனம் ஆகிய பொருள் களால் நந்திக்கு அபிஷேகம் நடை பெற்றது. அதையடுத்து, நந்தீஸ் வரருக்கு வெள்ளிக்கவசம் சாத் தப்பட்டு, மலர்களாலும், அருகம் புற்களாலும் அலங்கரிக்கப்பட் டது. தொடர்ந்து, சிறப்பு பூஜை கள் நடைபெற்று, உற்சவமூர்த்தி கோயிலினுள் வலம் வந்தார். பக் தர்கள் தேவாரம், திருவாசகம் போன்றவற்றிலுள்ள சிவனுக்கு ரிய பாடல்களை பாடியபடி இருந் தனர்.

இதேபோல் செந்தாரப்பட்டி ஸ்ரீதாழைபுரீஸ்வரி உடனுறை தாழைபுரீஸ்வரர் கோயிலிலும், கூடமலை, கெங்கவல்லி, வீரகனூ ரிலுள்ள சிவன் கோயில்களிலும் சனி பிரதோஷ வழிபாடு வெகு சிறப்பாக நடைபெற்றது.

எடப்பாடியில்... எடப்பாடி நஞ் சுண்டேஸ்வரர் கோயில், பூலாம் பட்டி காவிரி கரையில் உள்ள கைலாசநாதர் கோயில், வெள்ள நாயக்கன்பாளையம் பசுபதீஸ்வ ரர் கோயில் மற்றும் வெள்ளாண் டிவலசு முல்லை வன நடராஜர் கோயில் வளாகங்களில் உள்ள நந்தி தேவருக்கு, சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. முன்னதாக, எடப் பாடி நஞ்சுண்டேஸ்வர் கோயில் வளாகத்தில் உள்ள நந்தி தேவ ருக்கு இளநீர், பால், பழங்கள், சந் தனம், பன்னீர் உள்ளிட்ட நறும ணப் பொருள்களால் சிறப்பு அபி ஷேகம் நடைபெற்றது. பின்னர் பக்தர்கள் வழங்கிய பல்வேறு வகையான மலர்களைக் கொண்டு நந்திதேவருக்கு மலர் அலங்காரம் செய்யப்பட்டது.

அரிசி, பலவகை பழங்கள், பால், தேன் உள்ளிட்ட பிரசா தப் பொருள்கள் நந்தி தேவருக்கு படைக்கப்பட்டு, பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட்டது. தொடர்ந்து நந்திதேவரை வழி பாடு செய்த பக்தர்கள், நீண்ட வரிசையில் நின்று நந்திதேவரின் காதில் தங்கள் பிரார்த்தனைகளை கூறி வணங்கி சென்றனர். பூலாம் பட்டி காவிரி கரை கைலாசநாதர் கோயிலில் அன்னதான நிகழ்ச்சி ந டைபெற்றது.

தினமணி HELPLINE
சந்தாதாரர்களே
உங்கள் நாளிதழை பெறுவதில் தாமதம் ஏற்பட்டால் தொடர்பு கொள்ள
04342-268202 / 8807000218
or type CRM DPR to 56161
என்கிற எண்ணுக்கு SMS செய்யவும்

தினமணி
எமது செய்தியாளர்களை தொடர்பு கொள்ள...

சேலம்	92824 38168
ஓமலூர்	94433 93373
மேட்டூர்	94432 23065
ஏற்காடு	94432 01447
சங்ககிரி	94434 14850
ஆத்தூர்	93642 22063
தம்மம்பட்டி	94434 71248
எடப்பாடி	98659 77117
வாழப்பாடி	96009 69118
ஆட்டையாம்பட்டி	94892 94473

அன்னபூரணா பொறியியல் கல்லூரியில் கூடுதல் கட்டமைப்புகள் திறப்பு விழா

ஆட்டையாம்பட்டி, மார்ச் 7: சேலம் சீரகாபாடியில் இயங்கி வரும் அன்னபூரணா பொறியியல் கல்லூரியில் மேம்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் புதிய கட்டடங்களை கல்விக் குழுமத்தின் நிறுவனத் தலைவர் அன்னபூரணி சண்முகசுந்தரம் திறந்து வைத்தார்.

விழாவுக்கு விநாயகா மிஷன்ஸ் கல்விக் குழுமத்தின் இயக்கு நர் ராமசாமி முன்னிலை வகித்தார். திறப்பு விழாவில் கல்லூரி முதல்வர் பேசும் போது, கல்லூரி நிர்வாகத்தினரால் கொண்டு வரப்பட்ட அனைத்து உள்கட்டமைப்பு வசதிகள், ஆய்வகங் கள், டிஜிட்டல் நூலகம் மற்றும் டிஜிட்டல் வகுப்பறைகள் ஆகி யவற்றை பயன்படுத்திக்கொண்டு மாணவர்கள் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைந்து, பெற்றோர்கள் மட்டுமல்லாமல் பயிற்றுவித்த கல்லூரிக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் நற்புகழை பெற்றுத்தர வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

விழாவில் விநாயகா மிஷன்ஸ் பல்கலைக்கழகத்தின் பதிவா ளார் ஜெயகர், ஹோமியோபதி கல்லூரியின் டீன் நாகராஜ், பிசி யோதெரபி கல்லூரியின் முதல்வர் ராஜன்சாமுவேல், நர்சிங் கல் லூரி முதல்வர் செல்வநாயகி, விநாயகா மிஷன்ஸ் ஏவியேஷன் அகாதெமியின் தலைமை பயிற்றுவிப்பாளர் பிரமோத்குமார், கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் அன்பழகன், அன்னபூரணா பொறியியல் கல்லூரியின் துணை முதல்வர் சர வணன், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

குடிநீர் இணைப்பு வழங்கக் கோரி இளம்பெண் தீக்குளிக்க முயற்சி

சேலம், மார்ச் 7: குடிநீர் இணைப்பு வழங்கக் கோரி, சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இளம்பெண் சனிக்கிழமை தீக்குளிக்க முயன்றார்.

சேலம் மாநகராட்சிக்குள்பட்ட தாதம்பட்டியைச் சேர்ந்தவர் செல்லப்பன். இவரது மனைவி ராதா (35). இவர்களுக்கு கங்கா (15), மோனிகா (13) என இரண்டு மகள்கள் உள்ளனர். இந்நிலை யில், ராதா தனது மகள்களுடன் சேலம் மாவட்ட ஆட்சியர் அலு வலகத்துக்கு சனிக்கிழமை வந்தார். பின்னர் திடீரென அவர் கொண்டு வந்த மண்ணெண்ணெய்யை உடலில் ஊற்றி தீக்கு ளிக்க முயன்றார்.

இதைக் கண்ட பாதுகாப்பு போலீஸார் அவரை தடுத்து நிறுத்தி அவரிடம் விசாரணை மேற்கொண்டனர்.

அதில், செல்லப்பன் குடிநீர் இணைப்பு கேட்டு அம்மாப் பேட்டை மண்டல அலுவலகத்தில் மனு அளித்து, அதற்கான தொகையையும் செலுத்தியிருந்தாராம். ஆனால், தற்போது வரை குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லையாம். இந்நிலை யில், அதே பகுதியைச் சேர்ந்த செல்லப்பனின் உறவினர் ஒருவர் குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இதனால், குடிநீர் இணைப்பு வழங்க முடியவில்லை என அதிகா ரிகள் தெரிவித்தனராம்.

இதனால் மனமுடைந்த ராதா தனது வீட்டுக்கு குடிநீர் இணைப்பு வழங்கக் கோரி தனது மகள்களுடன் ஆட்சியர் அலு வலகத்துக்கு வந்து தீக்குளிக்க முயன்றது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து, போலீஸார் அவரை நகர காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று தொடர் விசாரணை மேற்கொண்டு வரு கின்றனர்.

மேட்டூர் ஆர்.எஸ். காளியம்மன் கோயில் தீர்த்தக்குட ஊர்வலம்



மேட்டூர் ஆர்.எஸ். காளியம்மன் கோயில் திருவிழாவையொட்டி, சனிக்கிழமை நடைபெற்ற தீர்த்தக்குட ஊர்வலத்தில் பங்கேற்ற திரளான பக்தர்கள்.

மேட்டூர், மார்ச் 7: மேட்டூர் ஆர்.எஸ். காளியம்மன் கோயில் தீர்த்தக்குட ஊர் வலத்தில் திரளான பக்தர்கள் பங்கேற்ற னர்.

மேட்டூர் ஆர்.எஸ். காளியம்மன் கோயிலில் ஆண்டுதோறும் மாசி தேர்த் திருவிழா சிறப்பாக நடைபெறும். நடப்பாண்டில் மாசி தேர்த் திருவிழா வையொட்டி, பூச்சாட்டும் நிகழ்ச்சி கடந்த 25-ஆம் தேதி நடைபெற்றது. தொடர்ந்து வெள்ளிக்கிழமை கொடி யேற்றமும், சனிக்கிழமை சக்தி அழைத் தல் நிகழ்ச்சியும் நடைபெற்றது. பக்தர் கள் தங்களது நேர்த்திக் கடனை நிறை வேற்ற விரதமிருந்து மேட்டூர் காவிரியி லிருந்து புனித நீர் மற்றும் பால்குடங்க ளுடன் ஊர்வலம் வந்தனர்.

செண்டைமேளம் முழங்க வாண வேடிக்கைகளுடன் நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் ஏராளமானோர் பங்கேற் றனர். இதில் அலங்கரிக்கப்பட்ட தேரில் அம்மன் ஊர்வலம் நடைபெற்றது. புனி தநீரில் அம்மனுக்கு அபிஷேகமும் ஆரா தனையும் நடத்தப்பட்டது. பிற்பகலில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப் பட்டது.

விழா ஏற்பாடுகளை ஆலய செயல் அலுவலர் செந்தில்குமார், ஆய்வாளர் மணிமாலா, திருவிழாக் குழு தலைவர் கே.ரவிக்குமார், செயலர் எல்.என்.டி. பழனிசாமி, பொருளாளர்கள் திப்பம் பட்டி சேகர், மாணிக்கம், நிர்வாகிகள் சக் திவேல், குமார், மணி, பிரேம்குமார் உள் ளிட்டோர் செய்து வருகின்றனர்.

கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.1.80 கோடிக்கு வர்த்தகம்

எடப்பாடி, மார்ச் 7: எடப்பாடியை அடுத்த கொங்கணாபுரம் பகுதியில் செயல்பட்டு வரும் கூட்டுறவு வேளாண் விற்பனை சங்கத்தில், சனிக்கிழமை நடைபெற்ற பொது ஏலத்தில் ரூ.1.80 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது.

வாரந்தோறும் சனிக்கிழமைகளில் இம் மையத்தில் நடைபெறும் பொது ஏலத்தில், தமிழகத்தின் பல்வேறு பகு திகளில் இருந்து விவசாயிகள் விற்ப னைக்கு கொண்டுவரும் பருத்தி, எள், நிலக்கடலை உள்ளிட்ட விளைபொ ருள்கள், கூட்டுறவு துறை அலுவலர்கள் முன்னிலையில், பொது ஏலம் விட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் சனிக்கிழமை நடை பெற்ற பொது ஏலத்துக்கு 7,500 பருத்தி மூட்டைகள் விற்பனைக்கு வந்திருந் தன. அவற்றை கூட்டுறவு துறை அலு வலர்கள் 1,100 லாட்டுகளாக பிரித்து பொது ஏலம் விட்டனர். இதில், டி.சி. ஹெச். ரக பருத்தியானது குவிண்டால் ஒன்று ரூ.6,696 முதல் ரூ.7,909 வரை விலைபோனது. அதேபோல் பி.டி. ரக பருத்தியானது குவிண்டால் ஒன்று ரூ.4,962 முதல் ரூ.5,820 வரை விலை போனது.

இதில் மொத்தம் 7,500 மூட்டை பருத்தி ரூ.1.80 கோடிக்கு விற்பனையா னது. நிகழ் வாரத்தில் பி.டி. ரக பருத்தி கடந்த வார விலையை விட குவிண்டா லுக்கு ரூ.50 முதல் ரூ.100 வரை குறைந்து விற்பனையானதாக, விவசாயிகள் தெரி வித்தனர்.

வரி இனங்களை மார்ச் 31-க்குள் செலுத்தி ஜப்தி நடவடிக்கையைத் தவிர்க்க வேண்டுகோள்

சேலம், மார்ச் 7: சேலம் மாந கராட்சிக்கு பொதுமக்கள் மற்றும் வணிக நிறுவனங் கள் செலுத்த வேண்டிய வரி இனங்களை மார்ச் 31-க்குள் செலுத்தி, ஜப்தி உள்ளிட்ட நடவடிக்கைகளை தவிர்த்தி டுமாறு மாநகராட்சி ஆணை யர் ரெ.சதீஷ் தெரிவித்துள் ளார்.

சேலம் மாநகராட்சிக்குள் பட்ட 60 கோட்டங்களில் வசிக்கும் பொது மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற் படுத்திடவும், மாநகராட் சிக்குள்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச் சிப் பணிகள் மேற்கொள்வ தற்கு தேவையான நிதி ஆதா ரங்களை பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளை யும் மாநகராட்சி நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில், பொது மக்கள் மற்றும் வணிக நிறு வனங்கள் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, காலி மனை வரி, கடை வாடகை, உரிமை யாணை கட்டணங்கள், புதை குழி சாக்கடை திட்ட வைப் புத் தொகை மற்றும் குடிநீர் கட்டண வேறுபாட்டு வைப் புத்தொகைகளை செலுத் துவதற்கு ஏதுவாக, ஏற்கெ னவே செயல்பட்டு வரும் 8 வரி வசூல் மையங்களோடு, கூடுதலாக 5 சிறப்பு வரி வசூல் மையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

அதன்படி, சூரமங்கலம் மண்டலத்துக்குள்பட்ட பகு திகளில் சூரமங்கலம் மண் டல அலுவலகம், கோட்டம் எண் 27 அரிசிப்பாளையம் காமராஜர் திருமண மண்டப வளாகம், கோட்டம் எண் 23 சூரமங்கலம் உழவர் சந்தை அம்மா உணவக வளாகம், அஸ்தம்பட்டி மண்டலத் துக்குள்பட்ட பகுதிகளில் அஸ்தம்பட்டி மண்டல அலு வலகம், கோட்டம் எண் 30 அப்புச்செட்டி தெரு, கோட்டம் எண் 14 தொங் கும் பூங்கா வளாகம், அம் மாப்பேட்டை மண்டலத்துக் குள்பட்ட பகுதிகளில் அம் மாப்பேட்டை மண்டல அலு வலகம், கோட்டம் எண் 42 நாராயண நகர் எம்.ஜி.ஆர். மருத்துவமனை அருகில், கோட்டம் எண் 32 தேர் வீதி மாநகராட்சி பள்ளி வளாகம், கொண்டலாம்பட்டி மண்ட லத்துக்குள்பட்ட பகுதிகளில் கொண்டலாம்பட்டி மண் டல அலுவலகம், கோட்டம் எண் 52 ஜாரி கொண்டலாம் பட்டி வார்டு அலுவலகம், கோட்டம் எண் 50 மணி யனூர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய வளாகம், கோட்டம் எண் 57 கருங்கல் பட்டி அம்மா உணவக வளா கம் என மொத்தம் 13 வரி வசூல் மையங்கள் செயல் பட்டு வருகின்றன.

இம்மையங்களில் மார்ச் 31 வரையிலான அனைத்து நாள்களிலும் வரியினங் களை செலுத்தலாம். மேலும் https://tnurbanepay.tn.gov.in/ என்ற இணை யதளம் மூலமும் மாநகராட் சிக்கு செலுத்த வேண்டிய வரி யினங்களை செலுத்தலாம் என தெரிவித்துள்ளார்.

தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

ஓமலூர், மார்ச் 7: காடையாம்பட்டி அருகே உள்ள பூசாரிப்பட்டியில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் இயக் கம் சார்பில், தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் சனிக்கிழமை நடை பெற்றது.

தமிழக அரசு சார்பில் மாநிலம் முழு வதும் படித்த கிராமப்புற வேலை யில்லா இளைஞர்களுக்காக வேலை வாய்ப்பு முகாம்களை நடத்தி வருகி றது. இதன் தொடர்ச்சியாக, சேலம் மாவட்டம், காடையாம்பட்டி தாலுகா, பூசாரிப்பட்டியில் உள்ள தனியார் கல் லூரியில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் இயக்கம் சார்பில், மாபெரும் வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்றது.

இதில், ஓமலூர் சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் எஸ்.வெற்றிவேல் கலந்துகொண்டு பணி நியமன ஆணை களை வழங்கி முகாமை தொடங்கி வைத்தார். இந்த முகாமில் நகைக் கடை



தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை தொடங்கி வைக்கும் எம்.எல்.ஏ. எஸ்.வெற்றிவேல்.

கள், செல்லிடப்பேசி உதிரி பாகங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள், காப்பீட்டு நிறுவனங்கள் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் கலந்துகொண்டு தங்களுக்கு தேவை யான பணியாளர்களை தேர்ந்தெடுத்த னர்.

இந்த மாபெரும் வேலைவாய்ப்பு முகாமில், அரசு அலுவலர்கள் மற்றும் வேலையில்லா கிராமப்புற இளைஞர் கள் என 500-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

தினமணி.காம்-ல்
பெண்மை வாழ்க, பெண்மை வெல்க!
மகளிர் தின சிறப்புப் பக்கம்
எழுத்துச் சித்திரங்கள்
வாசியுங்கள்
dinamani.com

Mangiamo
Multi - Cuisine Restaurant
SIVARAJ HOLIDAY INN
"Where there is a women there is magic"
March
Women's Day
Avail 25% Discount on
Lunch and Dinner Buffet
₹799 nett.
For Reservation : 96555 82000, 95855 96000.
Sivaraj Holiday Inn
603, Junction Main Road, Salem - 5. Tel : 0427 2777 222.
www.sivarajholiday.in

ஆன்மிக சிந்தனை

எவன் சூரிய ஒளிக் கிரணங்களைச் சூரியனாகவே உணர்கிறானோ அவனே நிர்விகல்பன் எனப்படுகிறான். எப்படி நுரை, அலை, பனித்துளி, நீர்க்குமிழி ஆகியவை தண்ணீரிலிருந்து வேறுபட்டவையல்லவோ, அதுபோலவே இந்த உலகமும் ஆத்மாவிலிருந்து தோன்றியதுதான், வேறுபட்டதல்ல. பழங்கள், இலைகள், கொடிகள், மலர்கள், கிளைகள், வேர் முதலியவை மரத்தின் விதையில் உள்ளடங்கியிருக்கின்றன. அதுபோலவே, இந்த உலகத்தின் தோற்றமும் பிரம்மத்திடமே அடங்கியிருக்கிறது.

–வசிஷ்டர் (யோகவாஷிட்ட சாரம்)

தேவனே, உமது நாமத்தினிமித்தம் என்னை ரட்சித்து, உமது வல்லமையினால் எனக்கு நியாயஞ் செய்யும்.

– சங்கீதம் 54: 1

மனிதனுக்கு நன்றி செலுத்தாதவன் இறைவனுக்கு நன்றி செலுத்துபவன் அல்லன்.

–நூல்: அபூதாவூத்

இன்றும்

ஞாயிற்றுக்கிழமை
(8–3–2020)
விகாரி ஆண்டு, மாசி – 25

பிறை: வளர்பிறை.
திதி : சதுர்த்தசி பின்னிரவு 2.08 வரை, பிறகு பௌர்ணமி.
நட்சத்திரம் : மகம் பின்னிரவு 3.31 வரை, பிறகு பூரம்
யோகம் : மரண/சித்தயோகம்.
ராகுகாலம் : மாலை 4.30 – 6.00 மணி.
எமகண்டம் : நண்பகல் 12.00 – 1.30 மணி.
சூலம் : கிழக்கு.
நல்ல நேரம் : காலை 7 – 8 மணி. மாலை 3 – 4 மணி.

இன்றைய விசேஷம்: மாசி மகம். நடராஜர் அபிஷேகம். நத்தம் மாரியம்மன் பாற்குடக் காட்சி. குடந்தை சாரங்கபாணி பெருமாள் தெப்ப உற்ஸவம். திருச்செந்தூர், பெருவயல் தலங்களில் முருகப் பெருமான் மகா ரத உற்ஸவக் காட்சி. காரமடை அரங்கநாதர் தேரோட்டம். சூரியனார்கோயில் சூரியநாராயணப் பெருமாளுக்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரம்.

மேஷம் ..... சிறப்பு
ரிஷபம் ..... உழைப்பு
மிதுனம் ..... ஆக்கம்
கடகம் ..... அன்பு
சிம்மம் ..... பாசம்
கன்னி ..... பண்பு
துலாம் ..... உவகை
விருச்சிகம் ..... பயணம்
தனுசு ..... கவனம்
மகரம் ..... மகிழ்ச்சி
கும்பம் ..... இரக்கம்
மீனம் ..... உண்மை

நாளையும்

திங்கள்கிழமை
(9–3–2020)
விகாரி ஆண்டு, மாசி – 26

பிறை: வளர்பிறை.
திதி : பௌர்ணமி நள்ளிரவு 12.04 வரை, பிறகு பிரதமை.
நட்சத்திரம் : பூரம் நள்ளிரவு 1.59 வரை, பிறகு உத்திரம்.
யோகம் : சித்தயோகம்.
ராகுகாலம் : காலை 7.30 – 9.00 மணி.
எமகண்டம் : காலை 10.30 – 12.00 மணி.
சூலம் : கிழக்கு.
நல்ல நேரம் : காலை 6 – 7 மணி. மாலை 3 – 4 மணி.

இன்றைய விசேஷம்: பௌர்ணமி. ஹோலிப்பண்டிகை. சங்கரன்கோவில் கோமதியம்மன் புஷ்பப் பாவாடை தரிசனம். திருக்கோஷ்டியூர் சௌமிய நாராயணப்பெருமாள் தெப்போற்ஸவம். நத்தம் மாரியம்மன் மஞ்சள் பாவாடை, பால் குடம், காவடி, பொங்கல், மாவிளக்கு. காங்கேயநல்லூர் முருகப்பெருமான் விடாயாற்று உற்ஸவம். திருச்செந்தூர் முருகப்பெருமான் மின் விளக்கு அலங்காரம்; தெப்ப உற்ஸவம், இரவு புஷ்ப சப்பரத்தில் பவனி.

மேஷம் ..... ஆக்கம்
ரிஷபம் ..... செலவு
மிதுனம் ..... நற்செயல்
கடகம் ..... தாமதம்
சிம்மம் ..... தெளிவு
கன்னி ..... ஆர்வம்
துலாம் ..... மாற்றம்
விருச்சிகம் ..... நலம்
தனுசு ..... மகிழ்ச்சி
மகரம் ..... போட்டி
கும்பம் ..... இன்பம்
மீனம் ..... முயற்சி

தங்கம் விலை நிலவரம்

தருமபுரி
தங்கம் 1 கிராம் .....ரூ. 4,136
வெள்ளி 10 கிராம் .....ரூ.499

கிருஷ்ணகிரி
தங்கம் 1 கிராம் ..... .ரூ. 4,231
வெள்ளி 10 கிராம் ..... .ரூ.507

சேலம்
தங்கம் 1 கிராம் ..... ரூ.4,169
வெள்ளி 10 கிராம் ..... ரூ.505



நாமக்கல்
தங்கம் 1 கிராம் ..... ரூ.4,163
வெள்ளி 10 கிராம் ..... ரூ.500

மேட்டூர் அணை நீர்மட்டம் சரிவு



மேட்டூர், மார்ச் 7: மேட்டூர் அணையிலிருந்து குடிநீருக்கு திறக்கப்படும் நீரின் அளவு அதிகரிக்கப்பட்டதால், அணையின் நீர்மட்டம் சரியத் தொடங்கியது.

காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மழை இல்லாத காரணத்தால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சரிந்து வந்தது. இந் நிலையில், கடந்த வாரம் கர்நாடக அணைகளிலிருந்து தமிழகத்துக்கு வழங்க வேண்டிய காவிரி நீரின் ஒரு பகுதி திறக்கப்பட்டது. இதனால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. இரு தினங்களுக்கு பிறகு கர்நாடக அணைகளிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டது. இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு சனிக்கிழமை காலை நொடிக்கு 195 கன அடியாகச் சரிந்தது.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமை காலை மேட்டூர் அணையிலிருந்து குடிநீருக்கு திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 2 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டது. அணைக்கு வரும் நீரின் அளவை விட குடிநீருக்குத் திறக்கப்படும் நீரின் அளவு அதிகமாக இருப்பதால், வெள்ளிக்கிழமை காலை 105 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை காலை 104.86 அடியாகச் சரிந்தது. அணையின் நீர் இருப்பு 71.28 டி.எம்.சி.யாக இருந்தது.

பெண்ணின் புகைப்படத்தை இணையத்தில் பரப்பிவிடுவதாக மிரட்டல்

கார் ஓட்டுநர் கைது

கோவை, மார்ச் 7: பெண்ணின் புகைப்படத்தை இணையத்தில் பரப்பிவிடுவதாக மிரட்டியதாக, கால் டாக்ஸி ஓட்டுநரை போலீஸார் கைது செய்தனர்.

கோவை, சிங்காநல்லூர் அருகே உப்பிலிபாளையம் பகுதியைச் சேர்ந்த 35 வயது பெண் ஒருவர், சென்னையில் வசித்து வந்துள்ளார். அப்போது, அப் பெண்ணின் பக்கத்து வீட்டில் கால் டாக்ஸி ஓட்டுநர் ராஜா (46) என்பவர் தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில், தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு ராஜா வற்புறுத்தியதாகவும், அதற்கு அந்தப் பெண் மறுத்ததாகவும் கூறப்படுகிறது.

இதையடுத்து, அந்தப் பெண் கோவைக்குத் திரும்பியுள்ளார்.

அதன் பிறகும் திருமணம் செய்து கொள்ளுமாறு ராஜா வற்புறுத்தியதாகவும், இல்லையென்றால் இருவரும் நண்பர்களாகப் பழகிய போது, சேர்ந்து எடுத்த புகைப்படங்களை இணையத்தில் பரப்பிவிடுவதாகவும் மிரட்டியுள்ளார்.

இதனால், அதிர்ச்சியடைந்த அந்தப் பெண் சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதுதொடர்பாக விசாரணை மேற்கொண்ட போலீஸார் சென்னை, பல்லாவரத்தைச் சேர்ந்த ராஜா மீது கொலை மிரட்டல், பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

முட்டை விற்பனை கடும் பாதிப்பு

நேரடி விற்பனையில் ஈடுபடும் கோழிப் பண்ணையாளர்கள்



நாமக்கல் – பரமத்தி சாலையில் சனிக்கிழமை நேரடி முட்டை விற்பனையில் ஈடுபட்ட கோழிப் பண்ணைத் தொழிலாளர்கள்.

நாமக்கல், மார்ச் 7: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை மற்றும் விற்பனை கடும் சரிவைச் சந்தித்து வருகிறது. இதனைப் பயன்படுத்தி வியாபாரிகள் என்.இ.சி.சி. நிர்ணயிக்கும் விலையில் இருந்து 70 காசுகள் குறைத்துக் கேட்பதால், பண்ணையாளர்களே நேரடியாக 10 காசுகள் குறைத்து பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

நாடு முழுவதும் கரோனா வைரஸ் பீதி பொதுமக்களை அச்சுறுத்தி வருகிறது. விலங்குகள், பறவைகள் மூலம் பரவுகிறது என பல்வேறு விதமான யூகங்கள் சமூக வலைதளங்களில் வார்த்தைகளாகவும், விடியோ படக் காட்சிகளாகவும் வெளியாகி வருகின்றன. இதனால், ஆடு, கோழி இறைச்சி விற்பனை சரிவடைந்து வருகிறது.

இந்தியாவில் 23 மண்டலங்களில் சுமார் 60 கோடிக்கும் மேலாக முட்டைக் கோழிகள், கறிக்கோழிகள் விற்பனைக்காக வளர்க்கப்படுகின்றன.

குளிர்காலம் வரையில் முட்டை மற்றும் கோழி விற்பனை நல்ல முறையில் நடைபெற்று வந்தது. கோடை காலம் தொடக்கத்துக்கான அறிகுறிகள் தென்பட்டதும், சீனாவில் பரவிய கரோனா வைரஸின் தாக்கம் பிற நாடுகளில் பரவத் தொடங்கியதாலும், முட்டை விற்பனை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. ஏறுமுகத்தில் இருந்த முட்டை விலை கிடுகிடுவென சரிந்தது. இதனால் உற்பத்திச் செலவைக் காட்டிலும், மிகவும் குறைவான விலைக்கு முட்டை மற்றும் கோழிகளை பண்ணையாளர்கள் விற்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகினர்.

தமிழகம், கேரளம், புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களை உள்ளடக்கிய நாமக்கல் மண்டலத்தில் 1,100 கோழிப் பண்ணைகள் உள்ளன. கடந்த சில மாதங்களுக்கு முன்பு விற்பனை சூடு பிடித்ததால், பண்ணையாளர்கள் சிலர் கூடுதலாக கோழிகளை வளர்க்கத் தொடங்கினர். பெரிய பண்ணைகளில் அதிக பட்சமாக 10 லட்சம் கோழிகளும், சிறிய பண்ணைகளில் 50 ஆயிரம் கோழிகள் என்ற எண்ணிக்கையில் வளர்க்கப்படுகின்றன. இங்கு ஏற்கெனவே விலை நிர்ணயத்தில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு, பண்ணையாளர்கள், வியாபாரிகள் ஆகியோருக்கு இடையே எழுந்துள்ள பிரச்னைகள் ஒரு புறம், கரோனா பீதியால் பாதிப்பு மறுபுறம் என பண்ணையாளர்கள் தொடர் பிரச்னைகளை சந்தித்து வருகின்றனர்.

இதனால் பண்ணைகளில் முட்டைகள் அதிகம் தேங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும், முட்டை உற்பத்தியைக் குறைக்க 20 சதவீதம் அளவில் கோழிக் குஞ்சுகளை விட பண்ணையாளர்கள் முடிவெடுத்துள்ளனர். தேங்கும் முட்டைகளை விரைவாக விற்பனைக்கு அனுப்ப வேண்டும் என்ற பண்ணையாளர்களின் எண்ணத்தை தெரிந்து கொண்டு, என்.இ.சி.சி. நிர்ணயிக்கும் விலையில் இருந்து 60, 70 காசுகள் வரை வியாபாரிகள் குறைத்துக் கேட்பதாகக் கூறப்படுகிறது.

பெரிய பண்ணையாளர்கள், வியாபாரிகளின் நெருக்கடியைத் தவிர்க்கும் வகையில், தங்களுடைய பண்ணைகளில் இருந்து முட்டைகளைக் கொண்டு வந்து, பொதுமக்கள் அதிகம் வந்து செல்லும் இடங்களில் ரூ.10 காசுகள் குறைத்து விற்பனை செய்கின்றனர். குறிப்பாக 30 முட்டைகள் கொண்ட அட்டை ரூ.90-க்கு விற்கப்படுகிறது. தமிழ் நாடு முட்டைக் கோழிப் பண்ணையாளர்கள் சம்மேளனத்தில் உறுப்பினர்களாக உள்ள பலரும் இந்த முறையை தற்போது கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளனர்.

நாமக்கல் – பரமத்தி சாலையில், முட்டைக் கூவி, கூவி விற்கப்படுகிறது. பொதுமக்களைக் காட்டிலும் உணவகத்தில் உள்ளோர் இவற்றை மொத்தமாக வாங்கிச் செல்கின்றனர். இதேபோல், நாமக்கல் – மோகனூர் சாலை, திருச்சி சாலை, சேலம் சாலை உள்ளிட்ட பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை முதல் தொடர் முட்டை விற்பனை நடைபெற உள்ளது. பண்ணையாளர்களின் இந்த திடீர் முடிவால் வியாபாரிகள் கலக்கமடைந்துள்ளனர்.

இதுகுறித்து கோழிப் பண்ணையாளர்கள் சங்கத்தினர் கூறியது: கரோனாவால் முட்டை விற்பனைக்கு எந்த பாதிப்புமில்லை. மக்களிடையே தவறான கண்ணோட்டம் ஏற்பட்டுள்ளது. விலை குறைவுக்கு முட்டை தேக்கம் ஒரு காரணம், கோடை காலத் தொடக்கம், கேரளத்தில் ஈஸ்டர் பண்டிகையையொட்டி முட்டை வாங்குவோர் எண்ணிக்கை குறைந்துள்ளது, அதுமட்டுமின்றி, தற்போது பொதுத் தேர்வு நடைபெறுவதால், மாணவர்களுக்கு இறைச்சி தொடர்பான உணவுகளை பெற்றோர் வழங்கத் தயங்குகின்றனர்.

இவ்வாறான சூழலைப் பயன்படுத்தித்தான் வியாபாரிகள் அடிமாட்டு விலைக்குக் கேட்பதுபோல், என்.இ.சி.சி. நிர்ணயிக்கும் விலையில் இருந்து 70 காசுகள் வரை குறைவாகக் கேட்கின்றனர். ஒரு முட்டை உற்பத்தி செய்ய ரூ.4 வரை செலவாகிறது. வியாபாரிகளுக்கு ரூ.2.30-க்கு ஒரு முட்டை விற்றால் ரூ.1.70 நஷ்டம் ஏற்படுகிறது. கடந்த ஒரு மாதத்தில் மட்டும் முட்டைத் தொழிலில் ரூ.200 கோடிக்கும் மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. முட்டை விற்பனையில் நஷ்டம் என்றால், முட்டைக் கோழிகள் விற்பனையும் கரோனா பீதியால் பாதிப்படைந்துள்ளது. பல மாநிலங்களில் அவற்றை மக்களுக்கு இலவசமாகக் கொடுக்கின்றனர்.

கறிக்கோழி கிலோ ரூ.80-க்கு விற்பனையானது, தற்போது ரூ.20, 30-க்கு விற்கப்படுகிறது. இங்கும் வியாபாரிகள் விலையைக் குறைத்து கேட்டு வாங்குவதால், விலை சரிவைச் சந்தித்து வருகிறது. இதுபோன்ற நிலை தொடரக் கூடாது என்பதற்காக பண்ணையில் இருந்து நேரடியாக முட்டைகளைக் கொண்டு வந்து நாங்களே ஓர் அட்டை முட்டையை (30 எண்ணிக்கை கொண்டது) ரூ.90 என விற்பனை செய்து வருகிறோம். அனைத்து பண்ணையாளர்களும் இன்னும் ஓரிரு நாளில் தங்களுடைய பகுதியிலேயே நேரடி விற்பனையைத் தொடங்கி விடுவர். இதனால் வியாபாரிகள் முட்டைக்கு அதிகப்படியான மைனஸ் விலையைக் கேட்க முடியாது. மைனஸ் விலை வேண்டாம் என்பதும், என்.இ.சி.சி.நிர்ணயிக்கும் விலையிலேயே அனைத்து பண்ணையாளர்களும் விற்க வேண்டும் என்பது தான் எங்களுடைய விருப்பம் என்றனர்.

குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிரான போராட்டம் மூலம் சட்டம், ஒழுங்கு பிரச்னை ஏற்படுத்த முயற்சி

கே.டி.ராகவன்



சேலம் அழகாபுரத்தில் சனிக்கிழமை நடைபெற்ற மத்திய பட்ஜெட் குறித்து கருத்தரங்கில் பேசுகிறார் பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநிலச் செயலர் கே.டி.ராகவன்.

சேலம், மார்ச் 7: குடியுரிமைதிருத்தச் சட்டத்துக்கு எதிரான போராட்டம் மூலம் சட்டம், ஒழுங்கு பிரச்னையை ஏற்படுத்த முயற்சி நடக்கிறது என பாஜக மாநிலச் செயலர் கே.டி.ராகவன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் சனிக்கிழமை சேலத்தில் செய்தியாளர்களிடம் கூறியது: குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிரான இஸ்லாமியர்கள் போராட்டத்தின் பின்னணியில் திமுக உள்ளது. இதன் மூலம் சட்டம்-ஒழுங்குப் பிரச்னையை ஏற்படுத்தி ஆட்சிக்கு வர திமுக முயற்சிக்கிறது.

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் அனுமதி பெறாமல் இஸ்லாமியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். குடியுரிமை திருத்தச் சட்டம் குறித்து விவாதிக்க பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோர் அழைப்பு விடுத்தும், காங்கிரஸ் உள்பட எதிர்க்கட்சியினர் யாரும் அதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை. இதனால் குடியுரிமை திருத்தச் சட்டம் குறித்து தவறான தகவலைப் பரப்பி பிரித்தாளும் சூழ்ச்சியை மேற்கொண்டு வருகின்றனர்.

இச் சட்டம் குடியுரிமையைப் பறிக்கும் சட்டம் அல்ல. அது குடியுரிமை வழங்கும் சட்டமாகும். திமுக பொதுச் செயலாளர் அன்பழகன் மறைவுக்கு பாஜக சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். பேட்டியின்போது, பாஜக மாநகர மாவட்டத் தலைவர் சுரேஷ்பாபு, நிர்வாகிகள் அண்ணாதுரை, என்.மணிகண்டன், வரதராஜன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

கோவை வழியாக கொச்சுவேலி–ஹைதராபாத் இடையே சிறப்பு ரயில்



கோவை, மார்ச் 7: கோவை வழித்தடத்தில் கொச்சுவேலி – ஹைதராபாத் இடையே மே மாதம் வரை சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

தெலங்கானா மாநிலம், ஹைதராபாதில் இருந்து கேரள மாநிலம், கொச்சுவேலிக்கு மார்ச் முதல் மே மாதம் வரை சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

அதன்படி, ஹைதராபாதில் இருந்து மார்ச் 14, 21, 28, ஏப்ரல் 4, 11, 18, 25 மற்றும் மே 2, 9, 16, 23, 30 ஆகிய சனிக்கிழமைகளில் இரவு 9 மணிக்குப் புறப்படும் சிறப்பு ரயிலானது, திங்கள் கிழமை காலை 3.20 மணிக்கு கொச்சுவேலி சென்றடையும்.

அதேபோல், கொச்சுவேலியில் இருந்து மார்ச் 16, 23, 30, ஏப்ரல் 6, 13, 20, 27 மற்றும் மே 4, 11, 18, 25 ஆகிய திங்கள்கிழமைகளில் காலை 7.45 மணிக்குப் புறப்படும் சிறப்பு ரயிலானது, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஹைதராபாத் சென்றடையும்.

இந்த சிறப்பு ரயில் கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், ஜோலார்பேட்டை, வாணியம்பாடி, ஆம்பூர், காட்பாடி ஆகிய ரயில் நிலையங்களில் நின்று செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் ஜைன கோயிலில் திருட்டுப் போன 22 சிலைகள் மீட்பு

4 பேர் கைது

தஞ்சாவூர், மார்ச் 7: தஞ்சாவூர் ஜெயின் கோயிலில் திருட்டுப் போன பழைமையான 22 உலோகச் சிலைகள் மீட்கப்பட்டன. இது தொடர்பாக 4 பேரைக் காவல்துறையினர் சனிக்கிழமை கைது செய்தனர்.

தஞ்சாவூர் கரந்தை ஜெயின் தெருவில் ஸ்ரீ ஆதீஸ்வர சுவாமி என்கிற ஜைன கோயில் உள்ளது. இங்குள்ள தலா ஒன்றரை அடி உயர ஆதீஸ்வரர் சிலை, 24-ஆவது தீர்த்தங்கரர் சிலை, சரசுவதி சிலை, ஜோலமாலினி சிலை, சரவண யாக்சன் சிலை, தலா ஓர் அடி உயரமுடைய பஞ்சமேரு சிலை, மகாவீரர் சிலை, தலா அரை அடி உயர தார்நேத யாஸ்கன் சிலை, பத்மாவதியாஃ ஷினி சிலை, நந்தீசுவரர் சிலை, தலா முக்கால் அடி உயர நவகிரக தீர்த்தங்கள் சிலை, நவதேவதை சிலை உள்ளிட்ட சிலைகள் கடந்த ஜனவரி 19- ஆம் தேதி திருட்டு போயின. கோயிலின் பின்புறக்கதவை உடைத்து, உள்ளே நுழைந்து மர்ம நபர்கள் இந்த சிலைகளைத் திருடிச் சென்றனர். இதுகுறித்து மேற்கு காவல் நிலையத்தில், கோயில் அறங்காவலர் அப்பாண்டை ராஜன் புகார் செய்தார். இதன் பேரில் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்தனர்.

தஞ்சாவூர் சரகக் காவல் துணைத் தலைவர் ஜெ. லோகநாதன், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ். மகேஸ்வரன் உத்தரவின்படி, மேற்குக் காவல் நிலைய ஆய்வாளர் ஜி. செங்குட்டுவன், உதவி ஆய்வாளர் ஜி. சுகுமாறன் தலைமையில் 5 தலைமைக் காவலர்கள் கொண்ட தனிப்படை அமைக்கப்பட்டது.

இப்படையினர் நிகழ்விடத்தில் பொருத்தப்பட்டுள்ள கண் காணிப்பு கேமராக்களில் பதிவான காட்சிகளைப் பார்த்தபோது, மர்ம நபர்கள் சிலைகளைத் திருடி, வேனில் ஏற்றிச் செல்வது தெரிய வந்தது.

இதன் அடிப்படையில் காவல்துறையினர் மேற்கொண்ட விசாரணையில், தஞ்சாவூர் கரந்தை அருகிலுள்ள சுங்கான்திடல் சைவராஜ் மகன் சரவணன் என்கிற ராஜேஷ் (40) கைது செய்யப்பட்டார்.

இவர் அளித்த தகவலின் மூலம் கரந்தை பி. சண்முகராஜன் (45), சுங்கான்திடல் பெரியத்தெரு பி. ரவி (45), நாகை மாவட்டம், கீழ்வேளூர் பிராதபுரம் வி. விஜயகோபால் (37) ஆகியோரைக் காவல்துறையினர் சனிக்கிழமை கைது செய்தனர். மேலும், ராஜேஷ் வீட்டின் அருகே பதுக்கி வைக்கப்பட்டிருந்த 22 உலோகச் சிலைகள் மீட்கப்பட்டன. திருட்டு போன 48 நாள்களுக்குள் இச் சிலைகள் மீட்கப்பட்டுள்ளன என காவல்துறையினர் தெரிவித்தனர்.

அஞ்சலி...



திமுக பொதுச் செயலாளர் க.அன்பழகனின் உடலுக்கு அஞ்சலி செலுத்திய புதுச்சேரி முதல்வர் வி.நாராயணசாமி. உடன் முதல்வரின் நாடாளுமன்றச் செயலர் க.லட்சுமிநாராயணன்.



அஞ்சலி செலுத்திய மதிமுக பொதுச்செயலர் வைகோ.



அஞ்சலி செலுத்திய தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி, முன்னாள் தலைவர்கள் கே.வீ.தங்கபாலு, கிருஷ்ணசாமி, மக்களவை உறுப்பினர் எச்.வசந்தகுமார், பொதுச்செயலர் கே.சிரஞ்சீவி உள்ளிட்டோர்.



அஞ்சலி செலுத்திய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு, மாநிலச் செயலர் இரா.முத்தரசன்.

க.அன்பழகன் உடலுக்கு தலைவர்கள் அஞ்சலி

சென்னை, மார்ச் 7: வயது முதிர்வின் காரணமாக காலமான திராவிட இயக்கத்தின் முதுபெரும் தலைவரும், திமுக பொதுச் செயலாளருமான க.அன்பழகன் உடலுக்குப் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் சனிக்கிழமை நேரில் அஞ்சலி செலுத்தினர்.

ஆஸ்பிரான் தோட்டத்தில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த க.அன்பழகன் உடலுக்கு மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதைத் தொடர்ந்து பொருளாளர் துரைமுருகன், முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, மக்களவை திமுக குழுத் துணைத் தலைவர் கனிமொழி, துணைப் பொதுச் செயலாளர்கள் வி.பி.துரைசாமி, ஐ.பெரியசாமி, முன்னாள் அமைச்சர்கள் பொன்முடி, எ.வ.வேலு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, ஆ.ராசா, தயாநிதி மாறன், ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன் உள்பட திமுக முக்கிய நிர்வாகிகள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

துணை முதல்வர் அஞ்சலி: துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் அமைச்சர் டி.ஜெயக்குமார், அதிமுக சட்டப் பேரவை உறுப்பினர் சத்யா ஆகியோர் மாலை அணிவித்தும், மலர் வளையம் வைத்தும் அஞ்சலி செலுத்தினர். அதன் பிறகு, மு.க.ஸ்டாலினை சந்தித்து ஓ.பன்னீர்செல்வம் ஆறுதல் கூறினார். அதைப் போல க.அன்பழகன் குடும்பத்தாருக்கும் ஆறுதல் கூறினார்.

குடியரசுத் துணைத் தலைவர் இரங்கல்: குடியரசுத் துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு தொலைபேசி வாயிலாக மு.க.ஸ்டாலினுடன் தொடர்புகொண்டு க.அன்பழகன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்தார்.

புதுச்சேரி முதல்வர் நாராயணசாமி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ்.அழகிரி, முன்னாள் தலைவர்கள் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், கே.வீ.தங்கபாலு, திருநாவுக்கரசர், கிருஷ்ணசாமி ஆகியோர் க.அன்பழகன் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநிலங்களவை உறுப்பினர் டி.கே.ரங்கராஜன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் கே.எம்.காதர் மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா உள்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

ரஜினிகாந்த் அஞ்சலி: நடிகர் ரஜினிகாந்த் க.அன்பழகன் உடலுக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். அதேபோல் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன், நடிகர்கள் சத்யராஜ், சிவகுமார் உள்பட கலைத் துறையைச் சார்ந்த பலரும் அஞ்சலி செலுத்தினர்.

பொது மக்கள் அஞ்சலி: கீழ்ப்பாக்கம் ஆஸ்பிரான் தோட்டம் இல்லத்தில் அதிகாலை 4 மணிக்கு க.அன்பழகன் உடல் வைக்கப்பட்டது முதலே திமுகவினரும், பொது மக்களும் நீண்ட வரிசையில் காத்திருந்து அஞ்சலி செலுத்தினர். பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக தனி வரிசையில் தடுப்பு அமைக்கப்பட்டிருந்தது. தமிழகம் முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கானோர் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர்.

அரைக்கம்பத்தில் கொடி: க.அன்பழகன் மறைவுக்கு ஒரு வாரம் துக்கம் கடைப்பிடிக்கப்படும் என்று திமுக தலைமை அறிவித்திருந்தது. அதன்படி, அறிவாலயம், கருணாநிதி இல்லம், மு.க.ஸ்டாலின் இல்லத்தில் அரைக்கம்பத்தில் திமுக கொடிகள் பறக்கவிடப்பட்டன. தமிழகம் முழுவதும் திமுக கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டன.



சென்னையில் சனிக்கிழமை நடைபெற்ற திமுக பொதுச் செயலாளர் க.அன்பழகனின் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்ற கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின். உடன் பொருளாளர் துரைமுருகன், கொள்கை பரப்புச் செயலர் ஆ.ராசா, முதன்மை செயலாளர் கே.என்.நேரு, மக்களவை உறுப்பினர்கள் கனிமொழி, தமிழச்சி தங்கபாண்டியன், மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா, முன்னாள் அமைச்சர்கள் க.பொன்முடி, எ.வ.வேலு, கவிஞர் வைரமுத்து, மு.க.தமிழரசு உள்ளிட்டோர்.

குடியரசு துணைத் தலைவர் இரங்கல்

திமுகவின் உட்கட்சித் தேர்தல் ஒத்திவைப்பு

சென்னை, மார்ச் 7: திமுக பொதுச்செயலாளர் க.அன்பழகன் மறைவையொட்டி, அக் கட்சியின் உட்கட்சித் தேர்தல் ஒரு வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திமுக தலைமைக் கழகம் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கை: க.அன்பழகனின் மறைவையொட்டி கட்சி நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒரு வாரத்துக்கு ஒத்தி வைக்கப்படும் என்று தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். அதன்படி, அனைத்து மாவட்டங்களில் நடைபெற்று வரும் ஊர்கிளை – உட்கிளைக் கழகத் தேர்தல்கள், ஒரு வாரத்துக்கு ஒத்தி வைக்கப்படுவதாக அதில் கூறப்பட்டுள்ளது.

ஆளுநர், முதல்வர் இரங்கல்

சென்னை, மார்ச் 7: திராவிட இயக்கத் தலைவர்களில் முதுபெரும் தலைவரும், திமுக பொதுச் செயலாளருமான க.அன்பழகன் மறைவுக்கு ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து, இருவரும் சனிக்கிழமை தனித்தனியே வெளியிட்ட அறிக்கை:–

ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்: பேராசிரியர் என அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்ட அன்பழகன், திராவிட இயக்கத்தின் எழுச்சிமிகு தலைவராக மட்டுமல்லாது, சிறந்த பேச்சாளராகவும், தமிழ் மொழியில் புலமை பெற்றவராகவும் விளங்கினார்.

கடந்த 70 ஆண்டுகளாக தமிழகத்தின் வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய பங்களிப்பு எப்போதும் அனைவராலும் நினைவில் வைக்கப்பட்டே இருக்கும். அவரது மறைவு தமிழக மக்களுக்கும், திமுக தலைவருக்கும், கட்சியினருக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவரது மறைவால் மிகுந்த துயரத்தில் இருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல்வர் பழனிசாமி: முன்னாள் முதல்வர் கருணாநிதியின் அரசியல் பயணத்தின் நெடுகிலும் உற்ற தோழராகவும், திராவிட இயக்கக் கொள்கைகளில் இருந்து விலகாத உறுதிமிக்க மூத்த அரசியல்வாதியாகவும் விளங்கியவர். அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடக்க காலம் முதலே பங்கு வகித்தவர் என்ற பெருமைக்குரியவர்.

43 ஆண்டுகளாக திமுகவின் பொதுச் செயலாளராகவும், 9 முறை சட்டப் பேரவை உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற பெருமைக்குரியவர். அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டப் பேரவை உறுப்பினர் ஆகிய பதவிகளில் திறம்பட பணியாற்றியவர்.

அரசியல்வாதி, ஆசிரியர், மேடை பேச்சாளர், எழுத்தாளர், தொழிற் சங்கவாதி, சமூக சீர்திருத்தவாதி போன்ற பல பரிமாணங்களைக் கொண்டு தனது பன்முகத்தன்மையை வெளிப்படுத்தியவர். அன்பழகன் மறைவு தமிழகத்துக்கு பேரிழப்பாகும் என்று முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி தெரிவித்துள்ளார்.

ராகுல் காந்தி உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல்

சென்னை, மார்ச் 7: திமுக பொதுச் செயலாளர் க.அன்பழகன் மறைவுக்கு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, ஆளும் அதிமுக உள்பட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

ராகுல் காந்தி: க.அன்பழகன் மறைவு செய்தி கேட்டு வேதனையடைந்தேன். அவர் மறைவுக்கு எனது இதயபூர்வமான வருத்தங்கள். இந்தத் துயரமான நேரத்தில் என் எண்ணங்களும், வேண்டுதலும் உங்களுக்காகவே உள்ளன என க.அன்பழகனின் மகன் அன்புச்செல்வனுக்கு எழுதிய கடிதத்தில் ராகுல் குறிப்பிட்டுள்ளார்.

என்.சங்கரய்யா (மார்க்சிஸ்ட் மூத்த தலைவர்): என்னுடைய சமகால அரசியல் தலைவரான க.அன்பழகனை 1945-இல் இருந்தே நன்கு அறிவேன். சட்டப்பேரவையில் அவருடன் பணியாற்றிய காலத்தில் அவரைச் சந்திக்கும்போதெல்லாம் நாட்டின் முன்னேற்றத்துக்காக சிறந்த கருத்துகளை வெளிப்படுத்தி வந்தவர். அவர் விட்டுச் சென்ற பணிகளை மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக செய்து முடிக்கும்.

கே.எஸ்.அழகிரி (காங்கிரஸ்): திமுகவின் தூண் சாய்ந்து விட்டது. க.அன்பழகன் மறைவு என்பது தமிழக மக்களுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

விஜயகாந்த் (தேமுதிக): க.அன்பழகனின் இழப்பு திமுகவுக்குப் பேரிழப்பாகும். அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், திமுக கட்சியினருக்கும் தேமுதிக சார்பாக எனது ஆழ்ந்த இரங்கல்.

ராமதாஸ் (பாமக): க. அன்பழகன் ஓர் அப்பழுக்கற்ற, அவாவற்ற தலைவர். அவர் உயிரிழந்திருப்பது வேதனையளிக்கிறது.

வைகோ (மதிமுக): பொது வாழ்க்கையில், அரசியலில், நிறை வாழ்வு வாழ்ந்த க.அன்பழகனின் பெயரும் புகழும், எந்நாளும் நிலைத்து இருக்கும். மதிமுக சார்பில் ஆழ்ந்த இரங்கல். அவருக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் 3 நாள்கள் மதிமுக கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்க விடப்படும்.

கே.பாலகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட்): பகுத்தறிவு மற்றும் திராவிடக் கொள்கையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். எந்த சூழ்நிலையிலும் பதற்றமில்லாமல் நிதானத்தைக் கடைப்பிடித்தவர். அவர் மறைவு திமுகவுக்கு பேரிழப்பு.

கமல்ஹாசன் (மநீம): தமிழகத்தின் முதுபெரும் தலைவர், திராவிட சிந்தனையின் தெளிவுரை, ஏற்றுக்கொண்ட இயக்கத்தில் இறுதிவரை உறுதியுடன் இருந்தவர், பேராசிரியர் அன்பழகனின் இழப்பு வேதனைக்குரியது.

சு.திருநாவுக்கரசர் (காங்கிரஸ்): அமைதியும் தியாகமும் உழைப்பும் நேர்மையும் அறிவாற்றலும் பண்பும் கனிவும் துணிவும் நிறைந்தவர். அவரது இழப்பு ஈடு செய்ய முடியாதது.

ஜி.கே.வாசன் (தமாகா): அனைத்து அரசியல் கட்சியினராலும் அன்பு பாராட்டப்பட்டவர். அவர் மறைவு தமிழகத்துக்கும் திமுகவுக்கும் பேரிழப்பாகும்.

தொல்.திருமாவளவன் (விசிக): கண்ணியமான அரசியலுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த க.அன்பழகன் மொழி, இன நலன் காக்கும் போராட்டங்களில் எப்போதும் முன்னிலை வகித்தவர். அவருடைய மறைவு தமிழ்ச் சமூகத்திற்கு ஈடு செய்ய முடியாத மாபெரும் இழப்பு.

அன்புமணி ராமதாஸ் (பாமக): கட்சியிலும், ஆட்சியிலும் தாம் வகித்த பதவிகளுக்குப் பெருமை சேர்த்தவர். திமுகவில் இருந்தாலும் அரசியல் எல்லைகளைக் கடந்து அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த வர்களாலும் நேசிக்கப்பட்டவர்; மதிக்கப்பட்டவர்.

பொன். ராதாகிருஷ்ணன் (பாஜக): மிக மூத்த தலைவரான அன்பழகனுடன் தனிப்பட்ட முறையில் பலமுறை பழகியபோது அவரது அறிவுக்கூர்மையை பார்த்து வியந்துள்ளேன். நம் சந்தேகங்களுக்கு தெளிவைத் தந்த போதெல்லாம் எவ்வித பெருமையும் அவர் கொண்டதில்லை.

டிடிவி. தினகரன் (அமமுக): தமிழகத்தின் மூத்த அரசியல்வாதிகளில் ஒருவரான அன்பழகனின் மறைவால் வாடும் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கல்கள்.

ஈஸ்வரன் (கொமதேக): கருணாநிதி ஒரு இயக்கத்தின் தலைமை பண்புகளுக்கு இலக்கணம் என்றால் க.அன்பழகன் அந்த இயக்கத்தின் இரண்டாம் கட்ட தலைவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்.

ஜவாஹிருல்லா (மமக): அன்பழகன், ஓர் இயக்கத்தின் பொதுச் செயலாளர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஓர் இலக்கணமாக இருந்தவர். தனது நலனை விடவும், இயக்கத்தின் நலன் பெரிது என்று வாழ்ந்து காட்டியவர்.

எம்.ஜி.கே.நிஜாமுதீன் (முன்னாள் எம்எல்ஏ): க.அன்பழகனின் பண்பு, மற்றவர்களுக்கு அவர் அளிக்கும் மரியாதை, பேச்சுத்திறமை, நிர்வாகத் திறமை ஆகியவை என்னைக் கவர்ந்தவை. அவர் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்.



திமுக பொதுச் செயலாளர் க.அன்பழகனின் உடலுக்கு தமிழக அரசின் சார்பில் சனிக்கிழமை அஞ்சலி செலுத்திய துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம். உடன் அமைச்சர் டி.ஜெயக்குமார்.





அஞ்சலி செலுத்திய நடிகர் ரஜினிகாந்த், (வலது) மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன்.

மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு கற்பிக்கும் பி.எட் படிப்புக்கு அதிக வேலைவாய்ப்புகள்

சென்னை, மார்ச் 7: மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு சிறப்பு கல்வி கற்பிக்கும் பி.எட். படித்து முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக துணைவேந்தர் பார்த்தசாரதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் சனிக்கிழமை துணைவேந்தர் பார்த்தசாரதி செய்தியாளர்களிடம் கூறியது: தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படும் அனைத்து பாடப்பிரிவுகளும், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் வேலை வாய்ப்புக்கு ஏற்றவை.

வாய் பேச முடியாத, காது கேளாத, பார்வையற்ற குழந்தைகள் என பலவகையான மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு சிறப்பு கல்வி கற்பிக்கும் வகையிலான திட்டத்தை தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம் மட்டும் செயல்படுத்தி வருகிறது. தற்போது 500-க்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் படித்து வருகின்றனர். இந்த படிப்பை முடித்தால் அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலை வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என்றார்.



உடனடிச் செய்திகள் சுடாக சுருக்கமாக... www.dinamani.com

தமிழ்நாடு அரசு– பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம், சேப்பாக்கம், சென்னை–5

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 08/2019–2020 நாள்: 06.03.2020

தமிழக ஆளுநருக்காகவும் மற்றும் ஆளுநரின் சார்பாகவும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் விவரிக்கப்பட்டபடி பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதியில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் 3580 எண்ணிக்கையிலான இரும்பிலான இரண்டுக்கு கட்டில்கள் மற்றும் 143 எண்ணிக்கையிலான தேக்கு மரத்தினாலான இரண்டடுக்கு கட்டில்கள் கொள்முதல் செய்ய மூடி முத்திரையிடப்பட்ட இரட்டை உறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் வரையறுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளி எண்	பொருள் விவரம்	ஒப்பந்தப்புள்ளி படிவம் அளிக்க கடைசி நாள்/நேரம்	ஒப்பந்தப்புள்ளி திறப்பு விவரம்	பிணை வைப்புத் தொகை ரூ.
08/2019–2020	பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதியில் தங்கி பயிலும் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் 3580 எண்ணிக்கையிலான இரும்பிலான இரண்டுக்கு கட்டில்கள் மற்றும் 143 எண்ணிக்கையிலான தேக்கு மரத்தினாலான இரண்டடுக்கு கட்டில்கள் வழங்குதல்.	09.04.2020 பிற்பகல் 3.00 மணி வரை	09.04.2020 பிற்பகல் 3.30 மணி	4,50,000/– (ரூபாய் நான்கு இலட்சம் மற்றும் ஐம்பதாயிரம் மட்டும்)

ஒப்பந்தப்புள்ளி படிவங்களை நேரில் பெற சென்னையில் மாற்றத்தக்க வகையில் **இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரகம், சென்னை–5** என்ற பெயருக்கு ரூ.560/–க்கான வரைவோலை செலுத்தி அரசு வேலை நாட்களில் முற்பகல் **10.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணிக்குள் 08 .04.2020** வரை நேரில் பெற்றுக் கொள்ளலாம். அஞ்சல் மூலம் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற விரும்புவோர் **31.03.2020–க்குள்** ரூ.672/–க்கான வரைவோலை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப்படிவத்தினை எவ்வித கட்டணமுமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளவும் மேலும் விவரங்களுக்கு தமிழக அரசின் www.tenders.tn.gov.in எனும் இணையதளத்தை காணவும்.

செ.ம.தொ.இ /1255 / ஒப்பந்தப்புள்ளி / 2020

துணை இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரகம், சேப்பாக்கம், சென்னை–5

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
சேலம் மாவட்டம்
ஓமலூர் ஊராட்சி ஒன்றியம்

சேலம் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய தரப்பில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக்காவலர் பணியிடங்களை நிரப்பிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இக்காலிபணியிடங்களுக்கான விபரம் இனசுழற்சி ஒதுக்கீடு, விண்ணப்பப் படிவம் மற்றும் பணி நியமனத்திற்கு விண்ணப்பிக்க தேவையான தகுதிகள் ஆகியவை இம்மாவட்டத்தின் **www.salem.nic.in** என்ற இணையதளத்தில் இடம் பெற்றுள்ளது. இப்பணியிடத்திற்கான விண்ணப்பங்கள் 09.03.2020 முதல் 30.03.2020 வரை மேற்படி இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 09.03.2020 முதல் 30.03.2020 பிற்பகல் 5.45 மணி வரை அலுவலக வேலை நேரத்தில் ஓமலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
ஓமலூர்.

வெ.ஆ.எண்.129/செ.ம.தொ.அ/சேலம்/2020

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
ஜெ.ஜெ.நகர் கோட்டம்

மூடி முத்திரையிடப்பட்ட விலை புள்ளி (ம) பொது ஏல அறிவிப்பு

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், ஜெ.ஜெ.நகர் கோட்டத்திற்குட்பட்ட அம்பத்தூர் திட்டம் பகுதி I & II-ல் (அயப்பாக்கம்) மற்றும் ஆவடி தன்னிறைவு வீட்டுமனைத்திட்டத்தில் (பருத்திப்பட்டு) கட்டப்பட்டுள்ள அம்மா திருமண மண்டபம் வருடாந்திர வாடகை, குறும விலையின் அடிப்படையில் (Lease Upset Price) நிர்ணயிக்கப்பட்டு மூடி முத்திரையிடப்பட்ட விலை புள்ளி (ம) பொது ஏலமுறையில் (Sealed Offer Cum Open auction) மூன்று வருடத்திற்கு குத்தகை விடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திட்டப்பகுதி	மனையின் பரப்பளவு (ச.மீ)	கட்டடத்தின் மொத்த பரப்பளவு (ச.மீ)	குறும விலை ஒரு வருடத்திற்கான ஒப்பந்த வாடகை (ரூபாய்)	விண்ணப்பத்துடன்குறும விலையில் செலுத்த வேண்டிய 15 சதவிகித தொகை (ரூபாய்)
அம்பத்தூர் திட்டம் பகுதி I & II-ல் (அயப்பாக்கம்)	2587.73	2425.76	ரூ.2,62,00,000/– (சரக்கு (ம) சேவை வரி நீங்கலாக)	ரூ.39,30,000/–
ஆவடி தன்னிறைவு திட்டம் (பருத்திப்பட்டு)	2230.85	1944.12	ரூ.2,29,00,000/– (சரக்கு (ம) சேவை வரி நீங்கலாக)	ரூ.34,35,000/–

ஏலம் நடைபெறும் நாள் : 09.04.2020

மேற்கண்ட சமூக நலக்கூடத்தின் விண்ணப்பப் படிவத்தின் விலை, விற்கப்படும் காலம் மற்றும் நிபந்தனைகள் போன்ற பிற விபரங்களை www.tnhb.tn.gov.in இணையதளத்தில் காணலாம். மேலும் அனைத்து விபரங்களுக்கு கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

செயற்பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர்,
ஜெ.ஜெ.நகர் கோட்டம்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
மூன்றாம் தளம், திருமங்கலம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய வணிக வளாகம்,
சென்னை – 600 101. தொலைபேசி எண். 26154577.

செ.ம.தொ.இ./ 389 /வணிகவளா/2020

கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்
சேலம் மாவட்டம்

சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய தரப்பில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் நிலையிலான பணியிடங்கள் நிரப்பிட தகுதியான நபர்களிடம் விண்ணப்பங்கள் வரவேற்று வெளியிடப்பட்ட கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களின் ந.க.எண்.212/2019/அ1 நாள்.19.11.2019 அறிக்கை நிர்வாக காரணங்களினால் இரத்து செய்யப்படுகிறது. மேற்படி பணியிடங்களுக்கான புதிய அறிவிக்கை பின்னர் வெளியிடப்படும்.

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
கொளத்தூர்

வெ.ஆ.எண்.140/செ.ம.தொ.அ/சேலம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
சேலம் மாவட்டம்
தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம்

சேலம் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றிய தரப்பில் காலியாகவுள்ள அலுவலக உதவியாளர் மற்றும் இரவு காவலர் பணியிடங்களை நிரப்பிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இக்காலிபணியிடத்திற்கான விபரம் இனசுழற்சி ஒதுக்கீடு, விண்ணப்பப் படிவம் மற்றும் பணி நியமனத்திற்கு விண்ணப்பிக்க தேவையான தகுதிகள் ஆகியவை இம்மாவட்டத்தின் **www.salem.nic.in** என்ற இணையதளத்தில் இடம் பெற்றுள்ளது. இப்பணியிடத்திற்கான விண்ணப்பங்கள் 09.03.2020 முதல் 30.03.2020 வரை மேற்படி இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 09.03.2020 முதல் 30.03.2020 பிற்பகல் 5.45 வரை அலுவலக வேலை நேரத்தில் தாரமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
தாரமங்கலம்.

வெ.ஆ.எண்.138/செ.ம.தொ.அ/சேலம்/2020

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
சேலம் மாவட்டம்

சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், ஒன்றிய தரப்பில் காலியாகவுள்ள அலுவலக உதவியாளர் / இரவுக்காவலர் நிலையிலான பணியிடங்கள் நிரப்பிட தகுதியான நபர்களிடம் விண்ணப்பங்கள் வரவேற்று வெளியிடப்பட்ட மேச்சேரி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களின் ந.க.எண்.3442/2019/அ1 நாள்.18.11.2019 அறிக்கை நிர்வாக காரணங்களினால் இரத்து செய்யப்படுகிறது. மேற்படி பணியிடங்களுக்கான புதிய அறிவிக்கை பின்னர் வெளியிடப்படும்.

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
மேச்சேரி

வெ.ஆ.எண்.113/செ.ம.தொ.அ/சேலம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
சேலம் மாவட்டம்

சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் அரசு தரப்பின் கீழ் ஊதியம் பெறும் பணியிடங்களில் காலியாகவுள்ள ஈப்பு ஓட்டுநர், அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக்காவலர் நிலையிலான பணியிடங்களை நிரப்பிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இக்காலிபணியிடங்களுக்கான விவரம் இனசுழற்சி ஒதுக்கீடு, விண்ணப்பப் படிவம் மற்றும் பணி நியமனத்திற்கு விண்ணப்பிக்க தேவையான தகுதிகள் ஆகியவை இம்மாவட்டத்தின் **www.salem.nic.in** என்ற இணையதளத்தில் இடம் பெற்றுள்ளது. இப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் 09.03.2020 முதல் 30.03.2020 வரை வேலை நேரத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி), அறை எண்.210, 2–வது தளம், மாவட்ட ஆட்சியரகம், சேலம்–636 001 என்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

ஒம்/ கே.செல்வம்
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),
சேலம்

வெ.ஆ.எண்.100/செ.ம.தொ.அ/சேலம்/2020

இந்தியாவில் இந்து, இஸ்லாமியர்களின் டிஎன்ஏ ஒன்றுதான்

திருச்சி, மார்ச் 7: இந்தியாவில் இந்து, இஸ்லாமியர்களின் டிஎன்ஏ ஒன்றுபோலதான் உள்ளது என பாஜக மாநிலங்களவை உறுப்பினர் சுப்பிரமணியன் சுவாமி சனிக்கிழமை தெரிவித்தார்.

திருச்சி தேசியக்கல்லூரியின் 101ஆவது கல்லூரி தினவிழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக சுப்பிரமணியன் சுவாமி கலந்துகொண்டு பேசியது: இளைஞர்கள் நுண்ணறிவுத்திறனோடு செயலாற்ற வேண்டும். இதற்காக, நெறிமுறை, அறிவியல், உத்வேகம், சமூகம், ஆன்மிகம் ஆகிய வற்றில் உள்ள நுண்ணறிவைபுரிந்துக்கொண்டு, மேம்படுத்திக்கொள்ள வேண்டும். இதன்மூலமே, வெற்றி, தோல்வி



ஆகிய இரண்டையும் சமமாக ஏற்று, அடுத்த நகர்வை நோக்கி செல்ல முடியும்.

ஆய்வாளர்களின் கூற்றுபடி, கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை வாழும் இந்தியர்கள் அனைவரும் ஒன்றுதான். குறிப்பாக, இந்துக்கள், இஸ்லாமியர்கள், பல்வேறு சமூக அமைப்பினர் எனயாராக இருந்தாலும், அவர்களின் டிஎன்ஏ (உயிரி மூலக்கூறு) ஒத்தவையாகவே உள்ளது என கண்டறியப்பட்டுள்ளது என்றார்.

மகளிர் தினம்: தலைவர்கள் வாழ்த்து

சென்னை, மார்ச் 7: சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, பாமக நிறுவனர் ராமதாஸ் உள்ளிட்டத் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

வைகோ (மதிமுக): சங்க காலத்திலேயே பாடல்கள் புனைகின்ற பெண்பாற் புலவர்கள் இருந்தார்கள். 20-ஆம் நூற்றாண்டில் பெண் உரிமைக்காக சங்கநாதம் செய்தவர் பெரியார். அவரது துணைவியார் நாகம்மாளும், சகோதரி கண்ணம்மாளும் மதுவை எதிர்த்துப் போராடினார்கள். கருணாநிதி முதல்வராக இருந்தபோது பெண்களுக்கும் சொத்துரிமை உண்டு என்று சட்டம் இயற்றினார். பெண்களுக்கான சமத்துவத்தையும், உரிமைகளையும் பெறும் நிலையை உருவாக்க மகளிர் நாளில் சூளுரைப்போம்.

ராமதாஸ் (பாமக): போர்முனையில் ராணுவத்தைத் தலைமையேற்று நடத்தும் உரிமையை பெண்களுக்கு வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சட்டப்பேரவை மற்றும் நாடாளுமன்றங்களில் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்குவது காலத்தின் கட்டாயமாகும்.

தொல்.திருமாவளவன் (விசிக): தற்போது இந்தியாவில் உள்ள பெண்களில் 50 சதவீதத்தினருக்கும் மேல் ரத்தசோகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டைத் தாய்நாடு என அழைப்பதால் மட்டும் பெண்கள் முன்னேறி விட மாட்டார்கள். அவர்களது ஆரோக்கியத்துக்கான திட்டங்களை முன்னுரிமை கொடுத்து செயல்படுத்த வேண்டும்.

கே.பாலகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட்): ஆணுக்கு பெண் நிகரென்று கொட்டு முரசே என்ற பாரதியின் வரிகளுக்கு ஏற்ப குடும்பம், சமூகம், ஊடகம், கல்வித் திட்டம், அரசு நடவடிக்கைகள், அமைப்புகள் என அனைத்திலும் பாலின சமத்துவத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளை, போராட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

அன்புமணி ராமதாஸ் (பாமக): அனைத்துத் துறைகளிலும் ஆண்களுக்கு இணையாக பெண்களுக்கும் பணி வழங்கப்பட வேண்டும். இதற்காக அனைத்து நிலைகளிலும் பாலின நீதியை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இரா.முத்தரசன் (சிபிஐ): குடியுரிமை திருத்த சட்டத்தை எதிர்த்து நடைபெறும் ஜனநாயக போராட்டத்தில் பெண்களின் போர்க்குணம் மறுமலர்ச்சிக்கு வித்திடுவதாக அமைந்துள்ளது. அதிகாரத்தில் பெண்கள் சமபங்கு பெறும் போதுதான் பாலின சமத்துவம் காண இயலும். அந்த இலக்கு நோக்கி போராடி வரும் பெண்களுடன் இணைந்து போராடுவோம்.

ஜி.கே.வாசன் (தமாகா): பெண்கள் தோல்விகளைக் கண்டு துவண்டுவிடாமல் எதிர்கொண்டு வீட்டுக்காகவும் நாட்டுக்காகவும் வாழ்வது பாராட்டுக்குரியது. பெண்களுக்கு உரிய உரிமைகள் முழுமையாக கிடைக்க வேண்டும்.

IDBI BANK

ஐடிபிஐ வங்கி லிட்., சேலம் கிளை
K.T. டவர்ஸ், தரைத் தளம், எண்.111, ஓமலூர் மெயின் ரோடு, நால் ரோடு, சேலம், தமிழ்நாடு

சுவாதீன அறிவிப்பு

[விதி 8(1)] (அசையா சொத்திற்காக)

2002 ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச் சட்டத்தின் (சர்பாஸி சட்டம்) (54/2002) பிரிவு 13 (12) 2002 பிணையநலன் அமலாக்கம் விதிகளின் விதி 3ன்கீழ், **கடன்தாரர்: M/s.K.வெங்கட்ராமன் & கோ. பிரதிநிதிகளாக அதன் பங்குதாரர்கள் திரு.K.வெங்கட்ராமன், திரு.V.தினேஷ் குமார் மற்றும் திருமதி.V.பிரபாவதி** என்பவர்களுக்கு **IDBI வங்கி லிட் –ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் **30.12.2016** தேதியில் கேட்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை **ரூ.30,22,00,000/– (ரூபாய் முப்பது கோடியே இருபத்து இரண்டு லட்சம் மட்டும்)** மற்றும் **02.11.2016** தேதியிலிருந்து பின்வட்டி பிறசெலவுகளுடன் அறிவிப்பு பெற்றுக் கொண்ட 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

கடன்தாரர் தனது **24.02.2017** நாளிட்ட கடிதத்தில் சர்வே எண்கள். 255/3B, 255/4, 255/5, 255/3A, 272/1A, 257/4A, 255/2C3B, 254/2C3A, 274/1A1A, 276/2B4A, 276/2B4B, 276/2B4C, 276/1B, 276/2A3B, 273/1, 273/2, 255/2 ஆகியவற்றில் உள்ள நிலங்கள் சுத்தமான விவசாய நிலம் எனவும், எனவே சர்பேசிச் சட்டம் பிரிவு 13(3)ன் கீழ் குறிப்பிட்ட நிலங்கள் சர்பேசிச் சட்டம் 2002ன் பிரிவு 31(i)யின் கீழ் சர்பேசி நடவடிக்கைகளினின்று அவை விலக்களிக்கப்பட வேண்டும் என்றும் ஆட்சேபணையை தெரிவித்தார். நாங்கள் எமது பதில் **13.03.2017** நாளிட்ட கடிதத்தில் வங்கி அத்தகை விவசாய நிலங்களின் மீது சர்பேசிச் சட்டத்தின் கீழ் மேல் நடவடிக்கையை தொடராது எனத் தெரிவித்து இருந்தோம்.

கடன்தாரர் எமது **30.12.2016** நாளிட்ட கேட்பு அறிக்கையில் கோரப்பட்ட தொகையைத் திருமபச் செலுத்தத் தவறிய காரணத்தால், சட்டப்பிரிவு 13, உட்பிரிவு (4)ன் கீழும், பிணையநலன் அமலாக்க விதிகள் 2002 உடன் சேர்த்து சுவாதீன அறிவிப்பை வெளியிட்டு **26.04.2017** அன்று அவரிடமும், பொதுமக்களிடமும் அறிவிக்கப்பட்டது. ஐடிபிஐ வங்கி, அறிவிப்பில் கண்ட சொத்தை சுவாதீனம் மேற்கொண்டது. **சுவாதீன அறிவிப்பு 01.05.2017 நாளிட்ட செய்தித்தாளில் வெளியானது.**

மாவட்ட நடுவர் உத்தரவுகளின்படி **வெங்கட்ராயர் (ஜவ்வரிசி ஆலை) சேகோ ஃபேக்டரி மற்றும் K.வெங்கட்ராமன் அன் கோ** தொழிற்சாலை வளாகத்திலுள்ள பெரும்பங்கு சொத்துக்கள் வருவாய் அலுவலர்கள் முன்னிலையில் **21.06.2019** அன்று கொள்நிலை சுவாதீனம் மேற்கொள்ளப்பட்டது. **26.04.2017** நாளிட்ட சுவாதீன அறிவிப்பில் தொழிற்சாலை வளாகம் மற்றும் குடியிருப்புக் கட்டிடம் ஆகிய சில பகுதி சொத்துக்கள் சேர்க்கப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. **26.04.2017** அன்று கடன்தாரர் சுய விருப்பத்தின் பேரில் வேண்டுமென்றே தொழிற்சாலை வளாகத்தின் சில பகுதி நிலங்களை விவசாய நிலங்கள் என்றும் குடியிருப்புக் கட்டிடங்களை பண்ணை வீடுகள் எனவும் தமது 24.02.2017 நாளிட்ட சர்பேசிச் சட்டம் 13(3)ன் கீழான கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். எனவே இந்த சுவாதீன அறிவிப்பு பிரிவு 8(1)ன் கீழ் மீதமுள்ள தொழிற்சாலைக் கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புக் கட்டிடங்களின் பகுதிக்கு என வெளியிடப்படுகிறது.

கடன்தாரர்கள் அவ்வாறு திருப்பிச் செலுத்த தவறிவிட்டபடியால் கடன்தாரர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பது என்னவென்றால் (சுத்தமான விவசாய நிலம் தவிர்த்து) மேற்படி சட்டம் பிரிவு 13(4) ன் விதி 8 ல் சொல்லப்பட்டுள்ள விதிகளின் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி 04.03.2020 தேதியில் கையகப்படுத்தியுள்ளார்.

குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களும் இந்த சொத்தின் மீது எந்தவித தொடர்பும் மேற்கொள்ளக் கூடாது என்றும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டால் அது **ஐடிபிஐ வங்கிக்கு** மேற்கண்ட கடன்தாரர்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, **ரூ.38,17,,00,000/– (ரூபாய் முப்பத்து எட்டு கோடியே பதினேழு லட்சம் மட்டும்)** மற்றும் **01.10.2018** தேதியிலிருந்து பின் வட்டிக்கும் இதர செலவிற்கும் உட்பட்டது என்றும் இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறது.

பிணையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதில் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளும்படி, சட்டத்தின் பிரிவு 13(8)க்கு கடன் வாங்கியவரின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையாச் சொத்து விபரம்

(ஐடிபிஐ வங்கியின் கொள்நிலை சுவாதீனத்தின் கீழ் ஏற்கனவே உள்ள சொத்துக்கள் தவிர்த்து)

இனம் எண். 1 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராமத்தில் சர்வே எண். 273/1ல் திருமதி.V.பிரபாவதி விலைக்கு முழுவதும் சொந்தமான 0.72.5 எக்டர் (1.79 ஏக்கர்) நிலத்தின் **எல்லைகள் :** தென்வடல் இட்டேரி மற்றும் கால்வாய்க்குக் கிழக்கு, K.கருப்பண்ணனுக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு மற்றும் தெற்கு, சர்வே எண். 273/2ல் கீழே இனம் 2ல் சொல்லப்பட்ட சொத்துக்கு வடக்கு, மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட மொத்தம் 1.79 ஏக்கர் நிலம் முழுமையும் அதிலுள்ள ஒரு கிணறு, 3HP மோட்டார் பம்ப் செட், ஓலைக் கொட்டகை மங்களூர் ஓடு வேய்ந்த மற்றும் RCC தார்சு கூரை கொண்ட கட்டிடங்களும் கட்டிடப்பொருட்கள், கதவுகள், படிகள், மின்சார இணைப்புகள், அதன் காப்புத் தொகை மற்றும் பிற அனைத்து உரிமைகள், இணைப்பு உரிமைகள் சேர்ந்த சொத்து.

இனம் எண். 2 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண். 237/2ல் விலைக்கு வாங்கியதால் திருமதி.V.பிரபாவதிக்குச் சொந்தமான 0.64.5 எக்டர் (1.59 ஏக்கர்) நிலத்தின் **எல்லைகள் :** தென்வடல் இட்டேரி மற்றும் கால்வாய்க்குக் கிழக்கு, V.தினேஷ்குமாருக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு, K.வெங்கட்ராமனுக்குச் சொந்தமான சொத்துக்கு வடக்கு மற்றும் சர்வே எண்.273/1ல் மேலே சொல்லப்பட்ட இனம் 1 சொத்துக்குத் தெற்கு, மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட மொத்தம் 1.59 ஏக்கர் முழுமையும் அதன் இணைப்பு உரிமைகள் மற்றும் பிற உரிமைகள், சேர்ந்த சொத்து. ஆக இனம் 1 மற்றும் 2ன் மொத்த அளவு 3.38 ஏக்கர் ராசிபுரம் ஊராட்சி ஒன்றிய அரசப்பாளையம் ஊராட்சி எல்லைக்குள் உள்ளதாகும்.

இனம் எண்.3 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்கவேரி கிராம சர்வே எண். 276/2 ல் உள்ள 2.25 ஏக்கர் நிலவரித்திட்டப் பதிவேட்டின் மறுசர்வே எண்.276/2A3ல் உள்ள 1.20 ஏக்கரில் தென்கிழக்கில் அடங்கிய நிலம் உட்பிரிவின் பின்னர் 276/2A3B யில் உள்ள 0.22 ஏக்கரில் திரு. வெங்கட்ராமனுக்கு முழுவதும் சொந்தமான 0.04 ½ ஏக்கர் நிலத்தின் **எல்லைகள் :** சர்வே எண்.276/2A3 நிலத்துக்குக் கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு, சர்வே எண்.276/2B4 நிலத்துக்கு வடக்கு, சர்வே எண். 272/6A யில் உள்ள வெங்கட்ராமனுக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு, மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட 0.04½ ஏக்கர் விஸ்தீரண நிலமும் அதிலடங்கிய ஒரு ஆழ்துளைக் கிணறும் அதன் மின்சாதனங்களும் இணைப்பு காப்புத் தொகையுடன் பிற அனைத்து உரிமைகள் மற்றும் இணைப்புகள் சேர்ந்த சொத்து.

இனம் எண்.4– நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண். 276/1ல் தற்போதைய உட்பிரிவு சர்வே எண்.276/1B யில் உள்ள 0.10 ஏக்கர் கிணற்றுப்பகுதி நிலத்தில் பொதுவான பாதிப்பங்காகிய 0.05 ஏக்கர் மற்றும் 5HP மோட்டார் பம்ப் செட், மின் இணைப்பு, சாதனங்கள் மற்றும் அனைத்து இணைப்பு உரிமைகள் பிற இணைப்புகள், உரிமைகள் சேர்ந்த சொத்து.

இனம் எண்.5 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண். 255/5ல் உள்ள பு.எக்டர் 0.53.0 ஏக்கர் 1.31 தீர்வை ரூ. 2.05, திரு. V.தினேஷ்குமாருக்குச் சொந்தமான சொத்து. இதன் **எல்லைகள்:** K.வெங்கட்ராமனுக்குச் சொந்தமான நிலத்துக்குக் கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு, வண்டித்தடத்துக்கு வடக்கு, இவ்வெல்லைகளுக்குபட்பட்ட 1.31 ஏக்கர் நிலம் முழுவதும் மற்றும் அனைத்து இணைப்புகளும், உரிமைகளும் சேர்ந்த சொத்து.

இனம் எண்.6 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண். 254/2C3 ல் உள்ள 1.04.5 புன்செய் எக்டர், 2.58 ஏக்கர் தீர்வை ரூ.4.05 தற்போதைய புதிய சர்வே மற்றும் உட்பிரிவு எண்.254/2C3B யில் உள்ள 0.48.5 புன்செய் எக்டர், 1.20 ஏக்கர் தீர்வை ரூ.1.89 நிலம் திரு.V.தினேஷ்குமாருக்குச் சொந்தமானது. இதன் **எல்லைகள் :** K.வெங்கட்ராமன் மற்றும் K. கருப்பண்ணனுக்குச் சொந்தமான நிலத்துக்குக் கிழக்கு, வண்டித்தடத்துக்கு மேற்கு, K.வெங்கட்ராமனுக்குச் சொந்தமான நிலத்துக்கு வடக்கு, K.கருப்பண்ணனுக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு, இவ்வெல்லைகளுக்குட்பட்ட 1.20 ஏக்கர் நிலம் முழுவதும் அதன் பிற உரிமைகள், இணைப்புகள் சேர்ந்தது.

இனம் எண்.7 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண்.255ல் உள்ள 8.76 ஏக்கர் தீர்வை ரூ.13.67 இதில் உட்பிரிவு சர்வே எண்.255/2ல் உள்ள 0.79 புன்செய் ஏக்கர் தீர்வை ரூ.1.23 திரு.K.வெங்கட்ராமனுக்குச் சொந்தமானது. இச்சொத்தின் **எல்லைகள் :** சரசுவுக்குச் சொந்தமான நிலத்துக்குக் கிழக்கு, வெங்கட்ராமனுக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு மற்றும் வடக்கு, வரதராஜுவுக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு, மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட 0.79 ஏக்கர் நிலம் முழுவதும் அதன் பிற உரிமைகள், இணைப்புகள் சேர்ந்தது.

இனம் எண்.8 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண்.255ல் 8.76 ஏக்கர் தீர்வை ரூ. 13.67 இதில் உட்பிரிவு சர்வே எண்.255/4ல் உள்ள பு.ஏக்கர் 0.57 தீர்வை ரூ. 0.89 திரு. K.வெங்கட்ராமனுக்குச் சொந்தமானது. இச்சொத்தின் **எல்லைகள் :** K.வெங்கட்ராமனுக்குச் சொந்தமான நிலத்துக்குக் கிழக்கு, வடக்கு மற்றும் தெற்கு, ராமசாமிக் கவுண்டருக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு, மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட 0.57 ஏக்கர் நிலம் முழுவதும் அதன் பிற உரிமைகள் இணைப்புகள் சேர்ந்தது.

இனம் எண்.9– நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண்.257/4ல் உள்ள 2.41 ஏக்கர் உட்பிரிவு சர்வே எண். 257/4A யில் உள்ள புன்செய் நிலம் வெங்கட்ராமன், ராமசாமி கவுண்டர் மற்றும் கந்தசாமி கவுண்டருக்குச் சொந்தமான சர்வே எண். 255/3, 255/5 மற்றும் 255/6 நிலங்களுக்குக் கிழக்கு, சர்வே எண்.257/6ல் உள்ள கருப்பண்ணகவுண்டர் நிலங்களுக்கு மேற்கு, சர்வே எண்.272/1B யில் உள்ள மீத நிலம் மற்றும் கால்வாய்க்கு வடக்கு, மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட பு.ஏக்கர் 1.20 தீர்வை ரூ.1.66 நிலம் முழுமையும் அத்துடனான அனைத்து உரிமைகள், இணைப்புகள் சேர்ந்தது.

இனம் எண்.10 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண்.272/1ல் உள்ள பு.ஏக்கர் 4.18 இதில் வடபுறப்பகுதியிலடங்கிய பு.ஏக்கர் 0.07 நிலம் தற்போதைய சர்வே எண்.272/1A யில் திரு.K. வெங்கட்ராமனுக்குச் சொந்தமாக உள்ள சொத்தின் **எல்லைகள் :** சர்வே எண். 272/1B யில் உள்ள நிலத்துக்குக் கிழக்கு, மற்றும் தெற்கு, கருப்பண்ணகவுண்டருக்குச் சொந்தமாக சர்வே எண்.272/1C யில் உள்ள நிலத்துக்கு மேற்கு, சர்வே எண்.257/4B மற்றும் 254/4A யில் கருப்பண்ண கவுண்டர் மற்றும் ஒருவருக்குச் சொந்தமாக உள்ள நிலத்துக்கு வடக்கு, மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட பு.ஏக்கர் 0.07 இதில் பொதுவானப் பாதிபங்கு 0.03½ ஏக்கர் நிலத்துடன் அதிலுள்ள 5 HP மோட்டார் மோட்டார் பம்ப்செட், மின்சார இணைப்பு மற்றும் வேலைபாடுகள் காப்புத் தொகையுடன் பிற அனைத்து உரிமைகள் இணைப்புகள் சேர்ந்த சொத்து.

இனம் எண். 11 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண்.276/2B4A யில் உள்ள 0.39.0 எக்டருக்குச் சமமான 0.96 ஏக்கர் நிலம் திரு.K.வெங்கட்ராமனுக்கு முழுவதும் சொந்தமானது. இதன் **எல்லைகள் :** சர்வே எண்.276/2B3 நிலத்துக்குக் கிழக்கு, வெங்கட்ராமனுக்குச் சொந்தமாக உள்ள சர்வே எண்.276/2B4ல் உள்ள நிலத்துக்கு மேற்கு, சர்வே எண்.276/2B5 ல் நல்லம்மாள் மற்றும் பிறருக்குச் சொந்தமாக உள்ள நிலத்துக்கு வடக்கு, சர்வே எண். 276/2A3 யில் காளியப்பகவுண்டருக்குச் சொந்தமாக உள்ள நிலத்துக்குத் தெற்கு, இவ்வெல்லைகளுக்குட்பட்ட புன்செய் ஏக்கர் 0.96 தீர்வை ரூ. 2.19 நிலம் முழுவதும் அதன் அனைத்து பிற உரிமைகள் இணைப்புகள் சேர்ந்த சொத்து.

இனம் எண். 12 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண். 276/2B4Cயில் உள்ள 0.05.0 எக்டர் இதற்கான 0.12 ஏக்கர் நிலம் திரு.K.வெங்கட்ராமனுக்கு முழுவதும் சொந்தமான இந்நிலத்தின் **எல்லைகள் :** K.வெங்கட்ராமனுக்குச் சொந்தமாக சர்வே எண். 276/2B4Bயில் உள்ள நிலத்துக்குக் கிழக்கு, சர்வே எண். 271 தரிசு நிலத்துக்கு மேற்கு, சர்வே எண். 276/4 வண்டித்தடத்துக்கு வடக்கு, சர்வே எண். 276/2A3ல் உள்ள காளியப்ப கவுண்டருக்குச் சொந்தமான நிலங்களுக்குத் தெற்கு. இவ்வெல்லைகளுக்குட்பட்ட 0.12 ஏக்கர் தீர்வை ரூ.0.28 நிலம் முழுவதும் அதன் பிற உரிமைகள், இணைப்புகள் சேர்ந்த சொத்து.

இனம் எண். 13 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண். 276/2B4, உட்பிரிவின் பின்னர் சர்வே எண். 276/2B4Bயில் திரு.K.வெங்கட்ராமனுக்கு முழுவதும் சொந்தமான 0.02.0 எக்டர் அல்லது 0.04½ ஏக்கர் நிலத்தின் **எல்லைகள் வருமாறு :** ராமசாமி கவுண்டரின் மீத நிலங்களுக்குக் கிழக்கு மற்றும் மேற்கு, ஒடுவங்குறிச்சி செல்லும் வண்டித்தடத்துக்கு வடக்கு, காளியப்ப கவுண்டர் நிலத்துக்குத் தெற்கு. மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட 0.04½ ஏக்கர் நிலம் முழுவதும் அதன் பிற உரிமைகள், இணைப்புகள் சேர்ந்த சொத்து.

இனம் எண். 14 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராமத்தில்,
1. பழைய சர்வே எண். 254/2, புதிய சர்வே எண். 254/2C3 உட்பிரிவின் படி சர்வே எண். 254/2C3Aயில் உள்ள 1.38 ஏக்கர் நிலத்தின் **எல்லைகள் :** ரோட்டுக்குக் கிழக்கு, கருப்பண்ணனுக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு, K.வெங்கட்ராமனுக்குச் சொந்தமான நிலத்துக்கு வடக்கு மற்றும் கருப்பண்ணனுக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு.
2. பழைய சர்வே எண். 255, புதிய சர்வே எண். 255/3Bயில் உள்ள 4.24 ஏக்கர் நிலத்தின் **எல்லைகள் :** நடேசகவுண்டருக்குச் சொந்தமான நிலத்துக்குக் கிழக்கு, வெங்கட்ராமனுக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு, ராமசாமி கவுண்டர் மற்றும் வெங்கட்ராமனுக்குச் சொந்தமான நிலத்துக்கு வடக்கு, சரசு மற்றும் வெங்கட்ராமனுக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு.
3. பழைய சர்வே எண். 274/1, புதிய சர்வே எண். 274/1A1Aல் உள்ள 4.53 ஏக்கர் நிலத்தின் **எல்லைகள் :** வண்டித்தடத்துக்குக் கிழக்கு, காளியப்பக் கவுண்டர் மற்றும் கருப்பண்ணனுக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு, ராமசாமி கவுண்டருக்குச் சொந்தமான நிலத்துக்கு வடக்கு மற்றும் காளியப்பக் கவுண்டர் மற்றும் தனசேகரனுக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு.

இனம் எண். 15 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண். 273/3A2ல் உள்ள புன்செய் எக்டர் 1.54.0 = 3.80 ஏக்கர். இதிலடங்கிய 0.54 ஏக்கர் நிலம் முழுவதும் திரு.வெங்கட்ராமனுக்குச் சொந்தமானது. இச்சொத்தின் **எல்லைகள் :** சர்வே எண். 273/3A2ல் உள்ள மீத நிலத்துக்கு கிழக்கு மற்றும் தெற்கு, K.காளியப்ப கவுண்டருக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு, சர்வே எண். 274 நிலத்துக்கு வடக்கு, மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட 0.54 ஏக்கர் நிலம் அதன் அனைத்து இணைப்புகளும், உரிமைகளும் சேர்ந்த சொத்து.

மேற்குறிப்பிட்ட குடியிருப்புக் கட்டிடங்கள், தொழிற்சாலைக் கட்டுமானங்கள்/ கொட்டகைகள்/ஆலைகள் மற்றும் இயந்திரங்கள் கட்டுமானங்கள் உள்ளிட்ட மேற்சொன்ன சொத்துகளனைத்தும் விவசாயத்திற்கென உபயோகப்படுத்தப்படும் நிலங்கள் தவிர்த்த சொத்துகளின் பகுதியாகும்.

ஒம்/–
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஐடிபிஐ வங்கி லிட்.,

இடம் : சேலம்
தேதி : 04.03.2020

IDBI BANK

ஐடிபிஐ வங்கி லிட்., சேலம் கிளை
K.T. டவர்ஸ், தரைத் தளம், எண்.111, ஓமலூர் மெயின் ரோடு, நால் ரோடு, சேலம், தமிழ்நாடு

சுவாதீன அறிவிப்பு

[விதி 8(1)] (அசையா சொத்திற்காக)

2002 ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச் சட்டத்தின் (சர்பாஸி சட்டம்) (54/2002) பிரிவு 13 (12) 2002 பிணையநலன் அமலாக்கம் விதிகளின் விதி 3ன்கீழ், **கடன்தாரர்: M/s.வெங்கட்ராயர் சேகோ ஃபேக்டரி, பிரதிநிதிகளாக அதன் பங்குதாரர்கள் திரு.K.வெங்கட்ராமன், திரு.V.தினேஷ் குமார் மற்றும் திருமதி.V.காயத்ரி** என்பவர்களுக்கு **IDBI வங்கி லிட் –ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் **30.12.2016** தேதியில் கேட்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை **ரூ.26,88,00,000/– (ரூபாய் இருபத்து ஆறு கோடியே எண்பத்து எட்டு லட்சம் மட்டும்)** மற்றும் **02.11.2016** தேதியிலிருந்து பின்வட்டி பிறசெலவுகளுடன் அறிவிப்பு பெற்றுக் கொண்ட 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

கடன்தாரர் தனது **24.02.2017** நாளிட்ட கடிதத்தில் சர்வே எண்கள். 255/3B, 255/4, 255/5, 255/3A, 272/1A, 257/4A, 255/2C3B, 254/2C3A, 274/1A1A, 276/2B4A, 276/2B4B, 276/2B4C, 276/1B, 276/2A3B, 273/1, 273/2, 255/2 ஆகியவற்றில் உள்ள நிலங்கள் சுத்தமான விவசாய நிலம் எனவும், எனவே சர்பேசிச் சட்டம் பிரிவு 13(3)ன் கீழ் குறிப்பிட்ட நிலங்கள் சர்பேசிச் சட்டம் 2002ன் பிரிவு 31(i)யின் கீழ் சர்பேசி நடவடிக்கைகளினின்று அவை விலக்களிக்கப்பட வேண்டும் என்றும் ஆட்சேபணையை தெரிவித்தார். நாங்கள் எமது பதில் **13.03.2017** நாளிட்ட கடிதத்தில் வங்கி அத்தகை விவசாய நிலங்களின் மீது சர்பேசிச் சட்டத்தின் கீழ் மேல் நடவடிக்கையை தொடராது எனத் தெரிவித்து இருந்தோம்.

கடன்தாரர் எமது **30.12.2016** நாளிட்ட கேட்பு அறிக்கையில் கோரப்பட்ட தொகையைத் திருமபச் செலுத்தத் தவறிய காரணத்தால், சட்டப்பிரிவு 13, உட்பிரிவு (4)ன் கீழும், பிணையநலன் அமலாக்க விதிகள் 2002 உடன் சேர்த்து சுவாதீன அறிவிப்பை வெளியிட்டு **26.04.2017** அன்று அவரிடமும், பொதுமக்களிடமும் அறிவிக்கப்பட்டது. ஐடிபிஐ வங்கி, அறிவிப்பில் கண்ட சொத்தை சுவாதீனம் மேற்கொண்டது. **சுவாதீன அறிவிப்பு 01.05.2017 நாளிட்ட செய்தித்தாளில் வெளியானது.**

மாவட்ட நடுவர் உத்தரவுகளின்படி **வெங்கட்ராயர் (ஜவ்வரிசி ஆலை) சேகோ ஃபேக்டரி மற்றும் K.வெங்கட்ராமன் அன் கோ** தொழிற்சாலை வளாகத்திலுள்ள பெரும்பங்கு சொத்துக்கள் வருவாய் அலுவலர்கள் முன்னிலையில் **21.06.2019** அன்று கொள்நிலை சுவாதீனம் மேற்கொள்ளப்பட்டது. **26.04.2017** நாளிட்ட சுவாதீன அறிவிப்பில் தொழிற்சாலை வளாகம் மற்றும் குடியிருப்புக் கட்டிடம் ஆகிய சில பகுதி சொத்துக்கள் சேர்க்கப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. **26.04.2017** அன்று கடன்தாரர் சுய விருப்பத்தின் பேரில் வேண்டுமென்றே தொழிற்சாலை வளாகத்தின் சில பகுதி நிலங்களை விவசாய நிலங்கள் என்றும் குடியிருப்புக் கட்டிடங்களை பண்ணை வீடுகள் எனவும் தமது **24.02.2017** நாளிட்ட சர்பேசிச் சட்டம் 13(3)ன் கீழான கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். எனவே இந்த சுவாதீன அறிவிப்பு பிரிவு 8(1)ன் கீழ் மீதமுள்ள தொழிற்சாலைக் கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புக் கட்டிடங்களின் பகுதிக்கு என வெளியிடப்படுகிறது.

கடன்தாரர்கள் அவ்வாறு திருப்பிச் செலுத்த தவறிவிட்டபடியால் கடன்தாரர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பது என்னவென்றால் (சுத்தமான விவசாய நிலம் தவிர்த்து) மேற்படி சட்டம் பிரிவு 13(4) ன் விதி 8 ல் சொல்லப்பட்டுள்ள விதிகளின் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி 04.03.2020 தேதியில் கையகப்படுத்தியுள்ளார்.

குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களும் இந்த சொத்தின் மீது எந்தவித தொடர்பும் மேற்கொள்ளக் கூடாது என்றும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டால் அது **ஐடிபிஐ வங்கிக்கு** மேற்கண்ட கடன்தாரர்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, **ரூ.33,90,00,000/– (ரூபாய் முப்பத்து மூன்று கோடியே தொண்ணூற்று லட்சம் மட்டும்)** மற்றும் **01.10.2018** தேதியிலிருந்து பின் வட்டிக்கும் இதர செலவிற்கும் உட்பட்டது என்றும் இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறது.

பிணையமாக்கப்பட்ட சொத்துக்களை மீட்பதில் கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ளும்படி, சட்டத்தின் பிரிவு 13(8)க்கு கடன் வாங்கியவரின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையாச் சொத்து விபரம்

(ஐடிபிஐ வங்கியின் கொள்நிலை சுவாதீனத்தின் கீழ் ஏற்கனவே உள்ள சொத்துக்கள் தவிர்த்து)

இனம் எண். 1 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராமத்தில் சர்வே எண்.273/1ல் திருமதி.V.பிரபாவதி விலைக்கு வாங்கிய முழுவதும் சொந்தமான 0.72.5 எக்டர் (1.79 ஏக்கர்) நிலத்தின் **எல்லைகள் :** தென்வடல் இட்டேரி மற்றும் கால்வாய்க்குக் கிழக்கு, K.கருப்பண்ணனுக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு மற்றும் தெற்கு, சர்வே எண்.273/2ல் கீழே இனம் 2ல் சொல்லப்பட்ட சொத்துக்கு வடக்கு, மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட மொத்தம் 1.79 ஏக்கர் நிலம் முழுமையும் அதிலுள்ள ஒரு கிணறு, 3HP மோட்டார் பம்ப் செட், ஓலைக் கொட்டகை மங்களூர் ஓடு வேய்ந்த மற்றும் RCC தார்சு கூரை கொண்ட கட்டிடங்களும் கட்டிடப்பொருட்கள், கதவுகள், படிகள், மின்சார இணைப்புகள், அதன் காப்புத் தொகை மற்றும் பிற அனைத்து உரிமைகள், இணைப்பு உரிமைகள் சேர்ந்த சொத்து.

இனம் எண். 2 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண். 237/2ல் விலைக்கு வாங்கியதால் திருமதி.V.பிரபாவதிக்குச் சொந்தமான 0.64.5 எக்டர் (1.59 ஏக்கர்) நிலத்தின் **எல்லைகள் :** தென்வடல் இட்டேரி மற்றும் கால்வாய்க்குக் கிழக்கு, V.தினேஷ்குமாருக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு, K.வெங்கட்ராமனுக்குச் சொந்தமான சொத்துக்கு வடக்கு மற்றும் சர்வே எண்.273/1ல் மேலே சொல்லப்பட்ட இனம் 1 சொத்துக்குத் தெற்கு, மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட மொத்தம் 1.59 ஏக்கர் முழுமையும் அதன் இணைப்பு உரிமைகள் மற்றும் பிற உரிமைகள், சேர்ந்த சொத்து. ஆக இனம் 1 மற்றும் 2ன் மொத்த அளவு 3.38 ஏக்கர் ராசிபுரம் ஊராட்சி ஒன்றிய அரசப்பாளையம் ஊராட்சி எல்லைக்குள் உள்ளதாகும்.

இனம் எண்.3 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்கவேரி கிராம சர்வே எண். 276/2 ல் உள்ள 2.25 ஏக்கர் நிலவரித்திட்டப் பதிவேட்டின் மறுசர்வே எண்.276/2A3ல் உள்ள 1.20 ஏக்கரில் தென்கிழக்கில் அடங்கிய நிலம் உட்பிரிவின் பின்னர் 276/2A3B யில் உள்ள 0.22 ஏக்கரில் திரு. வெங்கட்ராமனுக்கு முழுவதும் சொந்தமான 0.04 ½ ஏக்கர் நிலத்தின் **எல்லைகள் :** சர்வே எண்.276/2A3 நிலத்துக்குக் கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு, சர்வே எண்.276/2B4 நிலத்துக்கு வடக்கு, சர்வே எண். 272/6A யில் உள்ள வெங்கட்ராமனுக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு, மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட 0.04½ ஏக்கர் விஸ்தீரண நிலமும் அதிலடங்கிய ஒரு ஆழ்துளைக் கிணறும் அதன் மின்சாதனங்களும் இணைப்பு காப்புத் தொகையுடன் பிற அனைத்து உரிமைகள் மற்றும் இணைப்புகள் சேர்ந்த சொத்து.

இனம் எண்.4– நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண். 276/1ல் தற்போதைய உட்பிரிவு சர்வே எண்.276/1B யில் உள்ள 0.10 ஏக்கர் கிணற்றுப்பகுதி நிலத்தில் பொதுவான பாதிப்பங்காகிய 0.05 ஏக்கர் மற்றும் 5HP மோட்டார் பம்ப் செட், மின் இணைப்பு, சாதனங்கள் மற்றும் அனைத்து இணைப்பு உரிமைகள் பிற இணைப்புகள், உரிமைகள் சேர்ந்த சொத்து.

இனம் எண்.5 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண். 255/5ல் உள்ள பு.எக்டர் 0.53.0 ஏக்கர் 1.31 தீர்வை ரூ. 2.05, திரு. V.தினேஷ்குமாருக்குச் சொந்தமான சொத்து. இதன் **எல்லைகள்:** K.வெங்கட்ராமனுக்குச் சொந்தமான நிலத்துக்குக் கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு, வண்டித்தடத்துக்கு வடக்கு, இவ்வெல்லைகளுக்குபட்பட்ட 1.31 ஏக்கர் நிலம் முழுவதும் மற்றும் அனைத்து இணைப்புகளும், உரிமைகளும் சேர்ந்த சொத்து.

இனம் எண்.6 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண். 254/2C3 ல் உள்ள 1.04.5 புன்செய் எக்டர், 2.58 ஏக்கர் தீர்வை ரூ.4.05 தற்போதைய புதிய சர்வே மற்றும் உட்பிரிவு எண்.254/2C3B யில் உள்ள 0.48.5 புன்செய் எக்டர், 1.20 ஏக்கர் தீர்வை ரூ.1.89 நிலம் திரு.V.தினேஷ்குமாருக்குச் சொந்தமானது. இதன் **எல்லைகள் :** K.வெங்கட்ராமன் மற்றும் K. கருப்பண்ணனுக்குச் சொந்தமான நிலத்துக்குக் கிழக்கு, வண்டித்தடத்துக்கு மேற்கு, K.வெங்கட்ராமனுக்குச் சொந்தமான நிலத்துக்கு வடக்கு, K.கருப்பண்ணனுக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு, இவ்வெல்லைகளுக்குட்பட்ட 1.20 ஏக்கர் நிலம் முழுவதும் அதன் பிற உரிமைகள், இணைப்புகள் சேர்ந்தது.

இனம் எண்.7 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண்.255ல் உள்ள 8.76 ஏக்கர் தீர்வை ரூ.13.67 இதில் உட்பிரிவு சர்வே எண்.255/2ல் உள்ள 0.79 புன்செய் ஏக்கர் தீர்வை ரூ.1.23 திரு.K.வெங்கட்ராமனுக்குச் சொந்தமானது. இச்சொத்தின் **எல்லைகள் :** சரசுவுக்குச் சொந்தமான நிலத்துக்குக் கிழக்கு, வெங்கட்ராமனுக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு மற்றும் வடக்கு, வரதராஜுவுக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு, மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட 0.79 ஏக்கர் நிலம் முழுவதும் அதன் பிற உரிமைகள், இணைப்புகள் சேர்ந்தது.

இனம் எண்.8 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண்.255ல் 8.76 ஏக்கர் தீர்வை ரூ. 13.67 இதில் உட்பிரிவு சர்வே எண்.255/4ல் உள்ள பு.ஏக்கர் 0.57 தீர்வை ரூ. 0.89 திரு. K.வெங்கட்ராமனுக்குச் சொந்தமானது. இச்சொத்தின் **எல்லைகள் :** K.வெங்கட்ராமனுக்குச் சொந்தமான நிலத்துக்குக் கிழக்கு, வடக்கு மற்றும் தெற்கு, ராமசாமிக் கவுண்டருக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு, மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட 0.57 ஏக்கர் நிலம் முழுவதும் அதன் பிற உரிமைகள் இணைப்புகள் சேர்ந்தது.

இனம் எண்.9– நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண்.257/4ல் உள்ள 2.41 ஏக்கர் உட்பிரிவு சர்வே எண். 257/4A யில் உள்ள புன்செய் நிலம் வெங்கட்ராமன், ராமசாமி கவுண்டர் மற்றும் கந்தசாமி கவுண்டருக்குச் சொந்தமான சர்வே எண். 255/3, 255/5 மற்றும் 255/6 நிலங்களுக்குக் கிழக்கு, சர்வே எண்.257/6ல் உள்ள கருப்பண்ணகவுண்டர் நிலங்களுக்கு மேற்கு, சர்வே எண்.272/1B யில் உள்ள மீத நிலம் மற்றும் கால்வாய்க்கு வடக்கு, மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட பு.ஏக்கர் 1.20 தீர்வை ரூ.1.66 நிலம் முழுமையும் அத்துடனான அனைத்து உரிமைகள், இணைப்புகள் சேர்ந்தது.

இனம் எண்.10 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண்.272/1ல் உள்ள பு.ஏக்கர் 4.18 இதில் வடபுறப்பகுதியிலடங்கிய பு.ஏக்கர் 0.07 நிலம் தற்போதைய சர்வே எண்.272/1A யில் திரு.K. வெங்கட்ராமனுக்குச் சொந்தமாக உள்ள சொத்தின் **எல்லைகள் :** சர்வே எண். 272/1B யில் உள்ள நிலத்துக்குக் கிழக்கு, மற்றும் தெற்கு, கருப்பண்ணகவுண்டருக்குச் சொந்தமாக சர்வே எண்.272/1C யில் உள்ள நிலத்துக்கு மேற்கு, சர்வே எண்.257/4B மற்றும் 254/4A யில் கருப்பண்ண கவுண்டர் மற்றும் ஒருவருக்குச் சொந்தமாக உள்ள நிலத்துக்கு வடக்கு, மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட பு.ஏக்கர் 0.07 இதில் பொதுவானப் பாதிபங்கு 0.03½ ஏக்கர் நிலத்துடன் அதிலுள்ள 5 HP மோட்டார் மோட்டார் பம்ப்செட், மின்சார இணைப்பு மற்றும் வேலைபாடுகள் காப்புத் தொகையுடன் பிற அனைத்து உரிமைகள் இணைப்புகள் சேர்ந்த சொத்து.

இனம் எண். 11 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண்.276/2B4A யில் உள்ள 0.39.0 எக்டருக்குச் சமமான 0.96 ஏக்கர் நிலம் திரு.K.வெங்கட்ராமனுக்கு முழுவதும் சொந்தமானது. இதன் எல்லைகள் : சர்வே எண்.276/2B3 நிலத்துக்குக் கிழக்கு, வெங்கட்ராமனுக்குச் சொந்தமாக உள்ள சர்வே எண்.276/2B4ல் உள்ள நிலத்துக்கு மேற்கு, சர்வே எண்.276/2B5 ல் நல்லம்மாள் மற்றும் பிறருக்குச் சொந்தமாக உள்ள நிலத்துக்கு வடக்கு, சர்வே எண். 276/2A3 யில் காளியப்பகவுண்டருக்குச் சொந்தமாக உள்ள நிலத்துக்குத் தெற்கு, இவ்வெல்லைகளுக்குட்பட்ட புன்செய் ஏக்கர் 0.96 தீர்வை ரூ. 2.19 நிலம் முழுவதும் அதன் அனைத்து பிற உரிமைகள் இணைப்புகள் சேர்ந்த சொத்து.

இனம் எண். 12 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண். 276/2B4Cயில் உள்ள 0.05.0 எக்டர் இதற்கான 0.12 ஏக்கர் நிலம் திரு.K.வெங்கட்ராமனுக்கு முழுவதும் சொந்தமான இந்நிலத்தின் எல்லைகள் : K.வெங்கட்ராமனுக்குச் சொந்தமாக சர்வே எண். 276/2B4Bயில் உள்ள நிலத்துக்குக் கிழக்கு, சர்வே எண். 271 தரிசு நிலத்துக்கு மேற்கு, சர்வே எண். 276/4 வண்டித்தடத்துக்கு வடக்கு, சர்வே எண். 276/2A3ல் உள்ள காளியப்ப கவுண்டருக்குச் சொந்தமான நிலங்களுக்குத் தெற்கு. இவ்வெல்லைகளுக்குட்பட்ட 0.12 ஏக்கர் தீர்வை ரூ.0.28 நிலம் முழுவதும் அதன் பிற உரிமைகள், இணைப்புகள் சேர்ந்த சொத்து.

இனம் எண். 13 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண். 276/2B4, உட்பிரிவின் பின்னர் சர்வே எண். 276/2B4Bயில் திரு.K.வெங்கட்ராமனுக்கு முழுவதும் சொந்தமான 0.02.0 எக்டர் அல்லது 0.04½ ஏக்கர் நிலத்தின் எல்லைகள் வருமாறு : ராமசாமி கவுண்டரின் மீத நிலங்களுக்குக் கிழக்கு மற்றும் மேற்கு, ஒடுவங்குறிச்சி செல்லும் வண்டித்தடத்துக்கு வடக்கு, காளியப்ப கவுண்டர் நிலத்துக்குத் தெற்கு. மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட 0.04½ ஏக்கர் நிலம் முழுவதும் அதன் பிற உரிமைகள், இணைப்புகள் சேர்ந்த சொத்து.

இனம் எண். 14 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராமத்தில்,
1. பழைய சர்வே எண். 254/2, புதிய சர்வே எண். 254/2C3 உட்பிரிவின் படி சர்வே எண். 254/2C3Aயில் உள்ள 1.38 ஏக்கர் நிலத்தின் **எல்லைகள் :** ரோட்டுக்குக் கிழக்கு, கருப்பண்ணனுக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு, K.வெங்கட்ராமனுக்குச் சொந்தமான நிலத்துக்கு வடக்கு மற்றும் கருப்பண்ணனுக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு.
2. பழைய சர்வே எண். 255, புதிய சர்வே எண். 255/3Bயில் உள்ள 4.24 ஏக்கர் நிலத்தின் **எல்லைகள் :** நடேசகவுண்டருக்குச் சொந்தமான நிலத்துக்குக் கிழக்கு, வெங்கட்ராமனுக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு, ராமசாமி கவுண்டர் மற்றும் வெங்கட்ராமனுக்குச் சொந்தமான நிலத்துக்கு வடக்கு, சரசு மற்றும் வெங்கட்ராமனுக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு.
3. பழைய சர்வே எண். 274/1, புதிய சர்வே எண். 274/1A1Aல் உள்ள 4.53 ஏக்கர் நிலத்தின் **எல்லைகள் :** வண்டித்தடத்துக்குக் கிழக்கு, காளியப்பக் கவுண்டர் மற்றும் கருப்பண்ணனுக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு, ராமசாமி கவுண்டருக்குச் சொந்தமான நிலத்துக்கு வடக்கு மற்றும் காளியப்பக் கவுண்டர் மற்றும் தனசேகரனுக்குச் சொந்தமான நிலத்துக்குத் தெற்கு.

இனம் எண். 15 – நாமக்கல் பதிவு மாவட்டம், ராசிபுரம் சார் பதிவு மாவட்டம், ராசிபுரம் தாலூகா, காக்காவேரி கிராம சர்வே எண். 273/3A2ல் உள்ள புன்செய் எக்டர் 1.54.0 = 3.80 ஏக்கர். இதிலடங்கிய 0.54 ஏக்கர் நிலம் முழுவதும் திரு.வெங்கட்ராமனுக்குச் சொந்தமானது. இச்சொத்தின் **எல்லைகள் :** சர்வே எண். 273/3A2ல் உள்ள மீத நிலத்துக்கு கிழக்கு மற்றும் தெற்கு, K.காளியப்ப கவுண்டருக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு, சர்வே எண். 274 நிலத்துக்கு வடக்கு, மேற்சொன்ன எல்லைகளுக்குட்பட்ட 0.54 ஏக்கர் நிலம் அதன் அனைத்து இணைப்புகளும், உரிமைகளும் சேர்ந்த சொத்து.

மேற்குறிப்பிட்ட குடியிருப்புக் கட்டிடங்கள், தொழிற்சாலைக் கட்டுமானங்கள்/ கொட்டகைகள்/ஆலைகள் மற்றும் இயந்திரங்கள் கட்டுமானங்கள் உள்ளிட்ட மேற்சொன்ன சொத்துகளனைத்தும் விவசாயத்திற்கென உபயோகப்படுத்தப்படும் நிலங்கள் தவிர்த்த சொத்துகளின் பகுதியாகும்.

ஒம்/–
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஐடிபிஐ வங்கி லிட்.,

இடம் : சேலம்
தேதி : 04.03.2020

SOUTH INDIAN Bank

பிராந்திய அலுவலகம் :
P.B.எண். 3868, திருச்சி ரோடு, சுங்கம்,
கோயமுத்தூர்-18, தமிழ்நாடு.
E-mail: ro1002@sib.co.in,
போன் எண். 0422-2303694, 2302398.

சொத்து வசப்படுத்துதலுக்கான அறிவிப்பு

[விதி 8(1)ல் காணக] (அசையா சொத்திற்காக)

தி சௌத் இந்தியன் பேங்க் லிட்.–ன் அதிகாரம் பெற்ற மற்றும் கீழே கையொப்பம் செய்துள்ள அலுவலர் செக்யூரிடைசேஷன் மற்றும் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆப் பைனான்சியல் அசெட்ஸ் மற்றும் என்போர்ஸ்மெண்ட் ஆப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் ஆக்ட் 2002–ன்படி செக்யூரிட்டி இன்டரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) விதிகளில் சட்டப்பிரிவு 13(12) உடன் கூடிய விதி 3–ன்படி, சட்டப்பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு நோட்டீஸ் கடந்த **19.11.2019** அன்று **கடன்தாரர்கள் : (1) திரு.சின்னராஜ்.S, உரிமையாளர் : M/s.CMK டெக்ஸ்டைல்ஸ்,** 39, பெரியகிணறு வீதி, அம்மாபேட்டை, சேலம், தமிழ்நாடு–636003, **மேலும் :** 17B, புதிய எண். 41, அம்மாபேட்டை, சேலம், தமிழ்நாடு– 636003, **(2)திருமதி.சுசீலா.C,** க/பெ.திரு.சின்னராஜ்.S, 17B, பெரியகிணறு வீதி, அம்மாபேட்டை, சேலம், தமிழ்நாடு–636003 ஆகியோர்களின் திருப்பிச் செலுத்த வேண்டிய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை **ரூ.1,06,15,153.98 (ரூபாய் ஒரு கோடியே ஆறு லட்சத்து பதினைந்தாயிரத்து நூற்று ஐம்பத்து மூன்று மற்றும் பைசா தொண்ணூற்று எட்டு மட்டும்)** நோட்டீஸ் பெற்ற 60 நாட்களுக்குள் செலுத்துமாறு நோட்டீஸ் தரப்பட்டது.

ஆனால் மேற்படி கடன் தொகையைக் கடன் பெற்றவர் வங்கிக்குத் திருப்பிச் செலுத்தத் தவறிவிட்டதால் மேலே குறிப்பிட்டுள்ள சட்ட செக்ஷன் 13(4) மற்றும் அதற்குரிய விதி 8 இதர விதிகளின்படி அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கீழே கையொப்பமிட்டவர் **04.03.2020**ல், கீழே விவரித்துள்ள சொத்துகளை **இனம் எண். 1 முதல் இனம் எண். 4 வரை அடையாள சுவாதீனமும் மற்றும் இனம் எண். 5 கொள்நிலை சுவாதீனமும்** செய்து கொண்டுள்ளார் என்று கடன் பெற்றவருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

எனவே, குறிப்பாக கடன் பெற்றவரும் மற்றும் பொதுமக்களும் இந்த சொத்தின் பேரில் எவ்வித ஒப்பந்தங்களும் செய்து கொள்ளக் கூடாதென்றும், அவ்வாறு செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் **தி சௌத் இந்தியன் பேங்க் லிமிடெட்டு**க்கு செலுத்த வேண்டிய தொகை **ரூ.1,06,47,576.98 (ரூபாய் ஒரு கோடியே ஆறு லட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து ஐநூற்று எழுபத்து ஆறு மற்றும் பைசா தொண்ணூற்று எட்டு மட்டும்)** கூடியுள்ள வட்டித் தொகையையும், செலவுகளையும் உள்ளடக்கியதாகவே இருக்கும் என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள்.

பிணையம் வைத்துள்ள சொத்துக்களை மீட்பதில் உள்ள கால அவகாசத்தைக் கருத்தில் கொள்ள இச்சட்டத்தின் உட்பிரிவு (8) பிரிவு 13க்கு, கடன்பெற்றவர்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையாச் சொத்துக்களின் விபரம்

இனம் – 1: சேலம் மாவட்டம், சேலம் கிழக்கு சார் பதிவு மாவட்டம், சேலம் தாலூகா, அம்மாபேட்டை டவுன் வார்டு எண். AJ, பிளாக் எண். 51ல் டவுன் சர்வே எண். 43, மறுசர்வே எண். 44ல் அடங்கியதும் அதன் பகுதியுமான நிலம் 780 சதுர அடி மற்றும் அந்நிலத்திலுள்ள கட்டிடம், அதன் அனைத்து அபிவிருத்திகள், மாமூல் உரிமைகள் மற்றும் தடவழி உரிமைகள் உள்ளிட்ட பிற இணைப்புகள் சேர்ந்த சொத்து. சேலம் கிழக்கு இணை 1 சார் பதிவு அலுவலகத்தில் விற்பனைப் பத்திர ஆவண எண். 3823/2007 ஆக திரு.S.சின்னராஜ் பெயரில் பதியப்பட்டுள்ள இச்சொத்தின் **எல்லைகள் :** 25 அடி அகல கிழமேல் ரோட்டுக்குத் தெற்கு, கந்தசாமி மற்றும் ராமசாமி சொத்துக்கு வடக்கு, ராஜேஸ்வரியின் தார்சு கட்டிடத்திற்குக் கிழக்கு, S.சிவாஜியினது, பின்னர் பழனி வேலுக்குச் சொந்தமான சொத்துக்கு மேற்கு.

இனம் – 2 : பகுதி 1: சேலம் மாவட்டம், சேலம் கிழக்கு சார் பதிவு மாவட்டம், சேலம் தாலூகா, அம்மாபேட்டை நகரம் வார்டு எண். N, பிளாக் எண். 6, டவுன் சர்வே எண்.42/1, 42/2, 43 (பழைய டவுன் சர்வே எண்.189) மறு சர்வே டவுன் சர்வே எண்.43/1C யில் அடங்கியதும் அதன் பகுதியுமான 850 ச.அடி விஸ்தீரண நிலமும் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடமும் அதன் அனைத்து அபிவிருத்திகளும், பயன்களும் மாமூல் தடவழி உரிமைகள் உள்ளிட்ட பிற உரிமைகளும் சேர்ந்த சொத்து. திருமதி.C.சுசீலாவுக்குச் சொந்தமாக சேலம் கிழக்கு இணை 1 சார் பதிவகத்தில் விற்பனைப்பத்திர ஆவண எண்.1125/1992 ஆக 06.05.1992 அன்று பதியப்பட்டுள்ள ஆவணத்தில் இதன் மேல் விவரங்கள் உள்ளன. இச்சொத்தின் **எல்லைகள் :** 25 அடி அகல கிழமேல் தடத்துக்கு வடக்கு, கந்தசாமியின் சொத்துக்குத் தெற்கு, 3 அடி அகல தென்வடல் தடத்துக்கு மேற்கு, திரு.S.சின்னராஜின் வீட்டுச் சொத்துக்குக் கிழக்கு, **பகுதி 2 :** சேலம் மாவட்டம், சேலம் கிழக்கு சார் பதிவு மாவட்டம், சேலம் தாலூகா, அம்மாபேட்டை நகரம் வார்டு எண்.N, பிளாக் எண். 6, டவுன் சர்வே எண்.42/1, 42/2, 43 (பழைய டவுன் சர்வே எண்.189) மறு சர்வே டவுன் சர்வே எண்.43/5ல் அடங்கியதும் அதன் பகுதியுமான 840 ச.அடி விஸ்தீரண நிலமும் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடமும் அதன் அனைத்து அபிவிருத்திகளும், பயன்களும் மாமூல் தடவழி உரிமைகள் உள்ளிட்ட பிற உரிமைகளும் சேர்ந்த சொத்து. திருமதி.C.சுசீலாவுக்குச் சொந்தமாக சேலம் கிழக்கு இணை 1 சார் பதிவு அலுவலகத்தில் விற்பனைப்பத்திர ஆவண எண்.2424/2001 ஆக 19.11.2011 மற்றும் திருத்த ஆவண எண். 84/2002 நாள் 11.01.2002 அன்று பதியப்பட்டுள்ள ஆவணத்தில் இதன் மேல் விவரங்கள் உள்ளன. இச்சொத்தின் **எல்லைகள் :** எண்.1 பெரியகிணறு வீதி மற்றும் C.சுசீலா நிலங்களுக்கு வடக்கு, கந்தசாமி மற்றும் பிறரது சொத்து மற்றும் திருமதி.குஞ்சம்மாளின் சொத்துக்குத் தெற்கு, திரு.ராமசாமியின் சொத்துக்கு மேற்கு, திருமதி.C.சுசீலா மற்றும் திரு.S.சின்னராஜ் சொத்துக்களுக்குக் கிழக்கு,

இனம் – 3 : சேலம் மாவட்டம், சேலம் கிழக்கு சார் பதிவு மாவட்டம், சேலம் தாலூகா, அம்மாபேட்டை நகரம் மற்றும் கிராமம் பிளாக் எண். 6, வார்டு எண். N, பழைய டவுன் சர்வே எண். 189, டவுன் சர்வே எண். 42/1, 42/2 மற்றும் 43, டவுன் சர்வே எண். 198, புதிய டவுன் சர்வே எண். 43 ஆகியவற்றில் அடங்கியதும் அதன் பகுதியுமான 1572.5 சதுர அடி விஸ்தீரண நிலமும், அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடமும், அதன் அனைத்து அபிவிருத்திகள், பயன்கள், மாமூல் தடவழி உரிமைகள் உள்ளிட்ட இதர உரிமைகள் சேர்ந்த சொத்து. சேலம் கிழக்கு இணை 1 சார் பதிவு அலுவலகத்தில் விற்பனைப் பத்திர ஆவண எண். 407/1981 ஆக 11.02.1981 அன்று பதியப்பட்டுள்ள ஆவணத்தில் கண்டுள்ள விவரப்படி திரு.S.சின்னராஜுக்குச் சொந்தமான இச்சொத்தின் **எல்லைகள் :** 25 அடி அகல கிழமேல் ரோட்டுக்கு வடக்கு, வீரம்மா வாங்கிய நிலத்துக்கு மேற்கு, கண்ணன் வாங்கிய நிலத்துக்குக் கிழக்கு, பெரியகிணறு வீதியிலுள்ள வீடுகளுக்குத் தெற்கு.

இனம் – 4 : சேலம் மாவட்டம், சேலம் கிழக்கு சார் பதிவு மாவட்டம், சேலம் தாலூகா, அம்மாபேட்டை நகரம் கிராம பழைய டவுன் சர்வே எண். 189, டவுன் சர்வே எண். 42/1, 42/2 மற்றும் 43 மற்றும் வார்டு எண். N, பிளாக் எண். 6, புதிய டவுன் சர்வே எண். 43/1Bயில் அடங்கியதும் அதன் பகுதியுமான 2280 சதுர அடி விஸ்தீரண நிலமும், அதன் அனைத்து அபிவிருத்திகளும், பயன்களும், மாமூல் தடவழி உரிமைகள் உள்ளிட்ட இதர உரிமைகளும் சேர்ந்த சொத்து. சேலம் கிழக்கு இணை 1 சார் பதிவு அலுவலகத்தில் விற்பனைப் பத்திர ஆவண எண். 2776/1995 ஆக 19.10.1995 அன்று திருமதி.C.சுசீலா பெயரில் பதியப்பட்டுள்ள இச்சொத்தின் **எல்லைகள் :** தென்வடல் ரோட்டு (எண். 2 பெரியகிணறு வீதி)க்குக் கிழக்கு, எண். 2 பெரியகிணறு வீதி கிழமேல் ரோட்டுக்கு வடக்கு, பாலகிருஷ்ணனின் வீட்டுக்கு மேற்கு, அரசு புறம்போக்கு நிலத்துக்குத் தெற்கு.

இனம் – 5 : சேலம் மாவட்டம், சேலம் கிழக்கு சார் பதிவு மாவட்டம், சேலம் தாலூகா, அம்மாபேட்டை நகரம் பிளாக் எண். 10, வார்டு எண். AL, சர்வே எண். 229/8B (மிட்டா சர்வே எண். 492/B) மறுசர்வே டவுன் சர்வே எண். 27/2ல் அடங்கியதும் அதன் பகுதியுமான 4743 சதுர அடி விஸ்தீரண நிலமும், அதன் அனைத்து அபிவிருத்திகளும், பயன்களும், மாமூல் தடவழி உரிமைகள் மற்றும் இதர அனைத்து உரிமைகளும் சேர்ந்த சொத்து. சேலம் கிழக்கு இணை 1 சார் பதிவு அலுவலக விற்பனைப் பத்திர ஆவண எண். 1799/2010 நாள் 16.04.2010 அன்று ஆக திருமதி.C.சுசீலாவின் பெயரில் பதியப்பட்டுள்ள இச்சொத்தின் **எல்லைகள் :** திரு.T.மாரிமுத்துவால் விற்பனையாளர் திரு.A.துரைசாமியிடமிருந்து வாங்கப்பட்ட சொத்துக்குக் கிழக்கு, ராமசாமி செட்டியார் சொத்துக்கு மேற்கு, பொது சந்துத்தடத்துக்குத் தெற்கு, ராமசாமி செட்டியார் சொத்துக்கு வடக்கு.

தேதி : 04.03.2020 — அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்
இடம் : சேலம் — தி சௌத் இந்தியன் பேங்க் லிட்.

தி சௌத் இந்தியன் பேங்க் லிட். 'SIB ஹவுஸ்', T.B.ரோடு, மிஷன் குவார்ட்டர்ஸ், திருச்சூர் -680001. கேரளா. போன் : +91-487-2420020, பேக்ஸ் : +91-487-2442021,
இ-மெயில் : sibcorporate@sib.co.in இணைய தளம் : www.southindianbank.com
CIN : L65191KL1929PLC001017

திமுகவின் அடுத்த பொதுச்செயலாளராக துரைமுருகனுக்குவாய்ப்பு



சென்னை, மார்ச் 7: திமுகவின் பொதுச்செயலாளராக இருந்த க.அன்பழகன் காலமானதைத் தொடர்ந்து அக் கட்சியின் அடுத்த பொதுச் செயலாளர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

திமுகவில் பொதுச்செயலாளர் பதவி என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். தலைவருக்கு அடுத்த நிலையில் வைத்துப் பார்க்கக் கூடிய ஒன்றாகும். திமுக பொருளாளராக இருந்து வரும் துரைமுருகன் போட்டியின்றி தேர்வு செய்யப்படுவதற்கான வாய்ப்பு உள்ளதாகத் தெரிகிறது.

திமுகவில் தொடக்ககாலத்தில் தலைவர் என்ற பதவியே இல்லை. பொதுச்செயலாளர் பதவிதான் இருந்தது. திமுக தொடங்கப் பட்டபோது பொதுச்செயலாளராகத்தான் அண்ணா இருந்தார். அண்ணா மறைவுக்குப் பிறகு கருணாநிதி தலைவர் பதவியை உருவாக்கி அந்தப் பதவியில் வகித்து வந்தார். அதன் பிறகு பொதுச் செயலாளர் பதவியில் நாவலர் நெடுஞ்செழியனும், க.அன்பழகன் இருந்து வந்துள்ளனர்.

க.அன்பழகன் 1977-இல் இருந்து பொதுச்செயலாளராக இருந்து வருகிறார். கிட்டத்தட்ட 43 ஆண்டுகள் யாராலும் அசைக்க முடியாத அளவுக்கு அந்தப் பதவியில் அவர் நீடித்து வந்தார். தற்போது அவர் காலமானதைத் தொடர்ந்து பொதுச்செயலாளர் பதவி யாருக்குக் கொடுக்கப்படும் என்ற கேள்வி எழுந்துள்ளது. திமுக பொருளாளராக இருந்து வரும் துரைமுருகனுக்கு அந்தப் பதவி அளிக்கப்பட உள்ளது. இதற்கு திமுகவில் யாரும் எதிர்ப்பு தெரிவிப்பதற்கு முன்வரவில்லை. அதனால், துரைமுருகன் போட்டியின்றி தேர்வு செய்யப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

திமுகவில் தற்போது உள்கட்சி தேர்தல் நடைபெற்று வருகிறது. அந்தத் தேர்தலோடு, பொதுச்செயலாருக்கான தேர்தலையும் நடத்துவதா அல்லது அதற்கு முன்பே அறிவிப்பதா என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை. ஏற்கெனவே, பொதுச்செயலாளருக்கான அதிகாரங்கள் முழுவதும் தலைவரான மு.க.ஸ்டாலின் வசம் வந்துவிட்டதால், கட்சி ரீதியான பணிகள் எதுவும் இதனால் தடை ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை.

பொருளாளர் பதவி: பொதுச்செயலாளராக துரைமுருகன் மாற்றப்பட்டுவிட்டால், அவர் வகித்த வரும் பொருளாளர் பதவி யாருக்கும் என்ற கேள்வியும் எழுந்துள்ளது. முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு, பொன்முடி எனப் பலர் இதற்கான போட்டியில் உள்ளனர்.

தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றி பெண்கள் சாதனை படைக்க வேண்டும்

முதல்வர் பழனிசாமி வாழ்த்து

சென்னை, மார்ச் 7: பெண்கள் தடைக் கற்களை படிக்கற்களாக மாற்றி சாதனை படைக்க வேண்டும் என்று முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி அவர் சனிக்கிழமை வெளியிட்ட வாழ்த்துச் செய்திக் குறிப்பு:

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8-ஆம் தேதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் அனைத்து மகளிருக்கும் எனது உளம் கனிந்த நல்வாழ்த்துகள். இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் பெண்களின் வாழ்வு மேன்மையுறவும், பெண்களின் நல்வாழ்வுக்காகவும் தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

பெண்கள் உரிமைகள், பாலியல் வன்கொடுமை மற்றும் பணியிடங்களில் உருவாகும் அசாதாரண நிலை குறித்து புகார் தெரிவிக்க தனி புகார் பெட்டி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மகளிர் உதவி மையத்தைத் தொடர்பு கொள்ள 181 என்ற கட்டணமில்லாத தொலைபேசி எண் வசதியும் அமைக்கப்பட்டுள்ளது.

வாழ்வில் எதிர்வரும் சோதனைகளை உறுதியுடன் எதிர்கொண்டு, தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றி சாதனை படைக்கும் பெண்களாக அனைத்து மகளிரும் உயர்ந்து விளங்கிட வேண்டும். மகளிர் தினமான இனிய நாளில், அனைத்து மகளிருக்கும் இதயபூர்வமான வாழ்த்துகள் என்று தனது செய்திக் குறிப்பில் முதல்வர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

நடிகர் ரஜினிகாந்துக்கு எதிரான வழக்கு: தீர்ப்புக்காக ஒத்திவைப்பு

சென்னை, மார்ச் 7: இருபிரிவினர் இடையே மோதலை ஏற்படுத்தும் வகையில் பேசியதாக நடிகர் ரஜினிகாந்த் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்ய உத்தரவிடக் கோரிய வழக்கை விசாரித்த எழும்பூர் குற்றவியல் நீதிமன்றம், தீர்ப்புக்காக ஒத்திவைத்துள்ளது.

சென்னை எழும்பூர் இரண்டாவது குற்றவியல் நீதிமன்றத்தில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி தாக்கல் செய்த மனுவில், 'சென்னையில் கடந்த ஜனவரி மாதம் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் நடிகர் ரஜினிகாந்த் பெரியார் குறித்து சில கருத்துகளைத் தெரிவித்தார்.

இருபிரிவினர் இடையே மோதலை ஏற்படுத்தும் விதமாகவும், பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலும் பேசிய நடிகர் ரஜினிகாந்த் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி திருவல்லிக்கேணி காவல் நிலையத்திலும், சென்னை மாநகர காவல் ஆணையரிடமும் புகார் அளித்தேன்.

அந்தப் புகாரின் பேரில் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே இருபிரிவினரிடையே மோதலை ஏற்படுத்தும் வகையில் பேசிய நடிகர் ரஜினிகாந்த் மீது வழக்குப்பதிவு செய்ய சென்னை மாநகர காவல் ஆணையர், திருவல்லிக்கேணி காவல் ஆய்வாளர் ஆகியோருக்கு உத்தரவிட வேண்டும்' எனக் கோரியிருந்தார்.

இந்த மனு எழும்பூர் இரண்டாவது குற்றவியல் நீதிமன்ற நீதிபதி ரோஸ்லின் துரை முன் சனிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் கான்சியஸ் இளங்கோ, ரஜினிகாந்த் மீது வழக்குப் பதிவு செய்ய போலீஸாருக்கு உத்தரவிட வேண்டும் என வாதிட்டார்.

இதனையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, வழக்கைத் தீர்ப்புக்காக வரும் 9-ஆம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

நீட் தேர்வை ரத்து செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்



தூத்துக்குடி, மார்ச் 7: நீட் தேர்வை ரத்து செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் கூறினார்.

தூத்துக்குடியில் அவர் சனிக்கிழமை அளித்த பேட்டி:

நாட்டில் மதச்சார்பற்ற அரசு இல்லை என்பதைப்போல மத்தியில் ஆளும் பாஜக அரசின் செயல்பாடுகள் உள்ளன. தில்லி கலவரம் குறித்து விவாதிக்க மக்களவை, மாநிலங்களவையில் அனுமதி வழங்கவில்லை. தில்லி வன்முறைக்கு பொறுப்பேற்று பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் பதவி விலக வேண்டும். மத்திய பாஜக அரசு எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும் அதை ஆதரிக்க வேண்டும் என்ற முடிவை தமிழக அரசு எடுத்துள்ளது. எனவே, குடியுரிமை திருத்தச் சட்டம், தேசிய குடிமக்கள் பதிவேடு, தேசிய மக்கள்தொகை பதிவேடு ஆகியவற்றை எதிர்த்து தமிழகப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்க முடியாது.

தமிழகத்தில் மாவட்டம்தோறும் மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட்டுவருவதை வரவேற்கிறோம். நீட் தேர்வு நமக்கு எதிரானது. எனவே, தமிழகத்தில் நீட் தேர்வைப் புறக்கணிக்க வேண்டும். நீட் தேர்வை ரத்து செய்யும் நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

ரூ. 150 கோடியில் ஆறுகாட்டுத்துறையில் மீன்பிடித் துறைமுகம்

முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி அறிவிப்பு



நாகை அரசு புதிய மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவில், புதிய திட்டங்கள் மற்றும் முடிக்கப்பட்ட திட்டங்களுக்கான கல்வெட்டை திறந்து வைத்த முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி.

நாகப்பட்டினம், மார்ச் 7: நாகை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த ஆறுகாட்டுத்துறையில் ரூ. 150 கோடியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்று முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தார்.

நாகையை அடுத்த ஓரத்தூரில் சனிக்கிழமை நாகை அரசு புதிய மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டி, நாகை மாவட்ட மக்கள் நலனுக்காக அரசின் பரிசீலினையில் உள்ள திட்டங்களை அறிவித்துப் பேசியது:

நாகை மாவட்டம், வேதாரண்யம் வட்டம், வண்டுவாஞ்சேரியில் வேளாண் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படும். மயிலாடுதுறை வட்டத்தில் ரூ. 72 லட்சம் மதிப்பில் நூலகம் அமைக்கப்படும். வேதாரண்யம் ஏரியில் தடுப்புச் சுவர் மற்றும் நடைபாதையுடன் கூடிய பூங்கா அமைக்கப்படும்.

கஜா புயலால் பாதிக்கப்பட்ட வேதாரண்யம் வட்டம், கைவனம்பேட்டை மற்றும் அகஸ்தியன்பள்ளி கிராமங்களில் முறையே ரூ. 49 கோடி மற்றும் ரூ. 29.5 கோடி மதிப்பில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித் தரப்படும். மயிலாடுதுறை, நாகை வட்டங்களில் புதிய வட்ட அலுவலகங்கள் அமைக்கப்படும்.

நாகை, மயிலாடுதுறை, வேதாரண்யம் அரசு விருந்தினர் மாளிகைகளில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும். சீர்காழி வட்டம் திருமுல்லைவாசல் கிராம மீன்பிடித் துறைமுகத்தில் கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் கட்டப்படும். மயிலாடுதுறை தீயணைப்பு நிலையத்துக்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

நாகையை அடுத்த தெற்கு பொய்கைநல்லூரில் 10 ஏக்கர் பரப்பில் ரூ. 25 கோடி மதிப்பில் அரிசி சார்ந்த உணவுப் பொருள்கள் மற்றும் கடல்வாழ் உயிர் உணவு பதப்படுத்தும் தொகுப்பு அமைக்கப்படும், வேதாரண்யம் கால்வாயின் குறுக்கே கள்ளி மேடு கொத்தங்காடு சாலையில் உயர்நிலை பாலம் கட்டப்படும். நாகை தேவநதி ஆற்றின் குறுக்கே கடைமடை கதவணை அமைக்கப்படும். சீர்காழி அரசு மருத்துவமனை தரம் உயர்த்தப்படும். மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் ரூ. 20 கோடி மதிப்பில் மகப்பேறு சிகிச்சை கட்டடம் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளது. இங்கு, சிடி ஸ்கேன் வசதி அமைத்துத் தரப்படும்.

மிகப் பெரிய திட்டமாக, விவசாயிகளின் கனவு திட்டமாக, விவசாயிகளுக்கு இரட்டிப்பு வருமானம் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில், வேதாரண்யம் வட்டத்தில் 250 ஏக்கர் பரப்பில் மிகப் பெரிய உணவு பதப்படுத்தும் பூங்கா அமைக்கப்படும்.

ஏற்கெனவே ஆய்வுக்கு ஏற்கப்பட்ட ஆறுகாட்டுத்துறை மீன்பிடித் துறைமுகத்துக்கு அரசு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இங்கு, 100 விசைப்படகுகள், 500 நாரிழைப் படகுகள் நிறுத்தும் வகையில் ரூ. 150 கோடி மதிப்பில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் பணி விரைவில் தொடங்கப்படும் என்றார் முதல்வர்.

சத்துணவு சாப்பிடும் மாணவர்களுக்கு உணவருந்தும் கூடம்: வகுப்பறைகள் கணக்கெடுப்பு தொடக்கம்

சென்னை, மார்ச் 7: அரசுப் பள்ளிகளில் காலியாக மற்றும் பயன்படுத்தப்படாத வகுப்பறைகள் சத்துணவு சாப்பிடும் மாணவர்களுக்கான உணவருந்தும் கூடமாக மாற்றப்படவுள்ளன.

தமிழகம் முழுவதும் மொத்தம் 49,554 சத்துணவு மையங்கள் மூலம் தினமும் 49 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் மதிய உணவு சாப்பிட்டு வருகின்றனர். இவர்களுக்கு மதிய நேரங்களில் வழங்கப்படும் சத்துணவுகள் சரியாக மாணவர்களுக்கு சென்று சேருகிறதா என்பதை கண்டறிய தலைமை ஆசிரியர்கள் மூலம் தினமும் எத்தனை மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது என்பது கணக்கெடுக்கப்பட்டு வந்தது. எனினும் சத்துணவின் பயன் முழுமையாக மாணவர்களுக்கு சென்று சேருவதை அதிகாரிகளால் உறுதிப்படுத்த முடியவில்லை.

இதையடுத்து மாவட்டந்தோறும் சில மையங்களில் சோதனை முயற்சியாக பயோமெட்ரிக் வருகைப் பதிவை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதையடுத்து அனைத்துப் பள்ளிகளிலும் மாணவ, மாணவர்கள் அமர்ந்து சாப்பிடுவதற்கு ஏதுவாக தனியாக உணவருந்தும் அறை ஒதுக்கப்பட வேண்டும் என பெற்றோர், ஆசிரியர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில் இதற்கான செயல்பாடுகள் அரசின் சார்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது குறித்து அதிகாரிகள் கூறியது: சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் மாணவர்கள் சுகாதாரமான முறையில் மதிய உணவு சாப்பிடும் வகையில் அனைத்து பள்ளிகளிலும், காலியாக மற்றும் பயன்படுத்தப்படாமல் உள்ள வகுப்பறைகளை மாற்றி சீரமைத்து உணவு அருந்தும் கூடங்கள் அமைப்பது தொடர்பாக ஆலோசித்து வருகிறோம். இது குறித்து காலியாக உள்ள வகுப்பறைகளின் பட்டியல் அனுப்ப அனைத்து அரசுப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டு பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும் என்றனர்.

அரசு மறுவாழ்வு-குழந்தைகள் இல்லம் திறப்பு

சென்னை, மார்ச் 7: தஞ்சாவூர், தருமபுரி மாவட்டங்களில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அரசு மறுவாழ்வு மற்றும் குழந்தைகள் இல்லத்தை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி சென்னை தலைமைச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.

இதுகுறித்து, தமிழக அரசு சனிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: தஞ்சாவூர் மாவட்டம் மனையேறிப்பட்டியில் அரசு மறுவாழ்வு இல்லக் கட்டடம் மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் இருந்தது. இதையடுத்து, புதிய கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி, ரூ.1.10 கோடியில் கட்டப்பட்ட அரசு மறுவாழ்வு இல்லப் புதிய கட்டடத்தை முதல்வர் பழனிசாமி திறந்து வைத்தார்.

தருமபுரி மாவட்டம் பஞ்சப் பள்ளியில் உள்ள சிறுவர்களுக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்துக்கு நவீன உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டப்படும் என முதல்வர் பழனிசாமி அறிவித்திருந்தார். அந்த அறிவிப்பின்படி, பஞ்சப்பள்ளியில் சிறுவர்களுக்கான அரசினர் குழந்தைகள் இல்லம் ரூ.3.65 கோடியில் கட்டப்பட்டுள்ளது. அதனை முதல்வர் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் வி.சரோஜா, கே.பி.அன்பழகன், தலைமைச் செயலாளர் க.சண்முகம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

காற்றாலை மின் உற்பத்தியை அதிகரிக்க வாரியம் திட்டம்

சென்னை, மார்ச் 7: காற்றாலை மின் உற்பத்தியை அதிகரிக்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் திட்டமிட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தின் தற்போதைய காற்றாலை மின் உற்பத்தி திறன் 8,507 மெகாவாட் ஆகும். இந்தியாவின் காற்றாலை மொத்த மின் உற்பத்தி திறனான 37,608 மெகாவாட் திறனில் தமிழகத்தின் பங்கு 23 சதவீதமாகும்.

கடந்த சில ஆண்டுகளாக காற்றாலை மின் உற்பத்தியும் குறைந்து வருகிறது எனவும் இதற்கு மின் வாரியத்தின் ஒப்பந்தங்களுக்கு போதிய வரவேற்பு கிடைக்காததே காரணமெனவும் கூறப்படுகிறது. எனினும், கடந்த 2017-ஆம் ஆண்டு காற்றாலை மின்உற்பத்தி ஒப்பந்தங்கள் ஒரு சில நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அவற்றிலும் குறைந்த அளவிலான நிறுவனங்களே தனது உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. மேலும் ஒரு மெகாவாட் திறனுக்கு குறைந்த காற்றாலைகள் செயலற்ற நிலையிலேயே காணப்படுகின்றன.

இவை அனைத்தையும் சீரமைக்கப்பட வேண்டிய சூழலில் மின் வாரியம் உள்ளது. எனவே, காற்றாலை மின் உற்பத்தியை அதிகரிக்கும் நடவடிக்கையில், மின் வாரியம் தீவிரம் காட்டி வருகிறது.

இதுகுறித்து மின் வாரிய அதிகாரிகள் கூறியதாவது: 2022-ஆம் ஆண்டுக்குள் 1 லட்சத்து 75 ஆயிரம் மெகாவாட் திறன்களும், 2030-ஆம் ஆண்டுக்குள் 4 லட்சத்து 50 ஆயிரம் மெகாவாட் திறன்களும் கொண்ட மரபுசாரா எரிசக்தி மூலப் பொருள்களை உருவாக்க மத்திய மின் அமைச்சகத்தால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதன் பகுதியாக, 2022-ஆம் ஆண்டுக்குள் 22,000 மெகாவாட்டை அடைய தமிழகதுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, காற்றாலை மின் உற்பத்தியை ஊக்குவிப்பதில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

இதற்கு எடுத்துக்காட்டாக காற்றாலை மின் உற்பத்தி, தனது உச்ச அளவாக 5,096 மெகாவாட்டை அண்மையில் எட்டியது. இதை மேலும் அதிகரிக்கும் வகையில் புதிதாக 400 மெகாவாட் அளவுக்கு மேல் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதேபோல், சூரிய மின்சக்தியை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு கல்விச் சுற்றுலா

விண்வெளி அறிவியல் பயிற்சி அளிக்க திட்டம்

சென்னை, மார்ச் 7: அரசுப்பள்ளி ஆசிரியர்கள் 1,200 பேர் கேரளத்துக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படவுள்ளனர். சுற்றுலாவில் ஆசிரியர்களுக்கு விண்வெளி அறிவியல் தொடர்பான பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழக பள்ளிக்கல்வித் துறையில் கற்றல், கற்பித்தல் பணிகளை மேம்படுத்த பல்வேறு விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் ஆசிரியர்களுக்கு பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக அரசுப் பள்ளி ஆசிரியர்கள் 1,200 பேர் தற்போது கேரளத்துக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

இது குறித்து பள்ளிக்கல்வித் துறை அதிகாரிகள் கூறியதாவது: ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டத்தின்கீழ் நடப்பு கல்வியாண்டில் அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் கணிதம், அறிவியல் பாட ஆசிரியர்களை கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 6 பட்டதாரி மற்றும் 4 முதுநிலை ஆசிரியர்கள் என 10 பேர் வீதம் மொத்தமுள்ள 120 கல்வி மாவட்டங்களுக்கு 1,200 பேர் தேர்வாகியுள்ளனர். அதன்படி ஆசிரியர்கள் கேரளத்தின் திருவனந்தபுரம் மாவட்டத்துக்கு கல்விச்சுற்றுலா செல்கின்றனர்.

மொத்தம் 4 நாள்கள் வரையான சுற்றுலாவில் தேசிய விண்வெளி ஆய்வு மையம், கணித தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள் ஆகிய இடங்களுக்கு ஆசிரியர்கள் நேரடியாக களப்பயணம் மேற்கொள்வர்.மேலும், விண்வெளி ஆய்வு தொடர்பான சிறப்பு பயிற்சி வகுப்புகளும் வல்லுநர் குழுவால் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட உள்ளது. இதன்மூலம் விண்வெளி அறிவியல் ஆர்வம் மாணவர்களிடம் ஊக்குவிக்கப்படும். ஆசிரியர்கள் பயிற்சியில் பெற்ற அனுபவம் மாணவர்களுக்கு சிறப்பான முறையில் கற்பித்தல் பணியை மேற்கொள்ள உதவும். மேலும், அறிவியல் செய்முறை கல்விக்கான முக்கியத்துவம் உயரவும் வழிவகுக்கும். இந்த கல்விச் சுற்றுலா பயணம் மத்திய ரயில்வே துறையின் உதவியுடன் மேற்

கொள்ளப்பட உள்ளது. ஆசிரியர்கள் அனைவரும் ரயில் மூலமாகவே சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர். இதற்காக ஒரு ஆசிரியருக்கு ரூ.2,000 என கணக்கிட்டு மொத்தம் ரூ.24 லட்சம் பயண நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதேபோல், இதர பாடங்களின் ஆசிரியர்களையும் அவர்களின் பாடங்கள் சார்ந்த வரலாற்று இடங்கள், கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகளுக்கு விரைவில் கல்விச்சுற்றுலா அழைத்துச் செல்ல திட்டமிட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன என்றனர்.

பொருளாதாரம் சரிந்து வருவதால் 6 கோடி பேர் வேலையிழப்பு



தூத்துக்குடி, மார்ச் 7: இந்தியாவில் பொருளாதாரம் சரிந்து வருவதால் இதுவரை 6 கோடி பேர் வேலை இழந்துள்ளனர் என்று புதுச்சேரி முதல்வர் வீ. நாராயணசாமி கூறினார்.

தூத்துக்குடியில் சனிக்கிழமை அவர் அளித்த பேட்டி: பிரதமர் மோடி தலைமையிலான ஆட்சியில் நாட்டில் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துள்ளது. நாட்டின் வளர்ச்சி விகிதம் 9 சதவீதத்தில் இருந்து தற்போது 4.5 சதவீதமாக குறைந்துள்ளது. தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. குறிப்பாக கட்டுமானத் துறையில் தேக்கம் நிலவுகிறது.

பண மதிப்பிழப்பு நடவடிக்கையால் பணப் புழக்கம் குறைந்துள்ளது. ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பை கொடுப்பதாக பிரதமர் மோடி தெரிவித்திருந்தார். ஆனால், இதுவரை 6 கோடி பேருக்கு வேலை இழப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா போன்ற நாடுகள் பொருளாதாரத்தில் உயர்ந்துள்ள நிலையில், நமது நாட்டில் பொருளாதாரம் சரிந்து வருவதற்கு காரணம் மத்திய அரசும், பிரமதர் மோடியும்தான் என்றார் அவர்.

மின்சாரம் தாக்கி பலியான தொழிலாளியின் குழந்தைகளுக்கு தலா ரூ.3 லட்சம்

இடைக்கால இழப்பீடாக வழங்க உத்தரவு

சென்னை, மார்ச் 7: மின்சாரம் தாக்கி உயிரிழந்த தொழிலாளியின் குழந்தைகளுக்கு தலா ரூ.3 லட்சம் இடைக்கால இழப்பீடாக வழங்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2012-ஆம் ஆண்டு பூந்தமல்லி அருகே கட்டுமானப் பணி செய்து கொண்டிருந்த போது, மின்சாரம் தாக்கி மணிகண்டன் என்பவர் பலியானார். இதுதொடர்பான வழக்கு பூந்தமல்லி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்தவழக்கில்குற்றம்சாட்டப்பட்டக் கட்டட உரிமையாளர் சிவ பிரகாசம், ஒப்பந்ததாரர் திருமுருகன் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில், தங்கள் மீதான வழக்கை ரத்து செய்ய வேண்டும் எனக் கோரியிருந்தனர்.

இந்த வழக்கு நீதிபதி எம்.தண்டபாணி முன், அண்மையில் விசாரணைக்கு வந்தது. அப்போது மணிகண்டன் இறந்த பின்னர், அவரது மனைவி இரண்டு குழந்தைகளையும் மணிகண்டனின் உறவினர் தியாகராஜன் என்பவரிடம் ஒப்படைத்துவிட்டு, வேறு நபரை திருமணம் செய்து கொண்டதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி பிறப்பித்தஉத்தரவில்,'பால்மனம்மாறா குழந்தைகளை விட்டுவிட்டு தாய் வேறொரு நபரை திருமணம் செய்துகொண்டுள்ளார். இதனால், அந்த குழந்தைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது. குழந்தைகளின் உறவினரான தியாகராஜன் அவர்களை பாதுகாத்து, படிக்க வைத்து பராமரித்து வருகிறார். தந்தையைப் பார்க்காத ஏக்கம், அந்தக் குழந்தைகளிடம் நடத்திய விசாரணையில் தெரிய வருகிறது. எனவே, இந்தக் குழந்தைகள் இருவருக்கும் தலா ரூ.3 லட்சத்தை இடைக்கால நிவாரணமாக வங்கியில் வைப்புத் தொகையாகச் செலுத்த வேண்டும்.

மேலும், தொழிலாளி மணிகண்டன் பலியான சம்பவம் தொடர்பாக இழப்பீட்டு வழக்கில் குழந்தைகளின் சார்பில் மணிகண்டனின் உறவினர் தியாகராஜனை எதிர்மனுதாரராகச் சேர்த்து, சம்பந்தப்பட்ட சாட்சிகளிடம் விசாரித்து உரிய இழப்பீட்டுத் தொகையை அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கப்படும் தொகை இடைக்கால நிவாரணத் தொகையான ரூ.6 லட்சத்தை விட, கூடுதலாக இருக்க வேண்டும். மேலும், தொழிலாளர் ஆணையர் மேற்கொள்ளும் விசாரணைக்கு காஞ்சிபுரம் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு உரிய சட்ட உதவிகளைச் செய்து கொடுத்து விசாரணையை கண்காணிக்க வேண்டும். மேலும், மனுதாரர்கள் மீது பூந்தமல்லி நீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்கை விரைவாக விசாரித்த முடிக்க வேண்டும்' என நீதிபதி பிறப்பித்த உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்மணி

dinamanithamizhmani@gmail.com 8.3.2020

பழமொழி நானூறு

முன்றுறையரையனார்

இரக்கம் உடையவரிடம் இரப்பாய்!

மரம்போல் வலிய மனத்தாரை முன்னின்று
இரந்தார், பெறுவதொன் றில்லை – குரங்கூசல்
வள்ளியி னாடு மலைநாட! அஃதன்றோ
பள்ளியுள் ஐயம் புகல். (பாடல் – 140)

குரங்குகள் வள்ளிக் கொடியின்கணிருந்து ஊசலாடுகின்ற மலை நாட்டை உடையவனே! மரத்தைப்போல வலிய கன்னெஞ் சுடையாரை, அவர் முன்பு நின்று இரப்பவர் பெறக்கடவதொரு பொருளுமில்லை; அவர் முன்பு நின்று இரத்தல், சமணப் பள்ளியுள் இரக்கப்புகுதலை யொக்கும். (க–து.) இரக்கம் உடையாரிடத்து இரப்பாயாக. **'பள்ளியுள் ஐயம் புகல்'** என்பது பழமொழி.

கூவத்து நாரணன்!



வள்ளல்களை எண்ணிக்கையின் அடிப்படையில் முதலெழு வள்ளல், இடையெழு வள்ளல், கடையெழு வள்ளல் என்று கூறுவர். அவர்கட்குப் பின்னரும் வள்ளல்கள் ஒரு சிலர் இந்நாட்டை அலங்கரித்தனர்.

அள்ளி வழங்கிய வள்ளல்களின் வரிசையில் பிற்காலத்தில் வாழ்ந்தவர் கூவத்து நாரணன். சென்னைக்கு மேற்கே உள்ள 'கூவம்' என்பது பாடல் பெற்ற திருத்தலம். திரிபுரமெரித்த சிவபெருமான் இங்கு வீற்றிருக்கின்றார். அரிய பெரிய அற்புதப் புண்ணியப் பதி இது. இத்தலத்தில் வாழ்ந்தவர் நாரணர். வரையாது வழங்கும் வள்ளல். வறியவர்கள் வந்தால் இன்முகங் காட்டி, இன்னுரை கூறி அள்ளி அள்ளி ஈந்து அவர்களது வறுமைப் பேயை ஓட்டி மகிழ்வித்து அனுப்புவார். அதனால், அவர் புகழ் எங்கும் பரவியது. அக்காலத்தில் அவரைப் பாராட்டாத பாவலரே யில்லை.

அடியவர் ஒருவர் அந்த ஊரில் ஆண்டுதோறும் குரு பூஜையை மிக்க அன்புடனும் ஊக்கத்துடனும் நடத்தி வந்தார். அந்தக் குரு பூஜையில் ஆயிரக்கணக்கான வறியவர்கட்கு அன்னதானம் வழங்குவார். அரிசி, பருப்பு முதலியவற்றைப் பலரிடம் கேட்டுப் பெறுவார்.

அடியவர், நாரணரிடம் வந்து 'விறகு வேண்டும்' என்றார். அவரும் தருவதாக வாக்களித்தார். அந்த அடியவர், "அண்ணலே! குரு பூஜையன்று வந்து விறகை வாங்கிக் கொள்கிறேன். இன்று பெற்றுக் கொண்டு போனால் விறகை வைக்க என் வீட்டில் இடமில்லை" என்று கூறிவிட்டுச் சென்றார்.

திருவருட் செயலால் 15 நாள்களாகவிட்டன. அடைமழை பெய்யத் தொடங்கியது. எங்கும் வெள்ளம். அதனால் தோட்டத்திலும், கடைகளிலும் உள்ள விறகுகள் யாவும் நனைந்து ஈரமாகிவிட்டன.

அடியார் குருபூஜை செய்யும் தினத்தன்று வந்து வள்ளல் நாரணனை வணங்கி, "ஐயனே! இன்றுதான் குருபூஜை. ஆயிரக்கணக்கில் அடியார்கட்கு அன்னம் இட ஏற்பாடு செய்திருக்கிறேன். அரிசி, பருப்பு, காய்கறிகள் எல்லாம் ஆயத்தமாகியிருக்கின்றன. இன்று விறகு தருவதாக வாக்களித்தீர்களே. அதனை இத்தருணத்தில் தந்து உதவி புரிய வேண்டும்" என்று வேண்டினார்.

நாரணர், 'நல்லது தருகின்றேன்' என்றார். விறகு அத்தனையும் நனைந்திருப்பதைக் கண்டார். நனைந்த விறகைத் தந்து என்ன பயன்? அடுப்பு எரியாதல்லவா? பல்லாயிரம் பேர் உண்ணுகின்ற அன்னதானம் ஒழுங்காக நடைபெறாதல்லவா? ஆக, உதவாத பொருளை உதவுவது முறையன்று என்று எண்ணினார்.

வீட்டில் உள்ள ஏவலர்களை அழைத்தார். வீட்டிலே ஒரு பகுதியைப் பிரிக்கச் செய்தார். ஓடுகளை இறக்குவித்தார். உத்திரம், கழிகள், தூண்கள் முதலிய மரங்களை வண்டியில் ஏற்றினார். "ஐயா கொண்டு போங்கள்... குருபூஜையை நடத்துங்கள். ஏழைகட்கு அன்னதானத்தைத் தாராளமாகச் செய்யுங்கள்" என்றார்.

அடியார் இந்த அருஞ்செயலைக் கண்டார்; அதிசயங்கொண்டார். "ஐயனே! இது என்ன செயல்? குடியிருக்கின்ற வீட்டைப் பிரிப்பது முறையா? என்னால் இந்த நிகழ்ச்சி நிகழலாமா? புண்ணிய மூர்த்தியாகிய தாங்கள் வீட்டை இடியச் செய்தா நான் குருபூஜை நடத்துவது? இது எனக்குப் பாவமல்லவா?" என்றார்.

நாரணர், "ஐயா! வருந்தற்க. இதுபோல் ஆயிரம் வீடு கட்டிக் கொள்ளலாம். குருபூஜை நமது விருப்பம்போல வராது. அதிலும் குருபூஜையில் அடியார்கட்கு அன்னமளிப்பது மிக உயர்ந்த புண்ணியம்" என்றார்.

மேலும், "தாங்கள் புரியும் குருபூஜையில் எத்தனையோ சிவஞானிகள் வந்து உண்பார்கள். அவர்கள் உண்ணும் உணவில் ஒவ்வோர் அன்னமும் கோடி பேர் உண்டதற்கு நிகரான புண்ணியத்தை நல்கும். ஆகவே, அத்தகைய மகேஸ்வர பூஜைக்கு விறகு தருவது சிறந்த அறச்செயலாகும். விறகுகள் அனைத்தும் நனைந்துள்ளன. நினைத்துப் பாரும்... நனைந்த விறகைத் தந்தால் அன்னதானம் நடக்குமா? இந்த வீடு போனால் என்ன? நாளை வேறு வீடு கட்டிக் கொள்வேன். தாங்கள் வருந்த வேண்டாம். இவற்றைக் கொண்டு போய் நல்ல காரியத்தை மகிழ்ச்சியுடன் செய்யுங்கள். இந்தக் குருபூஜை புண்ணியச் செயலில் எனக்கும் சிறிது பங்கு தந்த உமக்கு நன்றி! போய் வாரும்" என்று இன்னுரை கூறினார்.

அவருடைய அளப்பரிய அரும் பெருங்குணங்களைக் கண்டு அந்த அடியார் வியந்தார். அவ்விறகுகளைக் கொண்டுபோய் அன்னதானத்துக்குப் பயன்படுத்திக் கொண்டார். நாரணருடைய புகழ் மேலும் சுடர்விட்டுப் பிரகாசித்தது.

நல்ல பொருள்கள் கடையில் நெடுநாள்கள் தங்க மாட்டா. உடனே விலைபோய்விடும். அதுபோல் நற்குண சீலர்கள் உலகில் நெடுங்காலம் வாழ்வ தில்லை. தரும பூபதி கூவம் நாரணரும் திடீரென ஒரு நாள் (இளமையிலேயே) தமது பூதவுடம்பை நீத்துப் புண்ணிய உலகம் புகுந்தார்.

அதுகண்டு அனைவரும் ஆற்றொணாத அல்லலுற்று அழுதனர். 'வள்ளலே! வள்ளலே' என்று வாய் விட்டு அலறித் தொழுதனர். அப்போது புலவர் ஒருவர் எமனை நோக்கி, 'ஏ அந்தகனே! நீ குருட்டுப் பயல்; உனக்கு அறிவே கிடையாது. உலகில் இடாதார் பலர் இருக்கின்றனர். இடுவார் சிலரே உள்ளனர். இடாதாரை நீ கொண்டுபோகக் கூடாதா? கறி சமைக்க விறகு வேண்டுமானால் காட்டிலே கள்ளி மரம், வேலமரம், புங்கமரம், புளியமரம், எட்டிமரம் முதலிய மரங்கள் இல்லையா? ஊருக்கு நடுவே நிழலும், மலரும், கனியும் தந்து உதவிய கற்பக மரத்தையா நீ வெட்டுவது? இது நியாயமா?' என்று கண்ணீர் மல்கி அதை ஒரு பாடலாகப் பாடினார்.

'இடுவார் சிலரும் இடாதார் பலரும்
வடுவிலா வையத் திருப்ப – படுபாவீ
கூவத்து நாரணனைக் கொன்றனையே கற்பகப்பூங்
காவெட்ட லாமோ கறிக்கு'

–எம்.ஜி.விஜயலெக்ஷ்மி கங்காதரன்

அன்புள்ள ஆசிரியருக்கு...

பழக்கத்திற்கு வரவேண்டும்

'இயவர்' என்னும் சொல்லை இலக்கியச் சான்றுகள் காட்டி நினைவுபடுத்திய கட்டுரையாசிரியருக்கு நன்றி. வழக்கிழந்த பழந்தமிழ்ச் சொற்களையும் பழக்கத்திற்குக் கொண்டு வருவதும் நன்றே!

அ.சிவராமசேது, திருமுதுகுன்றம்.

சிறப்பான உவமை

புலவர் தாம் எடுத்துக்கொண்ட பொருளை விட அதை விளக்கக் கூறும் உவமை சிறப்பானதாகவும், உயர்வானதாகவும் இருக்கும் என்ற மரபுக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது, 'வெறுங்கூடு காத்த வேடனை'ப் போல ஓர் அன்னை அவளுடைய மகளை 'இற்செறிப்பு' செய்தாள் என்கிற முத்தொள்ளாயிரப் பாடலின் செய்தி!

அ.கருப்பையா, பொன்னமராவதி.

'இற்செறிப்பு' அவசியம்!

நாட்டு நடப்புகளைக்கூட நன்கு அறிந்திருக்கும் பெண்கள் காதலில் மட்டும் 'மடம்' உடையராய் இருப்பது அன்றும் இன்றும் தொடர்கிறது! இளமையில் காதலித்துத் திருமணம் செய்து கொள்வோரும்; தாம் தாயான பின் நற்றாயாய் விளங்க 'இற்செறிப்பு' செய்துதான் ஆக வேண்டும்போல!

பி.பல்லவன், சென்னை.

நெஞ்சைத் தொட்டது!

பேராசிரியர் ரேன்டி பாஷின் 'இறுதிச் சொற்பொழிவு' நூலில் கலாரசிகன் அடிக்கோடிட்ட வரிகளும், அவரின் இறுதி உரையில் கூறிய உணர்வுபூர்வமான வார்த்தைகளும் உண்மையிலேயே நெஞ்சத்தைத் தொட்டது.

ரவி சிவராமகிருஷ்ணன், கதிரம்பட்டி.

வளி பூட்டினையோ? மனம் பூட்டினையோ?

அரிய கீர்த்தனைகள் படைத்த அம்புஜம் கிருஷ்ணா!

ஒருவன் மிகவும் விரைவாகச் சென்றான் என்பதை 'வாயு வேகம் மனோ வேகமாகச்' சென்றான் என்று கூறுவது வழக்கம். இதே சொற்றொடரை புலவர் ஒக்கூர் மாசாத்தியார் (அகம்.384) பயன் படுத்தியுள்ளார்.

நெடிய போர் முடிவுக்கு வந்தது. அவனுடைய அரசன் மாற்றானுடன் புரிந்த போரில் வெற்றி பெற்றுப் பாசறைக்குத் திரும்பிவிட்டான். வீரனுடைய ஊர் நெடுந்தொலைவுக்கு அப்பால், முயற்குட்டிகள் தாவித் திரியும் அழகிய முல்லைநிலக் காட்டின் அருகே, வரகுக் கொல்லைகள் சூழ்ந்துள்ள ஒரு சிற்றூர். அங்கே இருக்கும் தன் இல்லத்தில் மனைவி அவனுக்காகக் காத்திருக்கிறாள். பல நாள்களுக்கு முன்பு தன்னுடைய அரசனுக்காகத் தான் ஆற்ற வேண்டிய கடமைக்காகப் புறப்பட்டுச் சென்றவனுடைய மனத்தில் இப்போது மனைவியின் நினைவு வந்து விட்டது.

விரைவாகச் சென்று அவளைக் காண விரும்பியவன் தன் தேரில் ஏறிக் கொள்கிறான். தேர் புறப்படுகின்றது. தேர் புறப்பட்டதை மட்டுமே அவன் அறிந்தான். தேர் எப்படிச் சென்றது, எவ்வழியாகச் சென்றது என்பதையெல்லாம் அவன் அறியவில்லை. அவன் வீட்டுக்கு முன்பாகத் தேரை நிறுத்தி, 'இறங்குங்கள்' என்று தேர்ப்பாகன் கூறியதைத் தேட்டு வீரன் மருள்கிறான்!


அவனை நோக்கி, "தேர்ப்பாகனே! தேரில் ஏறியதை மட்டுமே நான் அறிந்தேன். இப்போது என் இல்லத்தருகே தேரை நிறுத்திவிட்டு 'இறங்குக' என்கிறாயே! தேரில், வானில் இயங்கும் காற்றைப் பூட்டினாயோ? அல்லது என் மனைவியைக் காண ஆவல் பூண்டிருந்ததைப் புரிந்து கொண்ட உன் மனத்தைதான் குதிரைகள் வடிவில் பூட்டினாயோ? நான் அறியேன். இதை எனக்குச் சொல்வாயாக! என் மனம நிறைந்து தேரைச் செலுத்திய பாகனே! நீ நீடூழி வாழ்வாயாக!" என்று மனமார வாழ்த்தி, நன்றி செலுத்தும் காட்சியை கீழ்க்காணும் பாடலில் காணமுடிகிறது.

'இருந்த வேந்தன் அருந்தொழில் முடித்தெனப்
புரிந்த காதலொடு பெருந்தேர் யானும்
ஏறிய தறிதன் றல்லது வந்தவாறு
நனியறிந்தன்றோ இலனே தாஅய்
முயற்பறழ் உகளும் முல்லையம் புறவிற்
கனவக்கதிர் வர்கின் சீறூர் ஆங்கண்
மெல்லியல் அரிவை இல்வயின் நிறீஇ
இழிமின் என்ற நின்மொழி மருண்டிசினே
வான் வழங்கியற்கை வளி பூட்டினையோ?
மானுருவாக நின் மனம் பூட்டினையோ?
உரைமதி வாழியோ வலவ!' (அகம் – 384)

தன் தலைவனுடைய உளபாங்கிற்கேற்ப தேரைச் செலுத்தும் திறமை மிக்கவன் தேர்ப்பாகன்; தேரில் பூட்டிய குதிரைகளோ பாகனின் குறிப்புணர்ந்து தேரை இழுத்துக் கொண்டு விரையக் கூடிய ஆற்றல் மிக்கவை. அதனால்தான் வீரன், 'ஏன் மனத்தைத் தேரில் பூட்டினாயோ?' என்று வினவாமல் 'உன் மனத்தைக் குதிரைகள் வடிவில் பூட்டினாயோ?' என்று வினவுகிறான்.

இதய மாற்று சிகிச்சைக்காக இதயத்தைச் சுமந்துகொண்டு அவசர ஊர்தியில் (ஆம்புலன்ஸ்) விரைந்ததைப் பார்த்திருக்கிறோம். இந்த அகப்பாடலில் ஒருவரின் இதயத் துடிப்பை அடுத்தவர் ஏந்திக்கொண்டு பறந்து சென்று இலக்கினை அடைந்த காட்சியைக் கண்டு வியக்கிறோம்! மகிழ்கிறோம்!

–மயிலாடுதுறை இரா. மலர்விழி



ஆண்தன் (கவிதன்) தீர்த்தனைகள் இயற்றிய அளவுக்குப் பெண்கள் இயற்றவில்லை என்கிற குறையைத் தீர்க்க வந்தவர் அம்புஜம் கிருஷ்ணா. அரிய கீர்த்தனைகள் பல இயற்றிய இவர், 1917-ஆம் ஆண்டு, மே, 20-ஆம் நாள் மதுரையில் பிறந்தவர்.



தில்லி சென்று இளங்கலை பயின்றவர். இளமையிலேயே கவிதைகள் பல எழுதுவதில் வல்லவராகவும் திகழ்ந்திருக்கிறார். தமிழ், ஹிந்தி, கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் 650க்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியவர்.

இவர் தாமே பாடல்களை எழுதியதுடன், அதற்குத் தாமே இசையமைத்தும், இன்ன பண் என்பதைக் குறித்தும் எழுதிய நூல்தான் 'கீதமாலா'. இவை பல பாகங்களாக வெளிவந்திருக்கின்றன. சிவனையும், முருகனையும் கண்ணனையும் புகழ்ந்து பக்தி உணர்வோடு இவர் பாடிய பாடல்கள் உள்ளத்தை உருக செய்பவை. இன்றைக்கும் அவை பல சபாக்களில் இசைப் பாடலாகவும், இசை நாட்டியமாகவும் நடத்தப்பட்டு வருகின்றன.

அம்புஜம் கிருஷ்ணா குறித்து அவரது உறவினர் லக்ஷ்மி சடகோபன் இவ்வாறு கூறுகிறார்: "மாமியைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், அவர் எளிமையும், அன்பும், பண்பும் நிறைந்த மேதை. அளவற்ற செல்வமும் செல்வாக்கும் இருந்தும் அவற்றைப் பெரிதாக எண்ணாது இறைவனும், பக்தியும், பாட்டும், சங்கீதமுமாகவே வாழ்ந்தவர். அவரிடமிருந்து பாட்டுக்கள் மடைதிறந்த வெள்ளமாக வரும். அவர் தந்தையார் வக்கீல் ரங்க ஐயங்கார். பாட்டுக்களின் வார்த்தைகள் அவற்றின் அர்த்தம் தெரிந்து ஈடுபாடோடு பாடவேண்டும் என்றும் சொல்பவர் கிருஷ்ணா".

அம்புஜம் கிருஷ்ணா எழுதிய ஊஞ்சல் பாட்டு இது:

ஆடினளே தன்னுள்ளம் ஆனந்தமாகவே
ஆரணங்கு ருக்மிணி அச்சுதன் கோபாலனுடன் (ஆடினளே)

தன்யாசி

கோடி மன்மத கோவிந்தன் ரூபம் கண்டு
கோமள முக கமலம் நாணமுடன் சிவக்க (ஆடினளே)

சண்முகப்பிரியா

பாற்கடல் துயில் பரமன் பதமலர் பிடிக்கும் பாவை
பத்மநாபன் கரம் பிடித்துப் பாங்குடன் அமர்ந்து (ஆடினளே)

மோகனம்

குன்றெடுத்த திண்தோளின் வண்ணமாலை சூட்டி
என்றும் மார்பமர்பவள் வலப்பக்கம் அமர்ந்து (ஆடினளே)

சிவபெருமானைப் போற்றிப் பாடிய பாடல் இது:

பல்லவி

வலம் வந்து நலம் பெறலாமே – ஐயனை
வலம் வந்து நலம் பெறலாமே – நாளும்
ஆலகாலமுண்ட நீலகண்டனின் ஐந்தெழுத்தை ஓதியோதி (வலம்)

சரணங்கள்

மலைமங்கைதனைப் பங்கில் வைத்துகந்தானைக்
கலைமதியுடன் கங்கை சடை அணிந்தானைக்
கலைமானுடன் மழு கரமேத்தித் திகழ்ந்தானைப்
புலியுடை இடையானை முனிவர்க்கருள் கூர்ந்தானை (வலம்)

தில்லையில் ஒரு காலெடுத்து நடனமாடுமீசனை
பாலனுக்கிரங்கி முன்னம் காலனை உதைத்த சீலனை
மாலையாயரவு பூண்டானை மாரனைச் சினந்து எரித்தானை
சிலையெடுத்துச் சிரிப்பாலன்று திரிபுரமெரித்து நின்றானை (வலம்)

இவ்வாறு சிவபெருமான் நிகழ்த்திய புராணச் செய்திகளையும், திருவிளையாடல்களையும் இப்பாடலில் தெரிவித்துள்ளார்.

அம்புஜம் அம்மையார், 1989-ஆம் ஆண்டு, அக்டோபர் 20-ஆம் நாள் இறையடி சேர்ந்தார். இவருக்கு மூன்று மகன்களும், ஒரு மகளும் உள்ளனர். ஆண்டுதோறும் தன் தாயின் நினைவு நாளன்று அவர் இயற்றிய பாடல்களைக் கொண்டே இசை நிகழ்ச்சி நடத்தி ஆடியும் பாடியும் தங்களது அஞ்சலியை செலுத்தி வருகின்றனர் வாரிசுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

–தாயம்மாள் அறவாணன்

இந்த வாரம்

கலாரசிகன்

எண்பதுகளில் 'சாவி' வார இதழில் உதவி ஆசிரியராக இருந்த போது, எங்கள் அலுவலகத்திலிருந்து 100 மீட்டர் தூரத்தில், அடுத்த தெருவில் தி.மு.க. பொதுச் செயலாளர் க. அன்பழகனின் அண்ணா நகர் வீடு. பல மாலைப் பொழுதுகளில் அவரது வீட்டு வராந்தாவிலும், திண்ணையிலும் அமர்ந்து, அவர் பகிர்ந்து கொள்ளும் சுவாரஸ்யமான செய்திகளையும், சம்பவங்களையும் வாய் பிளந்தபடி கேட்டு, மனதில் பதிவு செய்து கொண்ட துண்டு.



அவருக்கே இயல்பான ஒருவித நகைச்சுவை பாணி இருந்தது. பெரியவர், சிறியவர் என்கிற பேதமில்லாமல் வெளிப்படையாகப் பேசும் அவரது சுபாவம் இயல்பானது. செயற்கைத்தனம் சற்றும் இருக்காது. திராவிட இயக்கத் தலைவர்கள் பலர் குறித்த எனது புரிதலும், அபிப்பிராயங்களும், அவர் அவ்வப்போது தெரிவித்த செய்திகளின் அடிப்படையிலானவை.

தனிப்பட்ட முறையில் என் மீது அவருக்கு எப்போதுமே ஒருவித அன்பு உண்டு. நேரில் அவரை நான் சந்திப்பது பிற்காலங்களில் மிகவும் குறைந்துவிட்டது. என்றாலும்கூட, என்னுடைய நண்பர்கள் அவரைச் சந்திக்கும் போதெல்லாம், அவர் என்னைப் பற்றி விசாரிக்கத் தவறுவதில்லை. நானும், நண்பர் பேராசிரியர் நெடுஞ்செழியன் மூலம் அவரது உடல்நலம் குறித்து விசாரிக்காமல் இருந்ததில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்பு நண்பரும், பத்திரிகையாளருமான 'ப்ரியன்' ஸ்ரீநிவாசனுடன் அவரது 'ஆஸ்பிரான் கார்டன்' இல்லத்துக்குச் சென்று உடல்நலம் விசாரித்து, நீண்டநேரம் அளவளாவிக் கொண்டிருந்தது எனது வாழ்க்கையில் மறக்க முடியாத, குறிப்பிடத்தக்க தருணங்களில் ஒன்று.

தி.மு.க. தலைமையிடம் எனக்கு ஒரு மிகப்பெரிய ஆதங்கமும், குறையும் உண்டு. 2007-இல் குடியரசுத் தலைவர் பதவிக்கான தேர்வு நடந்தபோது, ஆட்சியில் இருந்த காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இரண்டாவது பெரிய கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி வேட்பாளராக வடநாட்டைச் சேர்ந்த பிரதிபா பாட்டீல் தேர்வு செய்யப்பட்டார். வடநாட்டைச் சேர்ந்த ஒருவர் குடியரசுத் தலைவர் ஆகும்போது, தென்னாட்டைச் சேர்ந்த ஒருவர் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதுதான் அதுவரை வழக்கமாக இருந்த மரபு. அந்த அடிப்படையில் க.அன்பழகனை குடியரசுத் துணைத் தலைவராக ஆக்க தி.முக. அழுத்தம் கொடுத்திருந்தால், முதன்முறையாக திராவிட இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் இந்தியாவின் குடியரசுத் துணைத் தலைவராகவும், 2012-இல் குடியரசுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

'தினமணி'யின் தலையங்கத்தில் இதைக் குறிப்பிட்டு எழுதி பரிந்துரைத்தும்கூட, அந்த ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்கிற ஆதங்கம் எனக்கு உண்டு. தனது அரசியல் பயணத்தில் இதுபோலப் பல ஏமாற்றங்களையும் சந்தித்தவர் என்பதால், அதுகுறித்து ஒரு வார்த்தை கூட அவர் பேசவில்லை என்பது அவரது பெருந்தன்மை. அவர் ஏற்றுக் கொண்ட தலைவரான அண்ணா கூறியதுபோல, 'எதையும் தாங்கும் இதயம்' அவருக்கு இருந்தது.

இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருப்பதற்கான அனைத்துத் தகுதியும் பெற்ற ஒருவர், தி.மு.க.வின் பொதுச் செயலாளராக 43 ஆண்டுகள் தொடர்ந்து இருந்து மறைந்திருக்கிறார். அவரது சிதைக்கு நெருப்பு வைக்கப்பட்டாலும்கூட, என்போன்ற பலரின் நெஞ்சங்களில் அவரது நினைவு, எங்கள் வாழ்நாள் காலம் புதைந்து கிடக்கும்.

டாக்டர் வெ.ஜீவாவுடன் பேசியும், சந்தித்தும் ஆண்டுகள் பலவாகிவிட்டன. ஈரோடில் நடந்த தோழர் ஸ்டாலின் குணசேகரன் இல்லத் திருமண வரவேற்பு விழாவில் அவரை சந்திக்க இயலாமல் போனதில் எனக்கு சற்று வருத்தம்தான்.

ஈரோடு மருத்துவர் வெ.ஜீவா 'இடது' என்னும் தத்துவார்த்த இதழின் ஆசிரியர். நல்ல பல ஆங்கில நூல்களைத் தமிழாக்கம் செய்திருப்பவர். அவரது மொழிபெயர்ப்பில் வெளிவந்திருக்கும் புத்தகம் 'நாஜி வதை முகாமில் நான் எண் 119104'. ஜெர்மானிய யூதர் டாக்டர் விக்டோர் இ. ஃபிராங்கில் எழுதிய புத்தகம் இது. நாஜிகளின் வதை முகாம்கள் எப்படி இருந்தன என்பதைப் படம்பிடித்துக் காட்டும் நூல்கள் ஆயிரக்கணக்கில் வெளிவந்துள்ளன. அவற்றிலிருந்து இந்தப் புத்தகம் சற்று வேறுபடுகிறது.



வெறும் முகாம்கள் குறித்தும் அவற்றில் நடத்தப்படும் சித்திரவதைகள் குறித்தும் மட்டுமே எழுதப்பட்ட பதிவு அல்ல இது. உளவியல் அடிப்படையில் மனோதத்துவ மருத்துவரான டாக்டர் விக்டோர் இ. ஃபிராங்கில் அங்கே நடந்த கொடூரமான சம்பவங்களை விவரிக்கிறார். உளவியல் அடிப்படையில் தனது அனுபவங்களை ஆய்ந்து பதிவு செய்கிறார்.

கைதிகளின் உள்மன இயக்கங்கள், புறத்தில் நிகழும் கொடுமைகள், இரண்டுக்குமான மோதலின் விளைவாக அவர்களது சிந்தனைப் போக்கு எவ்வாறெல்லாம் இருந்தன என்பது பதிவாகியிருக்கிறது. நம்மால் கனவிலும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத, நம்ப முடியாத சூழலில் வதை பட்டுக் கிடக்கும் கைதிகள், அந்த நிலையிலும் அன்பும், நம்பிக்கையும், மனித நேயமும் கொண்டவர்களாக இருந்த சில சம்பவங்கள் உள்ளத்தை உலுக்குகின்றன.

வதை முகாம்களில் நாஜிகள் செய்த சித்திர வதைகள் குறித்த குலை நடுங்க வைக்கும் நிஜக் கதை 'நாஜி வதை முகாமில் நான்...'. படித்து முடிக்கும்போது மனிதனுக்குள் இருக்கும் மிருகம் எவ்வளவு கொடூரமானது என்பது புரிகிறது.

கவிஞர் கே.ஆர்.அப்பாவு எழுதிய கவிதைகளின் தொகுப்பு 'மறுபக்கம்'. அதிலிருந்து ஒரு கவிதை.

நதிகளுக்கெல்லாம்
பெண்களின் பெயர்களை
வைத்துவிட்டு
நதிகளை இணைக்க வேண்டும்
நதிகளை இணைக்க வேண்டும்
என்றால் எப்படி?

அடுத்த வாரம் சந்திப்போம்...

சட்டப் பேரவை நாளை கூடுகிறது

க.அன்பழகன், 2 எம்.எல்.ஏ.க்களுக்கு இரங்கல் தெரிவித்து ஒத்திவைப்பு

சென்னை, மார்ச் 7: தமிழக சட்டப் பேரவை திங்கள்கிழமை (மார்ச் 9) காலை கூடுகிறது.



மறைந்த திமுக பொதுச் செயலாளர் க.அன்பழகன், திமுக எம்.எல்.ஏ.க்கள் 2 பேருக்கு இரங்கல் தெரிவித்து பேரவை ஒத்திவைக்கப்படுகிறது. இதன்பின்பு மீண்டும் வரும் புதன்கிழமை பேரவைக் கூடவுள்ளது. நிதிநிலை அறிக்கைக்காக தமிழக சட்டப் பேரவை கடந்த பிப்ரவரி 14-இல் கூடியது. அதன்பின் பிப்ரவரி 19-ஆம் தேதியன்று சட்டப் பேரவை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில், தமிழக சட்டப் பேரவை மீண்டும் வரும் திங்கள்கிழமை காலை 10 மணிக்கு கூடுகிறது.


மறைந்த முன்னாள் உறுப்பினரும், திமுக பொதுச் செயலாளருமான க.அன்பழகன், முன்னாள் உறுப்பினர் ப.சந்திரன் ஆகியோர் மறைவுக்குப் பேரவையில் இரங்கல் தெரிவிக்கப்பட உள்ளது.

மேலும், மறைந்த திமுக எம்.எல்.ஏ.க்கள் கே.பி.பி.சாமி, எஸ்.காத்தவராயன் ஆகியோருக்கும் பேரவையில் இரங்கல் தெரிவித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.

இதன்பின்பு பேரவை அன்றைய தினம் முழுவதும் ஒத்திவைக்கப்பட உள்ளது. மீண்டும் புதன்கிழமை (மார்ச் 11) முதல் பேரவைக்கூட்டம் நடைபெறும். அன்றைய தினம் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெறவுள்ளது. அன்றைய தினத்தில் இருந்து ஏப்ரல் 9-ஆம் தேதி வரை பேரவைக் கூட்டத் தொடர் நடைபெற விருக்கிறது.

அனைத்து நாட்டவருக்கும் குடியுரிமை வழங்க எந்த நாடும் முன்வராது

புது தில்லி, மார்ச் 7: அனைத்து நாட்டவருக்கும் குடியுரிமை வழங்குவதற்கு எந்தவொரு நாடும் முன்வராது என்று வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.



தில்லியில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்.

தில்லியில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் எஸ்.ஜெய்சங்கர் பங்கேற்றார். அப்போது, மத்திய அரசு இயற்றிய குடியுரிமை திருத்தச் சட்டம் தொடர்பாக அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் பதிலளித்ததாவது:

குடியுரிமை திருத்தச் சட்டம் வாயிலாக நாடற்றவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மத்திய அரசின் அந்த நடவடிக்கை பாராட்டப்பட வேண்டும். உள்நாட்டு மக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் குடியுரிமை திருத்தச் சட்டம் வடிவமைக்கப்பட்டது.

குடியுரிமை வழங்குவது தொடர்பாக ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு கண்ணோட்டங்களும் கருத்துகளும் உள்ளன. அனைத்து நாட்டவருக்கும் குடியுரிமை வழங்கத் தயாராக இருக்கும் ஒரு நாடு கூட உலகில் இல்லை. அனைத்து நாட்டவருக்கும் குடியுரிமை வழங்க எந்த நாடும் முன்வராது என்றார் எஸ்.ஜெய்சங்கர்.

ஜம்மு-காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவின் கருத்தை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் இயக்குநர் ஏற்காதது தொடர்பாக அந்நிகழ்ச்சியில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு எஸ்.ஜெய்சங்கர் பதிலளிக்கையில், "ஜம்மு-காஷ்மீர் விவகாரத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் இயக்குநர் தவறான கண்ணோட்டத்தையே கொண்டுள்ளார்.

எல்லை தாண்டிய பயங்கரவாதம் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் எந்தவித கருத்தையும் தெரிவிப்பதில்லை. ஜம்மு-காஷ்மீர் விவகாரத்தை அந்த ஆணையம் கையாண்டு வருவதை நாம் கவனிக்க வேண்டும்" என்றார்.

உள்நாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களின் நலனைக் கருத்தில் கொண்டே ஒருங்கிணைந்த பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு (ஆர்சிஇபி) ஒப்பந்தத்தில் இந்தியா இணையவில்லை என்று எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

கரோனா பாதிப்பு சூழல்: பிரதமர் மோடி தலைமையில் ஆய்வுக் கூட்டம்

புது தில்லி, மார்ச் 7: நாட்டில் கரோனா வைரஸ் பாதிப்பு சூழல் குறித்த ஆய்வுக் கூட்டம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் தில்லியில் சனிக்கிழமை நடைபெற்றது.

அப்போது, சம்பந்தப்பட்ட துறைகளின் நடவடிக்கைகளை ஆய்வு செய்த பிரதமர் மோடி, தனி வார்டுகள் அமைப்பதற்கு போதிய இடவசதிகளை கண்டறியுமாறும், கரோனா பாதிப்பு தீவிர மடையும் பட்சத்தில் அதை எதிர்கொள்வதற்கு தகுந்த பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

உலக நாடுகளை ஆட்டிப் படைத்து வரும் கரோனா வைரஸின் தாக்கம், இந்தியாவையும் எட்டியுள்ளது. நாட்டில் அந்த வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தற்போதைய நிலையில் 34-ஆக உள்ளது. அந்த வைரஸ் பாதிப்பு அதிகரிக்காமல் இருப்பதற்கான தீவிர நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட துறைகள் மேற்கொண்டு வருகின்றன.

இச்சூழலில் கரோனா பாதிப்பு சூழல் குறித்த ஆய்வுக் கூட்டம் தில்லியில் பிரதமர் மோடி தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன், இணையமைச்சர் அஷ்வினி குமார் சௌபே, வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், அமைச்சரவைச் செயலர் ராஜீவ் கௌபா, நீதி ஆயோக் உறுப்பினர் வினோத் பால், முப்படைத் தளபதி விபின் ராவத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அவர்களுடன் சுகாதாரத்துறை, மருந்துகள் தயாரிப்புத் துறை, விமானப் போக்குவரத்துத் துறை, வெளியுறவுத் துறை, உள்துறை, கப்பல் போக்குவரத்துத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் செயலர்களும் பங்கேற்றனர்.

ஆய்வுக் கூட்டத்தில், நாட்டில் தற்போது நிலவும் கரோனா பாதிப்பு சூழல், அதைக் கையாள சுகாதாரத்துறை மற்றும் இதர அமைச்சகங்கள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் ஆகியவை தொடர்பாக சுகாதாரத் துறை செயலர் பிரீத்தி சுதன் விளக்கமளித்தார்.

நாட்டின் நுழைவுப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு நடவடிக்கைகள், ஆய்வக சோதனைகள், மருத்துவமனைகளின் தயார்நிலைகள் உள்ளிட்டவை தொடர்பாகவும் அவர் எடுத்துக் கூறினார். மருந்துகளின் கையிருப்பு, அவற்றின் பயன்பாடு உள்ளிட்டவை குறித்து மருந்து தயாரிப்புத் துறை செயலர் விளக்கமளித்தார். விமான நிலையங்கள், துறைமுகங்கள், சாலை மார்க்கத்தின் எல்லைகள் ஆகியவற்றில் தொடர்ந்து கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது போன்றவை குறித்தும் அப்போது ஆலோசிக்கப்பட்டது.



தில்லியில் சனிக்கிழமை நடைபெற்ற கரோனா வைரஸ் பாதிப்பு சூழல் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் பிரதமர் மோடி, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன், வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், மத்திய இணையமைச்சர் அஷ்வினி குமார் சௌபே.

ஆய்வுக் கூட்டத்தின்போது பிரதமர் மோடி பேசியதாக அதிகாரப்பூர்வ அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

கரோனா பாதிப்பு சூழலை எதிர்கொள்ள சம்பந்தப்பட்ட அமைச்சகங்களும், துறைகளும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை. தற்போதைய சூழலில் அவை ஒன்றோடொன்று ஒத்துழைப்புடன் பணியாற்ற வேண்டும்.

கரோனா பாதிப்பு இருக்கும், இருப்பதற்கான அறிகுறிகள் தெரியும் நபர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிப்பதற்கு தனி வார்டுகளை உருவாக்குவதற்கான போதிய இடவசதிகளை கண்டறிய வேண்டும். கரோனா பாதிப்பு தீவிரமடையும்பட்சத்தில் அதை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

கரோனா வைரஸ் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன், முன்னெச்சரிக்கையாக மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகளையும் அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அதிக அளவில் கூட்டமாகக் கூடுவதை முடிந்தவரை தவிர்க்குமாறு மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும். கரோனா வைரஸ் பாதிக்காமல் இருக்க செய்யக் கூடியவை, செய்யக் கூடாதவை குறித்து மக்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

உலகம் முழுவதிலும், மாநிலங்களிலும் கரோனா வைரஸ் பாதிப்பை எதிர்கொள்வதற்கு கடைப்பிடிக்கப்படும் சிறந்த நடவடிக்கைகளை அடையாளம் கண்டு, அதைப் பின்பற்ற வேண்டும். கரோனா பாதிப்பு சூழலை எதிர்கொள்ள முன்கூட்டியே திட்டமிடல், தகுந்த நேரத்தில் உரிய நடவடிக்கை எடுத்தல் போன்றவை மிக முக்கியமாகும் என்று பிரதமர் மோடி பேசியதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஹிந்துத்துவ கொள்கையை சிவசேனை கைவிடவில்லை

லக்னௌ, மார்ச் 7: 'பாஜகவிடம் இருந்துதான் சிவசேனை தனது உறவை துண்டித்துக் கொண்டதே தவிர, ஹிந்துத்துவ கொள்கைகளிலிருந்து தன்னை துண்டித்துக் கொள்ளவில்லை' என உத்தரப் பிரதேச மாநிலம், அயோத்திக்கு வருகை தந்த சிவசேனைத் தலைவரும் மகாராஷ்டிர முதல்வருமான உத்தவ் தாக்கரே சனிக்கிழமை தெரிவித்தார்.

காங்கிரஸ், என்சிபியுடன் கூட்டணி அமைத்துக் கொண்டதால் சிவசேனை தனது சித்தாந்தமான ஹிந்துத்துவாவில் இருந்து பின்வாங்கி விட்டதா என செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு உத்தவ் தாக்கரே இவ்வாறு தெரிவித்தார்.

மகாராஷ்டிர முதல்வராக கடந்த ஆண்டு டிசம்பரில் பதவியேற்ற பிறகு முதன்முறையாக சனிக்கிழமை அயோத்திக்கு வருகை தந்த அவர் அங்கு ராமர் கோயில் கட்ட ரூ. 1 கோடியை நன்கொடையாக வழங்குவதாக அறிவித்தார்.

அயோத்தியில் தற்காலிக ராமர் கோயிலில் தரிசனம் செய்வதற்கு முன் உத்தவ் தாக்கரே செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நான் பாஜகவிடம் இருந்துதான் பிரிந்துவிட்டேன், ஹிந்துத்துவ கொள்கையிலிருந்து பின்வாங்கவில்லை. பாஜகவும், ஹிந்துத்துவமும் ஒன்றல்ல.

அயோத்தியில் உத்தவ் தாக்கரே



அயோத்தியில் சனிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்புக்கூட்டத்தில் பங்கேற்று பேசிய மகாராஷ்டிர முதல்வர் உத்தவ் தாக்கரே. அருகில் மாநில சுற்றுச்சூழல்துறை அமைச்சர் ஆதித்ய தாக்கரே.

அயோத்தியில் ராமர் கோயில் கட்டுமானத்திற்கு பங்களிப்பாக எனது அறக்கட்டளையிலிருந்து ரூ.1 கோடியை நன்கொடையாக வழங்குகிறேன்.

ஒரு முதல்வராகவோ அல்லது மகாராஷ்டிர அரசு சார்பிலோ நான் இதை வழங்கவில்லை. என்னுடைய தனிப்பட்ட பங்களிப்பாக அளிக்கிறேன். ஏனென்றால் நான் ஒரு ராம பக்தன்.

மகாராஷ்டிர மக்கள் அயோத்திக்கு வரும்போது, அவர்கள் தங்குவதற்காக 'மகாராஷ்டிர பவன்' கட்ட விரும்புகிறேன். மகாராஷ்டிர அரசு சார்பில் அயோத்தியில் அமைப்பதற்காக வெள்ளிக்கிழமை உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்திடம் பேசினேன். இதற்காக அயோத்தியில் நிலம் வழங்குமாறு அவரிடம் கேட்டுக் கொண்டேன்.

நான் இங்கு வந்த ஒவ்வொரு முறையும் ராமரின் ஆசீர்வாதங்களுடன் திரும்பிச் சென்றிருக்கிறேன். அதனால்தான் நல்ல விஷயங்கள் நடந்துள்ளன.

கடந்த 2018- நவம்பரில் ராமர் கோயில் கட்டப்படுமா, யார் கட்டுவார்கள் என்ற நிச்சயமற்ற நிலையில் தான் இங்கு (அயோத்தி) வந்தேன். பின்னர் உச்சநீதிமன்ற தீர்ப்பு 2019- நவம்பரில் வந்தது.

எனது வருகைக்குப் பின் சரியாக ஓராண்டு கழித்து நான் மகாராஷ்டிர முதல்வரானேன். அதேபோல, மக்களவைத் தேர்தலுக்குமுன் அனைத்து வேட்பாளர்களுடன் அயோத்தி வந்தேன். மகாராஷ்டிரத்தில் எங்களுக்கு நல்ல வெற்றி கிடைத்தது என்றார்.

அயோத்தி பயணத்தில் உத்தவ் தாக்கரேயின் மனைவி ரஷ்மி, மகனும், மகாராஷ்டிர சுற்றுலாத்துறை அமைச்சருமான ஆதித்ய தாக்கரே உள்ளிட்டோர் உடன் சென்றுள்ளனர்.

முன்னதாக, சரயு ஆற்றங்கரையில் மாலையில் ஆரத்தி நிகழ்ச்சியில் உத்தவ் தாக்கரே கலந்துகொள்வதாக இருந்தது. கரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக, ஆரத்தி நிகழ்ச்சியில் அவர் கலந்துகொள்ள மாட்டார் என அறிவிக்கப்பட்டது.

ம.பி.யில் மாயமான சுயேச்சை எம்எல்ஏ திரும்பி வந்தார்

போபால், மார்ச் 7: மத்தியப் பிரதேசத்தில் மாயமான 4 எம்எல்ஏக்களில் ஒருவர், தில்லியில் இருந்து போபால் நகருக்கு திரும்பி வந்துள்ளார். தன்னை யாரும் கடத்தவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

மத்தியப் பிரதேசத்தில் கமல்நாத் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வருகிறது. மாநிலத்தில் 114 உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரஸ் கட்சி, 2 பகுஜன் சமாஜ் கட்சி எம்எல்ஏக்கள், ஒரு சமாஜவாதி எம்எல்ஏ, 4 சுயேச்சை எம்எல்ஏக்கள் ஆகியோரின் ஆதரவுடன் ஆட்சி செய்து வருகிறது. இந்நிலையில், காங்கிரஸ் எம்எல்ஏக்கள் மூவரும், சுயேச்சை எம்எல்ஏ ஒருவரும் கடந்த சில தினங்களுக்கு முன் மாயமானார்கள். மாநிலத்தில் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக, அவர்களை பாஜகவினர் கடத்தி வைத்திருப்பதாக காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியது. ஆனால், அந்தக் குற்றச்சாட்டை பாஜக மறுத்துவிட்டது.

இந்நிலையில், மாயமானவர்களில் ஒருவரான பர்ஹான்பூர் தொகுதி சுயேச்சை எம்எல்ஏ சுரேந்திர சிங் ஷேரா, தில்லியில் இருந்து விமானத்தில் சனிக்கிழமை மதியம் போபால் வந்தார். விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

என்னை யாரும் கடத்தவில்லை. கமல்நாத்துடன் கடந்த 25 ஆண்டுகளாக இருக்கிறேன். அவரது தலைமையிலான அரசுக்கு எனது ஆதரவு தொடரும் என்று அவர் உறுதியளித்தார்.

இருப்பினும், மற்ற எம்எல்ஏக்களான காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஹர்தீப் சிங் டாங், பிஷெளலால் சிங், ரகுராஜ் கன்சானா ஆகியோர் எங்கே இருக்கிறார்கள் என்று இது வரை தெரியவில்லை.

அரசுத் தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறியதால் குற்றவாளியை விடுதலை செய்ய முடியாது

சென்னை, மார்ச் 7: கொலை வழக்கில், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டதாலேயே, குற்றவாளியை விடுதலை செய்ய முடியாது என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை அரும்பாக்கத்தைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன் மீது கடந்த 2003-ஆம் ஆண்டு கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கில் அவருக்கு விசாரணை நீதிமன்றம் 10 ஆண்டு சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இந்த தண்டனையை எதிர்த்து ராதாகிருஷ்ணன் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்தார்.



இந்த வழக்கு நீதிபதி எம்.தண்டபாணி முன் அண்மையில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், சம்பவம் நடந்த போது ராதாகிருஷ்ணனுக்கு 18 வயது பூர்த்தி அடையவில்லை. அவரது வழக்கை விசாரித்து விசாரணை நீதிமன்றம் தண்டனை வழங்கியது தவறு. இந்த சம்பவத்தைக் கண்ணால் பார்த்த சாட்சிகளும் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டனர்.

எனவே மனுதாரரை விடுதலை செய்ய வேண்டும் என வாதிட்டார். இதற்கு அரசுத் தரப்பில் ஆஜரான குற்றவியல் வழக்குரைஞர் அய்யப்பராஜ் எதிர்ப்பு தெரிவித்தார்.

மேலும் மனுதாரர் ராதாகிருஷ்ணன் மீது 35 குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் இருந்தவர் என வாதிட்டார். அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டதால், குற்றவாளியை விடுதலை செய்ய முடியாது.

எனவே ராதாகிருஷ்ணனுக்கு விதிக்கப்பட்டத் தண்டனையை 5 ஆண்டுகளாக குறைத்து மேல் முறையீட்டு வழக்கைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

யெஸ் வங்கியின் புனரமைப்பு திட்டம் மதிப்பிடப்பட்டு வருகிறது

எஸ்பிஐ தலைவர்

மும்பை, மார்ச் 7: நிதி நெருக்கடி பிரச்னையில் சிக்கியுள்ள யெஸ் வங்கியை புனரமைப்பது தொடர்பான திட்டம் பெறப்பட்டுள்ளதாக பாரத ஸ்டேட் வங்கியின் (எஸ்பிஐ) தலைவர் ரஜ்னீஷ் குமார் சனிக்கிழமை தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

வாராக் கடன் மற்றும் மூலதன நெருக்கடியில் சிக்கியுள்ள யெஸ் வங்கியை புனரமைப்பு செய்வதற்கான திட்டம் பெறப்பட்டுள்ளது. அதுகுறித்து தற்போது மதிப்பிடப்பட்டு வருகிறது.

யெஸ் வங்கியில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காண்பது குறித்து எங்களது முதலீடு மற்றும் சட்ட குழு உரிய வகையில் அதிக அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது.

யெஸ் வங்கியை மீட்பதற்கான வரைவு திட்டத்தை பார்த்த பின் பல முதலீட்டாளர்கள் பாரத ஸ்டேட் வங்கியை அணுகியுள்ளனர். பங்குதாரர்களின் நலனில் எவ்வித சமரசமும் செய்து கொள்ளப்படாது என்றார் அவர்.



மும்பையில் உள்ள யெஸ் வங்கிக் கிளையில் தங்களது கணக்கிலிருந்து பணம் எடுக்க காத்திருந்த வாடிக்கையாளர்கள். நாள்: சனிக்கிழமை.

யெஸ் வங்கியை மறுசீரமைப்பு தற்கான புனரமைப்பு திட்டத்தை ரிசர்வ் வங்கி வெள்ளிக்கிழமை அறிவித்தது.

இதில், யெஸ் வங்கியின் 49 சதவீத பங்குகளை முதலீட்டாளர்கள் கையகப்படுத்தலாம் எனவும், அதேசமயம் மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக பங்கு மூலதனத்தை 26 சதவீதத்துக்கும் கீழாக குறைக்கக் கூடாது என்பது உள்ளிட்ட நிபந்தனைகளை ரிசர்வ் வங்கி விதித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

எஸ்பிஐ 245 கோடி பங்குகள் வெளியீடு: இதனிடையே, யெஸ் வங்கியில் 245 கோடி பங்குகளை வெளியிடவுள்ளதாக பாரத ஸ்டேட் வங்கி (எஸ்பிஐ) அறிவித்துள்ளது. இதுகுறித்து எஸ்பிஐ சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

யெஸ் வங்கியில் ரூ.10 விலை கொண்ட 245 கோடி பங்குகளை ரூ.2,450 கோடி மதிப்புக்கு பாரத ஸ்டேட் வங்கி வெளியிடவுள்ளது. இந்த பங்குகள் அனைத்தும் புனரமைக்கப்பட்ட யெஸ் வங்கியில் 49 சதவீத பங்குகளாக மாற்றியமைத்துக் கொள்ளப்படும்.

மேலும், மூன்றாண்டுகள் முடிவடைவதற்குள்ளாக யெஸ் வங்கியில் பங்கு மூலதனத்தை 26 சதவீதத்துக்கும் கீழாக எஸ்பிஐ குறைத்துக் கொள்ளாது.

யெஸ் வங்கியின் புதிய நிர்வாக குழுவில் தலைமைச் செயல் அதிகாரி மற்றும் நிர்வாக இயக்குநர், அலுவல் சாரா தலைவர் மற்றும் அலுவல் சாரா இயக்குநர்கள் ஆகியோர் இடம்பெற்றிருப்பர்.

புனரமைக்கப்பட்ட யெஸ் வங்கியில் அதன் பணியாளர்கள் அனைவரும் ஏற்கெனவே உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அடிப்படையில் குறைந்தபட்சம் ஓராண்டு காலத்துக்கு அதே ஊதியத்தில் பணியில் இருப்பர் என அந்த அறிக்கையில் எஸ்பிஐ தெரிவித்துள்ளது.

யெஸ் வங்கி நிறுவனரிடம் அமலாக்கத் துறை 2-ஆவது நாளாக விசாரணை

மும்பை, மார்ச் 7: சட்டவிரோத பணப் பரிவர்த்தனை குற்றச்சாட்டு தொடர்பாக யெஸ் வங்கியின் நிறுவனர் ராணா கபூரிடம் அமலாக்கத் துறை அதிகாரிகள் தொடர்ந்து 2-ஆவது நாளாக சனிக்கிழமை விசாரணை நடத்தினர்.



வாராக்கடன்கள் அதிகரித்ததால் பெரும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள யெஸ் வங்கி நிர்வாகத்தை இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) எடுத்துக் கொண்டது.

திருப்பிச் செலுத்தும் திறன் இல்லை என்பதால் பிற வங்கிகள் கடன் அளிக்க மறுத்த நிறுவனங்களுக்கு யெஸ் வங்கி கடன் அளித்ததுதான் இந்த வங்கியின் இப்போதைய நிலைக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், முறைகேடு குற்றச்சாட்டில் சிக்கியுள்ள டிஹெச்எஃப்எல் நிறுவனத்துக்கு யெஸ் வங்கி அளித்த கடன் வாராக் கடனாக மாறியுள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இதுதொடர்பாக சட்டவிரோத பணப் பரிவர்த்தனை சட்டத்தின் கீழ் ராணா கபூரிடம் அமலாக்கத் துறை விசாரணை நடத்தி வருகிறது.

இதுகுறித்து அமலாக்கத் துறை அதிகாரிகள் சனிக்கிழமை கூறுகையில், 'பல்லார்ட் எஸ்டேட் பகுதியில் உள்ள அமலாக்கத் துறை அலுவலகத்துக்கு ராணா கபூர் சனிக்கிழமை பிற்பகல் அழைத்து வரப்பட்டார்.

டிஹெச்எஃப்எல் நிறுவனத்துக்கு கடன் வழங்கியது தொடர்பாக அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

மேலும், பல பெருநிறுவனங்களுக்கு ஏராளமான கடன் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு பிரதி பலனாக அந்த நிறுவனங்கள் ராணா கபூரின் மனைவியின் வங்கிக் கணக்குகளில் பணம் செலுத்தியுள்ளன.

இதுதொடர்பாகவும் அவரிடம் விசாரணை நடைபெற்று வருகிறது' என்றனர்.

முன்னதாக, மும்பையில் உள்ள ராணா கபூரின் இல்லத்தில் அமலாக்கத் துறை அதிகாரிகள் வெள்ளிக்கிழமை சோதனை நடத்தினர்.

அவரிடம் வெள்ளிக்கிழமை இரவு விசாரணை நடைபெற்றது. அதைத் தொடர்ந்து இரண்டாவது நாளாக சனிக்கிழமையும் ராணா கபூரிடம் அமலாக்கத் துறை அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

மலிவுவிலை மருந்தகங்கள் மூலம் கோடிக்கணக்கானோர் பயன்

புது தில்லி, மார்ச் 7: மலிவுவிலை மருந்தகங்கள் மூலம் கோடிக்கணக்கான ஏழைகள் பலனடைந் துள்ளனர் என்று பிரதமர் நரேந்திர மோடி பெரு மிதம் தெரிவித்தார்.

தில்லியில் 'மக்கள் மருந்தக தினம்' சனிக்கிழமை கொண்டாடப்பட்டது. இதையொட்டி, குவா ஹாட்டி,கோயம்புத்தூர்,புணே,டேராடூன்,வாரா ணசி, புல்வாமா உள்ளிட்ட பகுதிகளில் அமைந் துள்ள மலிவுவிலை மக்கள் மருந்தகங்களைச் சேர்ந்த உரிமையாளர்கள், மருந்தகங்களின் மூலம் பயன் பெற்றவர்கள் உள்ளிட்டோர் காணொலி மூலம் கலந்துகொண்ட சிறப்பு நிகழ்ச்சி நடைபெற் றது.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுடன் பிரத மர் மோடி காணொலி வாயிலாக உரையாடினார். அப்போது அவர் கூறியதாவது:

'மக்கள் மருந்தக தினம்' என்பது மத்திய அர சின் திட்டத்தைக் கொண்டாடுவதற்கான நாள் இல்லை. மாறாக, அத்திட்டத்தின் மூலம் பலன டைந்த கோடிக்கணக்கான இந்தியர்களையும், லட்சக்கணக்கான குடும்பங்களையும் ஒன்றிணைக் கும் நாளாகும். இந்த தினத்தில் மலிவுவிலை மருந் தகங்கள் தொடர்பாக ஏழை மக்களிடம் விழிப்பு ணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

மலிவுவிலை மருந்தகங்கள் மூலம் மாதந்தோ றும் ஒரு கோடிக்கும் அதிகமான குடும்பங்கள் பல னடைந்து வருகின்றன. முக்கியமாக ஏழை மக்க ளும், நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்தவர்களுமே இத்திட்டத்தின் மூலம் அதிகமாகப் பலனடைந் துள்ளனர்.

நாடு முழுவதும் உள்ள 6,000-க்கும் அதிகமான மலிவுவிலை மருந்தகங்கள் மூலம் ஏழை மக்கள் மருந்துகளுக்குச் செலவிடும் ரூ.2,000 முதல் ரூ.2,500 கோடி சேமிக்கப்பட்டுள்ளது.

சிறப்பாகப் பணியாற்றுபவர்களுக்கு விருது கள்: மலிவுவிலை மருந்தகங்களில் உள்ள மருந்துக களைப் பரிந்துரைக்கும்போது அதன் அடிப்படை மூலக்கூறு மருந்துகளை மட்டும் பரிந்துரைக்கு மாறு மாநில அரசுகள் அறிவுறுத்த வேண்டும்.

'வதந்திகளை நம்ப வேண்டாம்': நாட்டில் கரோனா வைரஸ் (கொவைட்-19) பரவுவதைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக் கைகளை எடுத்து வருகின்றன. கரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் தனிமைப்ப டுத்தப்பட்டு, அவர்களுக்கு சிகிச்சைகள் அளிக்கப் பட்டு வருகின்றன. இத்தகைய சூழலில் கரோனா வைரஸ் குறித்து வேகமாக வதந்திகள் பரப்பப் பட்டு வருகின்றன.

'வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள இதை சாப்பிடுங்கள்; இதை சாப்பிடாதீர்கள்' என்று பலர் அறிவுரைகள் கூறலாம். அவற்றை மக்கள் யாரும் நம்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். மருத்துவரின் அறிவுரையைப் பெற்று மக்கள் நடந்துகொள்ள வேண்டும். நமக்கு நாமே மருத்துவர் ஆகக் கூடாது.

கைகுலுக்கலுக்குப் பதிலாக 'வணக்கம்': மக் கள் அனைவரும் மற்றவர்களுடன் கைகுலுக்குவ தைத் தவிர்க்க வேண்டும். அதற்குப் பதிலாக பரஸ் பரம் 'வணக்கம்' தெரிவித்துக் கொள்ள வேண்டும். உலகமே தற்போது 'வணக்கம்' தெரிவிக்கும் நடை முறைக்கு மாறி வருகிறது. ஏதோ ஒரு காரணத்தால் 'வணக்கம்' தெரிவிக்கும் பழக்கத்தை நாம் கைவிட் டிருந்தால், அதை மீட்டெடுக்கும் சரியான நேரம் இதுவே என்றார் பிரதமர் மோடி.

மக்கள் மருந்தக தினத்தையொட்டி உத்தரப் பிர தேசத்தின் வாராணசியில் நடைபெற்ற நிகழ்ச்சி யில் மத்திய ரசாயனம் மற்றும் உரத் துறை அமைச் சர் டி.வி.சதானந்த கௌடா பங்கேற்றார்; ஜம்மு-காஷ்மீரின் புல்வாமாவில் நடைபெற்ற நிகழ்ச் சியில் அத்துறையின் இணையமைச்சர் மன்சுக் மாண்டவியா பங்கேற்றார்.

பிரதமர் மோடி பெருமிதம்



மலிவு விலை மருந்தகங்களின் பயனாளிகளுடன் காணொலி வழியாக உரையாடிய பிரதமர் மோடி.

'பிரதமரின் வடிவில் கடவுளைக் காண்கிறேன்'

தில்லியில் நடைபெற்ற 'மக்கள் மருந்தக தின' நிகழ்ச்சியில் மலிவுவிலை மருந்தகங்களால் பல னடைந்தோருடன் பிரதமர் மோடி கலந்துரை யாடினார். அப்போது உத்தரகண்ட் தலைநகர் டேராடூனைச் சேர்ந்த தீபா ஷா என்பவர் பேசுகை யில், ''கடந்த 2011-ஆம் ஆண்டு முடக்குவாத நோயால் பாதிக்கப்பட்டேன். அப்போது, மருந் துகளின் விலை அதிகமாக இருந்ததால், நோயி லிருந்து என்னை குணப்படுத்த முடியாது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

ஆனால், மலிவுவிலை மருந்தகங்களில் இருந்து குறைந்த விலையில் வாங்கி பயன்படுத் திய மருந்துகளால் எனது நோய் குணமடைந்து விட்டது. இதனால் மாதந்தோறும் ரூ.3,500 மிச் சமாகிறது. நான் கடவுளைக் கண்டதில்லை. ஆனால், உங்களது வடிவில் கடவுளைக் காண்கி றேன்'' என்று கண்ணீர்மல்க தெரிவித்தார்.

இதைக் கேட்டவுடன் உணர்ச்சிவசப்பட்ட பிரத மர் மோடி, ''உங்களது மனதைரியத்தின் மூலமே நோயை வென்றுள்ளீர்கள். மனதைரியமே உங்க ளின் கடவுள். மனதைரியத்தை நீங்கள் தொடர்ந்து கைக்கொள்ள வேண்டும்'' என்றார்.

ளின் விலை சந்தைகளில் காணப்படுவதை விட 50 முதல் 90 சதவீதம் குறைவாக உள்ளது. புற்றுநோய் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் மருந்தின் விலை சந்தைகளில் ரூ.6,500-ஆக உள்ளது. ஆனால், மலி வுவிலை மருந்தகத்தில் அதன் விலை ரூ.850-ஆக உள்ளது.

சிறப்பாகப் பணியாற்றி வரும் மலிவுவிலை மருந்தகங்களின் உரிமையாளர்களுக்கு விருதுகள் வழங்க மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. மருத் துவர்கள் அனைவரும் நோயாளிகளுக்கு மருந்து

சர்வதேச மகளிர் தினம்: ராம்நாத் கோவிந்த் வாழ்த்து



புது தில்லி, மார்ச் 7: பெண் களின் பாதுகாப்பு, மரி யாதை ஆகியவற்றை உறுதி செய்ய மீண்டும் உறுதிமொழி ஏற்போம் என்று குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் சனிக் கிழமை தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படும் நிலையில், இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக் கையில் கூறப்பட்டதாவது: சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, அனைத்து மகளிருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள். ஒரு நல்ல சமூ கம், நாடு மற்றும் உலகை உருவாக்க சோர்வில் லாத முயற்சியுடன் முக்கிய பங்காற்றி வரும் மக ளிருக்கு மரியாதை செலுத்தவேண்டிய தருணம் இதுவாகும்.

இது, வாழ்வின் அனைத்து படிநிலைகளி லும் தடம் பதித்து அசாதாரண சாதனை புரிந்த தோடு, தங்களின் கடமை, அர்ப்பணிப்பு மற்றும் திறமைகளை வெளிப்படுத்திய மகளிரை அனை வரும் அறியும்படி செய்யவேண்டிய தருணமும் கூட.

மகளிரின் பாதுகாப்பு, மரியாதை ஆகிய வற்றை உறுதி செய்ய மீண்டும் உறுதிமொழி ஏற் போம். இதன் மூலம் தங்கள் ஆசைகள் மற்றும் நம்பிக்கைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான திசையில், தங்களின் விருப்பம் போல் பெண்கள் தடையின்றி முன்னேற முடியும் என்றார் ராம் நாத் கோவிந்த்.

வரி விளம்பரம்

BUSINESS TO BUSINESS

SUNLITE Solar System
238, Sahadevapuram, Bretts Road, Salem-7
0427 2411345, 93621 03236, 99429 03236
சோலார்பம்பு, போர்வெல், கிணறுகளுக்கு
5HP மோட்டார்
INNER TANK COPPER
10 YEARS WARRANTY FOR SALT WATER
Solar On & Off Grid

ANU SOLAR POWER (P) LTD
Solar Water Heater
ON EMI
5 Years Warranty
3 Days Offer
200LPD Rs.16800/-
98420 94568
86818 16767

ASTROLOGY
இலவச வரன்பதிவு
108 ஜோதிடர்களை பிரான்சைஸ்களாக கொண்ட நிறுவனம்...
ஸ்ரீவாரி மேட்ரிமோனி
online-ல் பதிவிட
www.srivarimatrimony.com
Cell:9443963761

CHANGE OF NAME
I, K.MATHAN (Army No:JC280138K, Rank:SUB(OPR). S/o. Kunjappan, residing at D.No: 2/332-A , Govindan kottai, Mittappalli Village,Poovathi Post, krishnagiri Taluk & District -635122. That My daughter's name wrongly mentioned M.MEENASHREE in my army service records. That I have changed my daughter's name M.MEENASRI vide Affidavit dated 02.03.2020 before Notary, Krishnagiri.

CHANGE OF NAME
I, K.MATHAN (Army No:JC280138K, Rank:SUB(OPR). S/o. Kunjappan, residing at D.No: 2/332-A, Govindan kottai, Mittappalli Village,Poovathi Post, krishnagiri Taluk & District -635122. That My daughter's name wrongly mentioned M.HEAMASRI in my army service records. That I have changed my daughter's name M.HEMASRI vide Affidavit dated 02.03.2020 before Notary, Krishnagiri.

TOURS & TRAVELS
HONEY TOURS
(OPP.) SONA COLLEGE, SALEM-5.
BR : RASIPURAM HO: CHENNAI
ஏப்ரல், மே
சீரடி ₹8,999/- 1 Day
அந்தமான் ₹19,999/- 3n/4d
டெல்லி, காஷ்மீர் ₹22,999/- 4n/5d
சிம்லா, குலுமணாலி ₹19,999/- 3n/4d
கொல்கத்தா, பாஜிலிங், கேங்டாக் ₹17,999/- 4n/5d
மலேசியா, சிங்கப்பூர் ₹59,999/- 6n/7d
தாய்லாந்து ₹25,999/- 3n/4d
ரஷ்யா ₹79,999/- 6n/7d
INCLUDE → FLIGHT, FOOD, STAR HOTEL, ALL
94442 55473
73394 58999
0427 4962277
www.arultravels.com

TOURS & TRAVELS
6 ஷீரடி-மார்ச் 29 பண்டரிபுரம், மந்திராலயம் ஏப். 5,12, 19, 26, மே 3, 10, 17, 24, 31
8 காசி,கயா-மார்ச் 30 அலகாபாத்.- ஏப்.6,13,20,27, மே 4,11,18,25
11 காசி, கயா-மார்ச் 20 டெல்லி, ஆக்ரா, அயோத்தி - ஏப். 17, மே 1, 11, 22
16 காசி,அயோத்தி-ஏப். 24 டெல்லி, ஆக்ரா, பூரி, அமிர்தசரஸ், ஹரித்துவார்
16 நேபாள், முக்திநாத், காசி ஏப். 19, மே 3,24, ஜூன் 14
14 நவஜோதிலிங்கம்-ஏப்.12
7 கேரளா படகு வீடு - மே 18
11 கேங்டாக், டார்ஜிலிங் ஏப். 8, 15, 22, 29, மே 6, 13, 20, 27
14 சிம்லா, குளுமணாலி
14 காஷ்மீர்-மே 5, 14, 23
16 பத்ரிநாத், கேதார்நாத் கங்கோத்ரி, யமுனோத்ரி மே 3, 12, 18, 27, ஜூன் 2, 11
9 இலங்கை 5 அந்தமான்
SRINIVASA TOUR, Salem
9384854567

*SAVE INDIA FROM CARBON EMISSIONS!!
*SAVE INDIA FROM ENERGY CRISIS!!
*MAKE INDIA GLOBAL SUPER POWER!!
*LET'S GO FOR SUSTAINABILITY!!
*LET'S GO FOR SOLAR!!
CONTACT: BLUE BRIGHT ENERGY, SALEM
M.K.MITHUN B.TECH.(EEE)
CELL:8637443710
BLUE BRIGHT ENERGY
*INDEPENDENT HOUSES *APARTMENTS *INDUSTRIES
SPEEDY INSTALLATION WITH ALL IN ALL SUPPORT
SPACE COURTESY
EXCEL TRAVELS
We bring the Globe within your reach
IATA Certified
SUDHARSON PLAZA, 5-9, JUNCTION MAIN ROAD, SALEM-636 005.

CCTV IP VIDEO SURVEILLANCE SOLUTION
• Enterprise Video Management System
• Advanced Intelligent Video Analytics
• Network Video Recorders with 4K Decoding
• IP Cameras with Exceptional Low light Performance
MATRIX SECURITY SOLUTIONS
Matrix Authorized Partner
SASTHA TECHNOLOGIES, SALEM
Ph.: 0427-4050486
M: 98946 47723

எக்ஸ்போர்ட் வியாபாரத்தில் முதலீடின்றி மாதம் லட்சம் ரூபாய் சம்பாதிக்க SMS / வாட்ஸ்அப் பெயர் விலாசம் 98421 16924.
CL00310882

OTHERS
மருத்துவம்
மாரடைப்பு பைபாஸ் சர்ஜரி, ஆஞ்சியோ கிராம், ஆஞ்சியோ பிளாஸ்டி இவற்றை தவிர்க்க அணுகவும், இருதய மற்றும் நீரழிவு நோய் நிபுணர்
இருதயம்ஸ்
மருத்துவமனை (பி) லிட்
இந்து கல்லூரி அருகில், நாகர்கோவில்-2.
போன். 04652-241561
செல் 9842141561

Travel Times
Trusted Holiday Partners Since 1981
சார்தாம் யாத்திரை
5/5, 19/5, 2/6-13 நாள்-ரூ.29,000
முக்திநாத்-பசுபதிநாத்
30/4, 10/5 - 10 நாட்கள் - ரூ.49,950
அமர்நாத் வைஷ்ணோதேவி
4.7.20 - 10 நாட்கள் - ரூ.27,450
முகாம்பிகை யாத்திரை
19/3, 16/4, 23/4, 7/5-4 நாட்கள்-ரூ.6,150
விமானம்,ரயில், அறைகள், உணவு, வாகனம் உட்பட
78 79 135 135

9 திருவேணி-காசி-கயா- புத்தகயா கல்கத்தா-பூரி-புனல்வேலி-கோனார்க் 27-04-20, மே 11 & 18 ரூ. 9000/-
12 பூரி-புனல்வேலி-கோனார்க்-கல்கத்தா-டார்ஜிலிங்-கேங்டாக் 16-03-20, 20-04-20, மே 04 & 16 ரூ. 13990/-
13 ஆக்ரா-டெல்லி-அமிர்தசரஸ்-வாகா-சிம்லா-குளு-மணாலி 22-04-20, மே 06 & 18 ரூ. 14990/-
17 பத்ரிநாத்-கேதார்நாத்-கங்கோத்ரி-யமுனோத்ரி 11-05-2020, 18-05-2020, 15-06-2020 ரூ. 16990/-
10 நபர்களுக்கு ஒரு நபர் இலவசம்
ஹெரிடேஜ் டிரேவல்ஸ் மதுரை & சென்னை
Cell : 89408 66999

மணமகன் தேவை
Seeking broad minded compassionate Graduate Female (MBC) for companion with 44 years Surgeon awaiting Divorce.Contact : 99620 47207
CL00310156

மணமகள் தேவை
21-55 வயதுள்ள 10 / +2 / Dip, Deg படித்த சுத்த / ராகு / கேது, செவ்வாய் தோசமுள்ள பெண்களுக்கு முதல்மணம் / மறுமணம் புரிய மணமகன்கள் தேவை. 8608166444
CL00310745

தொடர்புக்கு தினமணி சிறுவர்மணி முகவர்கள்

SELLING
WINDMILLS FOR SALE
8 x 550 KW Nedwind Make Running Windmills (under Captive Load) along with 65 Acres of Land situated at Kayathar, Tamilnadu.
Also available 550KW capacity load with 10 Acres of land at Kayathar, Tamilnadu.
Around 60 acres land with 4.74 MW load (Sale to Board)
Interested parties can mail their query at:-
Windmillgmg@gmail.com
or call Mob.no.8447749017

தினமணி
THE NEW INDIAN EXPRESS
நாளிதழ்களில் வர்த்தகம், வரி, கண்ணீர் அஞ்சலி மற்றும் தங்களது விளம்பரங்கள் இடம் பெற அணுகவும்

நாமக்கல்	-	7598282809
சேலம்	-	9840961904
ஓசூர்	-	9655434424
கிருஷ்ணகிரி	-	9840961918
தருமபுரி	-	7811091914



காவிரி டெல்டாவை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்ததற்காக, விவசாயிகள் சங்கங்கள் சார்பில் திருவாரூரில் சனிக்கிழமை நடைபெற்ற பாராட்டு விழாவில், தமிழக முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமிக்கு காவிரி காப்பாளர் என்ற பட்டத்தை அளித்து, ஏர்க்கலப்பையைப் பரிசாக வழங்கும் விவசாயிகள். உடன் அமைச்சர்கள், அதிமுக பிரமுகர்கள்.

CHANGE OF NAME
I, NATRAYAN PONNUSAMY, son of Ponnusamy, born on 27.05.1974 (Native place : Solasiramani Post, Tamilnadu), residing at No.2/57, Muthaliyar Street, Solasiramani Post, Paramathi-Velur Taluk, Namakkal -637210, Tamil Nadu, shall henceforth be known as NATRAYAN SOLASIRAMANI PONNUSAMY.
NATRAYAN PONNUSAMY
Tiruchengode, 06.03.2020

CHANGE OF NAME
I, K.MATHAN (Army No:JC280138K, Rank:SUB(OPR). S/o. Kunjappan, residing at D.No: 2/332-A , Govindan kottai, Mittappalli Village,Poovathi Post, krishnagiri Taluk & District -635122. That My Wife's name wrongly mentioned POONGODI in my army service records. That I have changed my Wife's name M.POONGODI vide Affidavit dated 02.03.2020 before Notary, Krishnagiri.

'விவசாயிகள் அச்சப்படத் தேவையில்லை'

'காவிரி காப்பாளர்' பட்டத்தை ஏற்று முதல்வர் நெகிழ்ச்சி

திருவாரூர், மார்ச் 7: பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் குறித்த சட்டம் விவசாயிகளுக்குப் பாதுகாப்பானது. இதுதொடர்பாக விவசாயிகள் அச்சப்படத் தேவையில்லை என்று தமிழக முதல் வர் எடப்பாடி கே. பழனிசாமி கேட்டுக்கொண் டார்.

திருவாரூரில், தமிழ்நாடு நீர்ப்பாசன விளை பொருள்கள், தமிழக காவிரி விவசாயிகள் சங் கம், விவசாயிகள் நல உரிமை பாதுகாப்பு சங்கம், காவிரி டெல்டா விவசாயிகள் குழுமம், காவிரி நீர்ப்பாசன விவசாயிகள் ஆகிய அமைப்புகள் இணைந்து, காவிரி டெல்டா பகுதியை பாதுகாக் கப்பட்ட வேளாண்மை மண்டலமாக அறிவித்த தமிழக முதல்வருக்கு நடத்திய பாராட்டு விழா வில், விவசாயிகள் வழங்கிய காவிரி காப்பாளர் என்ற பட்டத்தை ஏற்று, நெகிழ்ச்சியுடன் முதல் வர் பேசியது:

நானும் ஒரு விவசாயிதான். விவசாயி முதல்வராக இருப்ப தால், விவசாயிகளின் துன்பங் களை உணர்ந்து இந்தவேளாண் மண்டலம் குறித்த சட்ட முன்வ ரைவை சட்டப் பேரவையில் கொண்டுவந்தேன். நான் ஏற்கெ னவே ஜெயலலிதா அமைச்ச வையில் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்துள்ளேன். தற்போது, முதல்வராகவும் உள் ளேன். ஆனால், இதுவரையி லும் எந்த சட்ட முன்வடிவும் கொடுத்ததில்லை. தற்போது, இறைவனின் அருளால் விவ சாயிகளை பாதுகாக்கக்கூடிய சட்ட முன்வடிவை சட்டப்பே ரவையில் தாக்கல் செய்தேன். இறைவனால் கொடுக்கப்பட்ட கொடை இந்த சட்ட முன்வ டிவு.

தற்போது, விவசாயத்தை விட தொழிலில் நல்ல லாபம் கிடைப்பதால், விவசாயம் சற்று குறைந்திருக்கிறது. விவசாயிக ளின் மதிப்பும் குறைந்திருக்கி றது. இருந்தாலும் எதற்கும் பயப் படாதவர்கள் விவசாயிகள். தொழில் செய்வோர் மற்றவர் களை சார்ந்து வாழ வேண்டும். ஆனால், விவசாயிகள் சொந்தக் காலிலே நிற்கக்கூடியவர்கள். லாபம் குறைவாக இருக்கலாம். ஆனால், மனநிறைவுடன் வாழக் கூடியவர்கள் விவசாயிகள்.

விவசாயிகள் சேற்றில் கால் வைத்தால்தான் மக்கள் சோற் றில் கை வைக்க முடியும். விவ சாயிகள் உற்பத்தி செய்யும் உண வையே அனைவரும் உண்ண வேண்டும். யாருக்கும் பயப் பட வேண்டியதில்லை விவ சாயிகள். வருணபகவானுக்கு மட்டுமே பயப்பட வேண்டும். அந்த பெருமைக்குரிய விவசாயி கள் தற்போது முகமலர்ச்சியோடு காணப்படுகின் றனர்.

தமிழகத்தில் 65 சதவீதம் பேர் விவசாயத்தை நம்பி வாழ்கின்றனர். எனவே, விவசாயியாக இருந்தால்தான் அவர்களின் பிரச்னையை தீர்க்க முடியும். உழவுத்தொழில் என்பது மிகவும் கடின மான தொழில். இரவு, பகல் என்று பாராமல் பயி ரைக் காக்க வேண்டும். அவ்வாறு காத்தால்தான் விளைச்சல் கிடைக்கும்.

எனவே, பெரும்பான்மையாக இருக்கும் விவ சாயிகளின் நலனைக் காக்க வேண்டும், அவர்க ளின் வருமானத்தை இரட்டிப்பாக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்திக் கொண்டிருக் கிறது. நான் ஆட்சிக்கு வந்தபோது, எதிர்க்கட்சி கள் சில நாள்களுக்கு மட்டுமே முதல்வராக இருப் பார் என்று தெரிவித்தனர். ஆனால் தற்போது 3 ஆண்டுகள் முடிவடைந்து 4-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளோம்.

ஹைட்ரோகார்பன் திட்டம் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது வழக்குகள் பதியப்பட்டி ருப்பதாகவும், அதைத் திரும்பப் பெற வேண்டும் எனவும் பல்வேறு விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் கோரிக்கை வைத்தனர். அரசு அதைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

விவசாயிகளின் மத்தியில் இன்னமும் சந்தேகம் உள்ளது. அண்மையில் திமுகவைச் சேர்ந்த உறுப் பினர் கூட, இந்த சட்டத்தை மாநில அரசு எவ் வாறு இயற்றமுடியும் என்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். இந்த சட்டம் நிறைவேற் றப்பட்டு, அரசிதழில் வெளியிடப்பட்டு, விவசா யிகளிடம் தரப்பட்டு விட்டது. மாநில அரசுக்கு அனைத்து உரிமைகளும் உள்ளன என மத்திய அமைச்சர் தெளிவாகச் சொல்லிவிட்டார்.

விவசாயிகள் பல்லாண்டு காலம் வைத்தக் கோரிக்கையை நிறைவேற்ற, இடர்பாடுகளுக்கு மத்தியில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. எனவே, டெல்டா பகுதி விவசாயிகள் அச்சப்படத் தேவை யில்லை. எந்தக் காலத்துக்கும் இந்தச் சட்டம் விவ சாயிகளுக்கு பாதுகாப்பு அரணாக விளங்கும்.

குடிமராமத்துப் பணிகள்: குடிமராமத்துப் பணிகள் திட்டம் கொண்டுவரப்பட்டபோது சற்று அச்சம் ஏற்பட்டது. எனவே, சோதனை அடிப்படையில் முறையில் ரூ. 100 கோடியில் செயல்படுத்தப்பட்டது. சிறப்பானத் திட்டம் என இது வரவேற்பு பெற்றதால், கூடுதலாக ரூ.325 கோடி நிதி ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்பட் டது. இதைத்தொடர்ந்து, மேலும், ரூ. 499 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது முழுவதும் விவசா யிகளின் பங்களிப்போடு செயல்படுத்தப்படுகிற திட்டம்.

மேலும்,விவசாயத்துக்கு உயிரானநீரை முறைப் படுத்த, நீர்மேலாண்மைக் குழு ஏற்படுத்தப்பட் டது. ஏரி, குளங்களை தூர்வாரப்படுவதால், மழை நீர் தற்போது ஏரி, குளங்களில் சேமித்து வைக்கப்படுகிறது. மேலும், தூர்வாரப்படுவதன் மூலம் கிடைக்கும் வண்டல் மண்ணானது விவ சாயிகளின் விளைநிலங்களுக்கு இயற்கை உரங்க ளாக பயன்படுகிறது. விவசாயிகளின் கோரிக்கை யின்படி தடுப்பணைகளும் கட்டப்பட்டுள்ளன. இதற்கு ரூ. 650 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, பணி கள் நடைபெற்று வருகின்றன என்றார்.



நாட்டில் கரோனா பாதித்தவர்களின் எண்ணிக்கை 34-ஆக அதிகரிப்பு

புது தில்லி, மார்ச் 7: நாட்டில் கரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சனிக்கிழமை 34-ஆக அதிகரித்தது.

ஏற்கெனவே 31 பேர் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், புதிதாக 3 பேர் கரோனா வைரஸால் பாதிக்கப்பட்டது சனிக்கிழமை உறுதி செய்யப்பட்டது. அவர்களில் ஒருவர் தமிழகத்தைச் சேர்ந்தவர்.

இதுதொடர்பாக மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

கரோனா பாதிப்பு இருப்பதாக புதிதாக கண்டறியப்பட்டுள்ள மூவரில் இருவர் லடாக்கையும் ஒருவர் தமிழகத்தையும் சேர்ந்தவர்கள். லடாக்கைச் சேர்ந்தவர்கள் ஈரானுக்கும், தமிழகத்தைச் சேர்ந்தவர் ஓமனுக்கும் சென்று வந்த நிலையில் அவர்களுக்கு கரோனா பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களின் உடல் நிலை சீராக உள்ளது.

கரோனா பாதிக்கப்பட்ட அமெரிக்காவைச் சேர்ந்த இருவருடன் தொடர்பில் இருந்த 150 பேர் ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டத்தின் (ஐடிஎஸ்பி) கீழ் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஈரானில் உள்ள இந்தியர்களின் மாதிரி வருகை: ஈரானில் கரோனா வைரஸ் பாதிப்புக்குள்ளானதாக சந்தேகிக்கப்படும் இந்தியர்களின் 108 மாதிரிகள் பரிசோதனைக்காக சனிக்கிழமை இந்தியா கொண்டு வரப்பட்டன. தில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையின் ஆய்வகங்களில் அவை பரிசோதிக்கப்படுகின்றன.

டெஹ்ரானில் இருந்து தில்லிக்கு அந்த மாதிரிகளை கொண்டுவந்த 'மஹான் ஏர்' விமானம், திரும்பிச் செல்கையில் இந்தியாவிலிருந்த ஈரானியர்களை அழைத்துச் சென்றது. ஈரானில் உள்ள இந்தியர்களை மீட்டு வரும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சிலைச் சேர்ந்த 6 விஞ்ஞானிகள் ஈரானில் உள்ளனர். அங்கு இந்தியர்களுக்கு பரிசோதனை மேற்கொள்வதற்கான ஆய்வகத்தை அமைப்பதற்காக ரூ.10 கோடி மதிப்பிலான கருவிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

52 ஆய்வகங்கள்: கரோனா வைரஸ் பாதிப்பு குறித்து மாதிரிகளை ஆய்வு செய்வதற்காக நாடு முழுவதும் 52 ஆய்வகங்கள் செயல்பாட்டில் உள்ளன. மாதிரி சேகரிப்பு நடவடிக்கைகளுக்கு உதவ கூடுதலாக 57 ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன.

மார்ச் 6-ஆம் தேதி வரை அவற்றில் 4,058 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

7 லட்சம் பேருக்கு பரிசோதனை: இதுவரை இந்தியாவுக்கு 7,108 விமானங்களில் வந்த 7,26,122 பேருக்கு கரோனா பாதிப்பு குறித்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த இரு நாள்களில் மட்டும் 573 விமானங்களில் வந்த 73,766 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளனர்.

செல்லிடப்பேசியில் விழிப்புணர்வு வாசகங்கள்: மக்களிடையே கரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, செல்லிடப்பேசியில் அழைக்கும்போது, அழைக்கும் நபருக்கு அழைப்பு மணிக்கு (ரிங்டோன்) பதிலாக தொற்று தடுப்பு நடவடிக்கை வாசகங்களை கேட்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மத்திய சுகாதார அமைச்சகம் அந்த அறிக்கையில் கூறியுள்ளது.

12 நாடுகளின் பயணிகள்: முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சீனா, தென் கொரியா, ஜப்பான், இத்தாலி, ஈரான், சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா, ஹாங்காங், வியத்நாம், நேபாளம், இந்தோனேஷியா நாடுகளில் இருந்து வரும் பயணிகள் விமான நிலையத்திலேயே தனிமைப்படுத்தப்பட இருப்பதாக இந்திய விமான நிலையங்கள் ஆணையம் தெரிவித்துள்ளது.

ராஜஸ்தான்: ராஜஸ்தான் மாநிலத்தில் இத்தாலிய சுற்றுலா தம்பதி தவிர்த்து வேறு எவருக்கும் கரோனா பாதிப்பு இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது. சந்தேகத்தின் பேரில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட இதர 280 பேருக்கும் கரோனா பாதிப்பு இல்லை என்று மாநில சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. இத்தாலிய தம்பதி ஜெய்ப்பூர் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

மணிப்பூர்: சமீபத்தில் வங்கதேசம் சென்றுவந்த மணிப்பூரைச் சேர்ந்த நபருக்கு காய்ச்சல் மற்றும் இருமல் இருப்பது கண்டறியப்பட்டதை அடுத்து, முன்னெச்சரிக்கையாக அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவரை கண்காணித்து சிகிச்சை அளித்து வருவதாகவும் மாநில அரசு தெரிவித்துள்ளது.

ஜம்மு-காஷ்மீர்: கரோனா வைரஸ் பாதிப்பு இருக்கலாம் என்ற சந்தேகத்துடன் ஜம்மு-காஷ்மீரில் சிகிச்சை பெற்றுவரும் இருவருக்கு வைரஸின் தாக்கம் அதிக அளவில் இருப்பதாகவும் அவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படுவதாகவும் யூனியன் பிரதேச நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அங்கு ஆரம்பப் பள்ளிகள் வரும் 31-ஆம் தேதி வரை மூடப்படுவதாகவும் அலுவலகங்களில் பயோமெட்ரிக் வருகைப் பதிவு முறை தற்காலிகமாக ரத்து செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத்: குஜராத்தில் மொத்தம் 42 பேரின் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்ட நிலையில், அவர்களுக்கு கரோனா பாதிப்பு இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

மகாராஷ்டிரம்: கரோனா பாதிப்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மகாராஷ்டிரத்தில் 245 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், 229 பேருக்கு வைரஸ் பாதிப்பு இல்லை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. எஞ்சியோரின் பரிசோதனை முடிவுகளுக்கு காத்திருப்பதாக அதிகாரிகள் கூறினர்.

மத்தியப் பிரதேசம்: மத்தியப் பிரதேச மாநிலத்தில் சந்தேகத்தின் பேரில் 18 பேருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில், அவர்கள் கரோனாவால் பாதிக்கப்படவில்லை என்று உறுதியாகியுள்ளது.

ஹோலி கொண்டாட்டங்கள் ரத்து: கரோனா பாதிப்பு சூழல் காரணமாக ஹோலி பண்டிகை நிகழ்ச்சிகளை ரத்து செய்வதாக உத்தரப் பிரதேச ஆளுநர் ஆனந்திபென் படேல் அறிவித்துள்ளார். ஏற்கெனவே மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத்தும் இதே அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

கட்டணங்கள் ரத்து: கரோனா தாக்கம் சர்வதேச அளவில் பயணங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், தங்களது வாடிக்கையாளர்கள் விமான டிக்கெட்டுகளை ரத்து செய்தாலோ, அல்லது பயண தேதியை மாற்றிக்கொண்டாலோ கூடுதல் கட்டணங்கள் வசூலிக்கப்படாது என்று இண்டிகோ விமான நிறுவனம் அறிவித்துள்ளது.

பயோமெட்ரிக் இல்லை: தொடுதல் மூலம் கரோனா வைரஸ் பரவுவதால், கர்நாடகத்தில் பயோமெட்ரிக் முறையிலான வருகைப்பதிவு முறையை தற்காலிகமாக ரத்து செய்ய மாநில அரசு சனிக்கிழமை முடிவெடுத்தது.



ராஜஸ்தான் மாநிலம், பீகானிரில் உள்ள ஜுனாகர் கோட்டையில் சுற்றுலா பயணிகளை சனிக்கிழமை பரிசோதித்த சுகாதாரத் துறை ஊழியர்.

அமீரகத்தில் இந்தியருக்கு பாதிப்பு

ஐக்கிய அரபு அமீரகத்தில் கரோனா வைரஸ் பாதிப்பு இருப்பதாக புதிதாக கண்டறியப்பட்டுள்ள 15 பேரில் ஒருவர் இந்தியர் என அறியப்பட்டுள்ளார். அமீரகத்தில் அந்த வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 45-ஐ எட்டியுள்ளது.

யெஸ் வங்கி விவகாரம்: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் விமர்சனம்

புது தில்லி, மார்ச் 7: நிதி நெருக்கடியில் யெஸ் வங்கி சிக்கித்தவித்து வருவது, மத்திய அரசின் முதலாளித்துவ ஆதரவு கொள்கைக்கு உதாரணமாகும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விமர்சித்தது.

நிதி நெருக்கடியில் சிக்கியதால் யெஸ் வங்கியிலிருந்து வாடிக்கையாளர்கள் ரூ.50,000 மட்டுமே எடுக்க முடியும் என்று ரிசர்வ் வங்கி கட்டுப்பாடுகளை விதித்தது. இந்நிலையில் மத்திய அரசை விமர்சித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

யெஸ் வங்கி கடந்த மார்ச் மாதத்தில் ரூ.55,633 கோடி கடன் அளித்தது. கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் யெஸ் வழங்கிய கடன் தொகை ரூ.2,41,999 கோடியாகும். மத்திய அரசின் முதலாளித்துவ ஆதரவு கொள்கையால் நிதி நெருக்கடியில் இந்த வங்கி சிக்கித் தவித்திருக்கிறது. அனில் அம்பானி போன்ற தொழிலதிபர்களுக்கு மோடி அரசு அளித்து வரும் ஆதரவே இதற்கு காரணம். யெஸ் வங்கி நிதி நெருக்கடியை சந்தித்துள்ளதை பார்க்கும்போது தனியார் வங்கிகளின் செயல்பாடு மீது பல்வேறு சந்தேகங்கள் எழுகின்றன. சரியான நேரத்தில் ரிசர்வ் வங்கி செயல்படத் தவறி விட்டது. ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா 49 சதவீத யெஸ் வங்கி பங்குகளை வாங்கிக் கொள்ள பணிக்கப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனத்தின் லாபத்துக்காக பொதுத் துறை வங்கியை நஷ்டமடையச் செய்யக் கூடாது. யெஸ் வங்கியில் ரூ.50,000 மட்டுமே எடுக்க முடியும் என்ற கட்டுப்பாட்டை ரிசர்வ் வங்கி ரத்து செய்ய வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகளிர் தினம்: ஒடிஸா பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயணம்

புவனேசுவரம், மார்ச் 7: சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, ஒடிஸாவின் மாநகர பேருந்துகளில் பெண்கள் ஞாயிற்றுக்கிழமை இலவசமாக பயணிக்கலாம் என்று அந்த மாநில போக்குவரத்து கழகம் அறிவித்துள்ளது.

ஒடிஸா மாநிலம், புவனேசுவரத்தில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள 'மோ' பேருந்தை விளம்பரப்படுத்தும் வகையில், மகளிர் தினத்தன்று (ஞாயிற்றுக்கிழமை) அந்தப் பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணிக்கலாம் என்று மாநகர போக்குவரத்து கழகம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக அதிகாரிகள் கூறுகையில், 'புவனேசுவரம் முழுவதும் 200 மாநகர பேருந்துகள் இயங்குகின்றன. சர்வதேச மகளிர் தினத்தில் 'மோ' பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணிக்கலாம். அவர்கள் எவ்வித கட்டணமும் செலுத்த தேவையில்லை. இந்த பேருந்தை விளம்பரப்படுத்தும் பணியில் 30 சதவீத மகளிர் ஈடுபட்டுள்ளனர். பெண்களை கௌரவப்படுத்தும் பொருட்டு இந்த சலுகை வழங்கப்படுகிறது' என்றார்.

பாலின சமத்துவம் மற்றும் பெண்களின் உரிமைகள் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், ஆண்டுதோறும் மார்ச் 8-ஆம் தேதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சிஏஏவுக்கு எதிராக பெண்கள் பேரணி

மும்பை, மார்ச் 7: சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிராக, மும்பையில் நூற்றுக்கணக்கான பெண்கள் பங்கேற்ற பேரணி நடைபெற்றது.

சர்வதேச மகளிர் தினம் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, மும்பையில் உள்ள மாதுங்கா பகுதியில் பெண்கள் பங்கேற்ற பேரணி நடைபெற்றது.

குடியுரிமை திருத்தச் சட்டம்(சிஏஏ), தேசிய குடிமக்கள் பதிவேடு(என்ஆர்சி), தேசிய மக்கள்தொகை பதிவேடு(என்பிஆர்) ஆகியவற்றுக்கு எதிராக இந்தப் பேரணி நடைபெற்றது. இதில், பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டனர்.

மாதுங்காவில் தொடங்கிய பேரணி தாதரில் உள்ள சைத்யபூமியில் முடிவடைந்தது.

முன்னதாக, இந்தப் பேரணிக்கு மும்பை காவல் துறை அனுமதி மறுத்திருந்தது. மேலும், பேரணி நடத்துபவர்கள் மீதும், அதில் பங்கேற்பவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் காவல் துறை எச்சரிக்கை விடுத்திருந்தது.

ஆனால், அதையும் மீறி நூற்றுக்கணக்கான பெண்கள் திரண்டதால் பேரணிக்கு காவல் துறை அனுமதி அளித்தது. அசம்பாவித சம்பவங்களைத் தவிர்ப்பதற்காக பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது

ரூ.10 கோடி வங்கிக் கடன் மோசடி

மஸ்கட்டில் இருந்து இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்ட தொழிலதிபர்

புது தில்லி, மார்ச் 7: பஞ்சாப் நேஷனல் வங்கியில் ரூ.10 கோடி கடன் மோசடி செய்த புகாரில், மஸ்கட்டில் இருந்து சன்னி கல்ரா என்ற தொழிலதிபர், இன்டர்போல் (சர்வதேச காவல் துறை) உதவியுடன் இந்தியாவுக்கு நாடு கடத்தி வரப்பட்டார்.

இதுகுறித்து சிபிஐ செய்தித் தொடர்பாளர் ஒருவர் சனிக்கிழமை கூறியதாவது:

ஒயிட் டைகர்ஸ் ஸ்டீல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநரான சன்னி கல்ரா, பஞ்சாப் நேஷனல் வங்கியில் ரூ.10 கோடி கடன் வாங்கியதாகத் தெரிகிறது. பின்னர், அந்தக் கடனை திருப்பிச் செலுத்தாமல், வங்கி நிர்வாகம் கடனை வசூலிக்க இயலாத அளவுக்கு முக்கிய ஆவணங்களை அவர் மாற்றிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்த விவகாரத்தை சிபிஐ கடந்த 2015-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கையிலெடுத்து, சன்னி கல்ரா, அவரது மனைவி ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்தது.

இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டவுடன் சன்னி கல்ராவும், அவரது மனைவியும் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்று விட்டனர். அவர்களைக்கண்டுபிடிப்பதற்காக,இன்டர்போல்அமைப்பின்(சர்வதேசகாவல் துறை) உதவியை சிபிஐ நாடியது.

சிபிஐ கேட்டுக்கொண்டதற்கு இணங்க, சன்னி கல்ரா, அவரது மனைவிக்கு எதிராக இன்டர்போல் அமைப்பு கடந்த 2016-ஆம் ஆண்டு மே 31-ஆம் தேதி ரெட் கார்னர் நோட்டீஸ் பிறப்பித்தது.

இதனிடையே,சிபிஐ கடந்த 2016-ஆம் ஆண்டு டிசம்பரில் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில், சன்னி கல்ரா, அவரது மனைவி, பஞ்சாப் நேஷனல் வங்கியின் அப்போதைய மேலாளர், தற்போதைய மேலாளர், துணை மேலாளர் ஆகியோரின் பெயர்கள் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில்,சன்னி கல்ரா,ஓமன் தலைநகர் மஸ்கட்டில் தலைமறைவாக இருந்தது கண்டறியப்பட்டது. பின்னர் மஸ்கட்டில் உள்ள ஓமன் புலனாய்வு அமைப்பின் (என்சிபி) உதவியுடன் அவர் கைது செய்யப்பட்டு, இந்தியாவுக்கு நாடு கடத்தி அழைத்து வரப்பட்டார்.

மஸ்கட்டில் உள்ள ஓமன் புலனாய்வு அமைப்பு, அங்குள்ள இந்திய தூதரகம், சிபிஐ ஆகிய அமைப்புகளின் ஒருங்கிணைந்த முயற்சியால் இது சாத்தியமானது. பின்னர் சன்னி கல்ரா, தில்லியில் உள்ள நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார் என்றார் அவர்.

அரசுப் பணி தேர்வுகளுக்கான மாதிரி வினா-விடைகள்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) நடத்தும் அனைத்து தேர்வுகளுக்கும் பயனளிக்கும் வகையிலான மாதிரி வினா-விடைகள்

பொது அறிவு

6582. Consider the following statements

I. Escape speed of earth is 11.2 Km/hr

II. Jupiter has the highest escape speed in the solar system

Which of the statements is/are correct?

A) I only B) II only

C) Both I and II D) None of the above

பின்வரும் கூற்றுகளை கருத்தில் கொள்க

I. புவியின் விடுபடு வேகம் 11.2 கி.மீ / மணி ஆகும்.

II. சூரியக் குடும்பத்தில் அதிக விடுபடுவேகத்தினை உடைய கோள் வியாழன் ஆகும்.

சரியான கூற்றினை தேர்ந்தெடுக்க ?

A) I மட்டும் B) II மட்டும்

C) I மற்றும் II D) எதுவுமில்லை

6583. Where is the force due to gravity maximum?

A) 00 Latitude

B) 900 Latitude

C) 450 Latitude

D) Uniform across latitude

ஈர்ப்பினால் விசையானது எங்கு அதிகபட்சமான இருக்கும் ?

A) 00 அட்சம்

B) 900 அட்சம்

C) 450 அட்சம்

D) அட்சத்தினூடே ஒரே மாதிரியாக இருக்கும்

6584. Which of the following has highest viscosity?

A) Solids

B) Liquids

C) Gases

D) Fluids have equal viscosity

பின்வருவனவற்றுள் அதிக பாகுநிலை கொண்டது எது ?

A) திடப்பொருட்கள்

B) திரவங்கள்

C) வாயுக்கள்

D) பாய்மங்கள் சமமான பாகுநிலையினை உடையவை

6585. Which of the following should be decreased to increase the intensity of sound?

I. Density

II. Frequency

III. Amplitude

IV. Surface area of source

Codes:

A) II, III and IV only B) I and IV only

C) I, II and IV only D) None of the above

ஒலியின் செறிவினை அதிகரிக்க செய்ய பின்வருவனவற்றுள் எதனை குறைக்க வேண்டும் ?

I. அடர்த்தி

II. அதிர்வெண்

III. வீச்சு

IV. ஒலி மூலத்தின் மேற்பரப்பு

குறியீடுகள்:

A) II, III மற்றும் IV மட்டும்

B) I மற்றும் IV மட்டும்

C) I, II மற்றும் IV மட்டும்

D) எதுவுமில்லை

6586. Which of the following occurs due to with the actual movement of the particles of the fluid?

A) Conduction B) Convection

C) Radiation D) Both A and C

பின்வருவனவற்றுள் பாய்மத்தில் உள்ள துகள்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றப்படுவதால் ஏற்படுவது எது ?

A) வெப்பக்கடத்தல்

B) வெப்பச் சலனம்

C) கதிர்வீச்சு

D) A மற்றும் C ஆகிய இரண்டும்

6587. Which of the following is not a property of thermal radiation?

I. Reflection

II. Refraction

III. Interference

IV. Diffraction

V. Polarization

Codes:

A) III, IV and V only B) III and IV only

C) V only D) I and II only

பின்வருவனவற்றுள் வெப்பக்கதிர்வீச்சின் பண்பு அல்லாதது எது ?

I. எதிரொளிப்பு

II. விலகல்

III. குறுக்கீட்டு விளைவு

IV. விளிம்பு விளைவு

V. முனைவுறச் செய்தல்

குறியீடுகள்:

A) III, IV மற்றும் V மட்டும்

B) III மற்றும் IV மட்டும்

C) V மட்டும்

D) I மற்றும் II மட்டும்

6588. Which of the following has Avogadro number of molecules?

A) One liter of a gas at NTP

B) One mole of a gas

C) One gram of a gas

D) 1 kg of a gas

அவகட்ரோ எண் என்பது பின்வருவனவற்றுள் எதனுள் அமைந்த மூலக்கூறுகளின் எண்ணிக்கையாகும் ?

A) NTP உள்ள 1 லிட்டர் வாயுவில்

B) வாயுவின் ஒரு மோலில்

C) வாயுவின் ஒரு கிராமில்

D) வாயுவின் ஒரு கிலோகிராமில்

6589. A dressing room has two mirrors placed at 600 angle to each other. How many images will be formed by the mirrors?

A) 3 B) 5

C) 7 D) 9

ஒரு உடைமாற்றும் அறையில் இரு ஆடிகள் ஒன்றுக்கொன்று 600 கோணத்தில் வைக்கப்பட்டுள்ளன அந்த ஆடிகளால் உருவாக்கப்படும் பிம்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

A) 3 B) 5

C) 7 D) 9

6590. Shankar wears a spectacle lens of power – 2.0D. What is the type of lens and focal length of the lens?

A) Convex and 0.5 m

B) Concave and – 0.5 m

C) Convex and 2.0 m

D) Concave and – 2.0 m

சங்கர் – 2.0D எனும் திறனுடைய லென்சினை அணிந்து உள்ளார். அந்த லென்சின் வகை மற்றும் குவியத் தொலைவு யாது ?

A) குவிலென்சு மற்றும் 0.5 m

B) குழிலென்சு மற்றும் – 0.5 m

C) குவிலென்சு மற்றும் 2.0 m

D) குழிலென்சு மற்றும் – 2.0 m

6591. A beam of white light is dispersed using a prism. Which of the following travels with minimum velocity inside the prism?

A) Violet B) Blue

C) Yellow D) Red

முப்பட்டகத்தினை பயன்படுத்தி ஒரு வெள்ளொளிக் கற்றையானது நிறப்பிரிகை செய்யப்படுகிறது. பின்வருவனவற்றுள் முப்பட்டகத்தினுள் குறைந்தபட்ச திசைவேகத்துடன் செல்வது எது ?

A) ஊதா B) நீலம்

C) மஞ்சள் D) சிவப்பு

6592. Which of the following has negative magnetic susceptibility?

A) Diamagnetic substances

B) Paramagnetic substances

C) Ferromagnetic substances

D) Both B and C

பின்வருவனவற்றுள் எதிர்க்குறியான காந்த ஏற்புத் திறனை கொண்டது எது ?

A) டயா காந்தப்பொருள்கள்

B) பாராகாந்தப்பொருள்கள்

C) ஃபெர்ரோகாந்தப்பொருள்கள்

D) B மற்றும் C ஆகிய இரண்டும்

6593. Which of the following prefixes for powers of ten are correctly matched?

(Prefix)		(Multiple)
I) Zepto	-	10^{-24}
II) Yocto	-	10^{-21}
III) Yotta	-	10^{21}
IV) Peta	-	10^{15}

Codes:

A) III only B) IV only

C) I, II and IV only D) II, III and IV only

பின்வருவனவற்றுள் பத்தின் அடுக்கிற்கான முன்னீடுகள் சரியாக எதில் பொருந்தியுள்ளன ?

(முன்னீடு)		(பெருக்கல் மதிப்பு)
I) செப்டோ	–	10^{-24}
II) யோக்டோ	–	10^{-21}
III) யோட்டா	–	10^{21}
IV) பீட்டா	–	10^{15}

குறியீடுகள்:

A) III மட்டும் B) IV மட்டும்

C) I, II மற்றும் IV மட்டும் D) II, III மற்றும் IV மட்டும்

6594. Match the constants

List - I (Constants)	List - II (Value)
a) Boltzmann constant	1. $6.67\times10^{-11}Nm^2kg^{-2}$
b) Stefan - Boltmann constant	2. 2.898×10^{-3} m K
c) Wien's constant	3. $1.38\times10^{-23}JK^{-1}$
d) Gravitational constant	4. 5.67×10^{-8} $Wm^{-2}K^{-4}$

Codes:

	a	b	c	d
A)	4	2	3	1
B)	3	2	4	1
C)	3	4	2	1
D)	2	1	3	4

மாறிலிகளை பொருத்துக

பட்டியல் – I (மாறிலிகள்)	பட்டியல் – II (மதிப்பு)
a) போல்ட்ஸ்மேன் மாறிலி	1. $6.67\times10^{-11}Nm^2kg^{-2}$
b) ஸ்டீஃபன் – போல்ட்ஸ்மேன் மாறிலி	2. 2.898×10^{-3} m K
c) வெய்ன் மாறிலி	3. $1.38\times10^{-23}JK^{-1}$
d) புவிஈர்ப்பு மாறிலி	4. 5.67×10^{-8} $Wm^{-2}K^{-4}$

குறியீடுகள்:

	a	b	c	d
A)	4	2	3	1
B)	3	2	4	1
C)	3	4	2	1
D)	2	1	3	4

6595. Which of the following process happens in pressure cookers?

A) Isobaric process

B) Isochoric process

C) Isothermal process

D) Adiabatic process

பின்வருவனவற்றுள் அழுத்த சமைப்பான்களில் நிகழும் நிகழ்வு எது ?

A) அழுத்தம் மாறா நிகழ்வு

B) பருமன் மாறா நிகழ்வு

C) வெப்பநிலை மாறா நிகழ்வு

D) வெப்பப்பரிமாற்றமில்லா நிகழ்வு

6596. Find out the most electronegative element of the Periodic table.

A) Chlorine B) Beryllium

C) Iodine D) Fluorine

தனிம வரிசை அட்டவணையில் உள்ள அதிக எலக்ட்ரான் கவர்திறன் கொண்ட தனிமத்தைத் தேர்ந்தெடு.

A) குளோரின் B) பெரிலியம்

C) அயோடின் D) ஃபுளூரின்

விடைகள்

6582	6583	6584	6585	6586	6587	6588	6589	6590	6591	6592
D	B	B	D	B	C	B	B	B	A	A

6593	6594	6595	6596
B	C	A	D

தொடரும்...

தொகுப்பு : சங்கர் ஐ.ஏ.எஸ். அகாதெமி, சென்னை.

முதல் சாம்பியன் பட்டத்தை வெல்லுமா இந்தியா?

மெல்போர்ன், மார்ச் 7: ஐசிசி மகளிர் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நடப்பு சாம்பியன் ஆஸி.யை வீழ்த்தி முதல் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றுமா இந்தியா என தீவிர எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் சார்பில் கடந்த பிப். 21-ஆம் தேதி ஆஸ்திரேலியாவில் மகளிர் டி20 உலகக் கோப்பை போட்டிகள் தொடங்கின. இதில் 10 அணிகள் கலந்து கொண்டநிலையில், குரூப் ஏ பிரிவில் தான் ஆடிய 4 ஆட்டங்களிலும் வெற்றி கண்டு முதலிடத்துடன் அரையிறுதிக்குதகுதி பெற்றது இந்தியா. அதே பிரிவில் இரண்டாம் இடத்துடன் ஆஸி.யும், குரூப் பி பிரிவில் முதலிடத்துடன் தென்னாப்பிரிக்காவும், இரண்டாம் இடத்துடன் இங்கிலாந்தும் அரையிறுதிக்கு முன்னேறின.

அரையிறுதி ஆட்டங்கள்: சிட்னியில் கடந்த 5-ஆம் தேதி அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்ற நிலையில், இந்தியா-இங்கிலாந்து இடையிலான ஆட்டம் மழையால் ரத்து செய்யப்பட்டது. அதிக புள்ளிகள் அடிப்படையில் இந்தியா முதன்முறையாக இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் தென்னாப்பிரிக்காவை 5 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி இறுதிச் சுற்றுக்கு முன்னேறியது ஆஸி.

5-ஆவது பட்டம் வெல்ல இலக்கு: நடப்பு சாம்பியன் ஆஸ்திரேலியா அணி ஏற்கெனவே 4 முறை பட்டத்தை வென்றுள்ள நிலையில், சொந்த மண்ணில் 5-ஆவது முறையாக பட்டம் வெல்லும் நோக்கில் உள்ளது. ஆஸ்திரேலிய அணியில் கேப்டன் மெக் லேன்னிங், அலிஸா ஹிலி, பெத் மூனி, ஆஷ்லி கார்டனர் ஆகியோர் பேட்டிங்கில் நம்பிக்கை தருகின்றனர். பந்துவீச்சில் மேகன் ஷூட், ஜெஸ் ஜோனஸ்ஸன், சோபி மோலினக்ஸ், ஆகியோர் பலம் சேர்க்கின்றனர்.

காயங்களால் பாதிப்பு: அதே வேளையில் நட்சத்திர ஆல்ரவுண்டர் எல்சி பெர்ரி காயத்தால் 6 மாதங்கள் விளையாட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார். வேகப்பந்து வீச்சாளர் டய்லாவும் காயத்தால் ஆடமுடியாமல் உள்ளது ஆஸி. அணிக்கு சிக்கலை ஏற்படுத்தி உள்ளது.

எனினும் சொந்த மண்ணில் ஆடுவது, 4 முறை பட்டம் வென்றுள்ள அனுபவத்துடன் ஆடுவது ஆஸி.க்கு பலமாகும்.

நம்பிக்கை தரும் ஷபாலி, சுழற்பந்து வீச்சு: அதே நேரம் இந்திய அணியில் வழக்கம் போல் இளம் வீராங்கனை ஷபாலி, சுழற் பந்து வீச்சாளர்கள் பூனம் யாதவ், ராதா யாதவ், ராஜேஸ்வரி, தீப்தி சர்மா ஆகியோர் நம்பிக்கை தருகின்றனர்.

வேகப்பந்து வீச்சில் ஷிகா பாண்டேயும் முக்கிய தருணங்களில் எதிரணியின் விக்கெட்டுகளை வீழ்த்தி பலம் சேர்க்கிறார்.

மூத்த வீராங்கனைகள் ஆட்டம்?: மூத்த வீராங்கனைகளான ஸ்மிருதி மந்தானா, கேப்டன்ஹர்மன்ப்ரீத் கௌர், வேதா கிருஷ்ணமூர்த்தி, ஜெமிமா ரோட்ரிக்ஸ் ஆகியோர் இந்த உலகக் கோப்பை போட்டியில் இதுவரை சரிவர ஆடவில்லை. இறுதிப் போட்டியில் ஷபாலிக்கு துணையாக இவர்கள் ஆடினால் மட்டுமே பெரிய ஸ்கோரை எட்ட முடியும். இப்போட்டியில் இந்தியாவின் அதிகபட்ச ஸ்கோர் 142 மட்டுமே ஆகும். 150-ஐ ஒரு முறை கூட தாண்டவில்லை.

நடப்பு சாம்பியன் ஆஸி.யுடன் இன்று மோதுகிறது



கோப்பையுடன் கேப்டன்கள் ஹர்மன்ப்ரீத்-மெக் லேன்னிங்

இன்றைய ஆட்டம்

இந்தியா-ஆஸ்திரேலியா
இடம்: மெல்போர்ன்
நேரம்: பிற்பகல் 12.30

பிரதமர் மோடி, கங்குலி வாழ்த்து





இந்திய மகளிர் கிரிக்கெட் அணிக்கு பிரதமர் நரேந்திர மோடி, பிசிசிஐ தலைவர் சௌரவ் கங்குலி உள்பட பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ஆஸி. பிரதமர் ஸ்காட் மோரிஸன் சுட்டுரையில் பதிவிட்டிருந்ததாவது: மோடி அவர்களே, மகளிர் டி20 உலகக் கோப்பை இறுதிச் சுற்றில் இந்தியா-ஆஸி. மோதுகின்றன. சிறந்த அணிகள், பெரிய மக்கள் திரள் முன்பு ஆட உள்ளன. சிறப்பான ஆட்டமாக இருக்கும் என்றார்.

இதற்கு பதிலிலளித்து பிரதமர் மோடி தனது சுட்டுரை (டுவிட்டரில் கூறியுள்ளதாவது: இரு அணிகளுக்குமே எனது நல்வாழ்த்துகள். மகளிர் தினத்தில் இந்த ஆட்டம் நடப்பது சிறப்பானது. சிறந்த அணி வெல்லட்டும் என்றார்.

கங்குலி: இறுதிச் சுற்றில் நுழைந்ததின் மூலம் பெருமையைத் தேடித் தந்துள்ளனர். பட்டத்தைக் கைப்பற்ற இந்திய அணிக்கு வாழ்த்துகள் என்றார்.



அமெரிக்க பிரபல பாடகி கேட் பெர்ரி போட்டிக்கு முன்பு, பின்பும் தனது கலைநிகழ்ச்சியை நடத்த உள்ளார்.

ஆஸி. அணியின் வெற்றிப் பயணத்துக்கு முட்டுக்கட்டை போட்டு தனது முதல் பட்டத்தை இந்தியா வெல்லுமா என எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தில் இறுதி ஆட்டம்

பாலின பாகுபாட்டை களையவும், சமத்துவத்தை நிலைநாட்டுவதையும் அடிப்படையாகக் கொண்டு ஐசிசி மகளிர் 20 உலகக் கோப்பை போட்டியின் இறுதி ஆட்டம் சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8-ஆம் தேதி மெல்போர்னில் நடைபெறுகிறது.

சமூகத்தில் பாலின பாகுபாடு நிலவி வரும் நிலையில் விளையாட்டிலும், ஆடவரைக் உயர்வாக நடத்துவதும், பெண்களை குறைவாகவும் நடத்தும் போக்கு உள்ளது. இதனால் சமத்துவத்தை பேண வேண்டியுள்ளது. இரு தரப்புக்கும் இடையே உள்ள வேறுபாடு அதிகமா உள்ளது. இவற்றை எல்லாம் மாற்றுவது அவசியம் என்பதை முன்னிறுத்தி சர்வதேச மகளிர் தினத்தில் இறுதி ஆட்டம் நடத்தப்படுகிறது. ஆண்-பெண் சமத்துவம், பாலின பாகுபாட்டை களைய உலகக் கோப்பை இறுதிச் சுற்று ஒரு காரணியாக அமையும்.

அதிக பார்வையாளர்கள் சாதனை: 100024 பார்வையாளர்கள் எண்ணிக்கை வசதிக் கொண்ட மெல்போர்ன் மைதானத்தை முழுமையாக நிரப்பி, ஒரே ஒரு பெண்கள் போட்டிக்காக அதிகளவில் பார்வையாளர் கூடிய சாதனையை நிகழ்த்த உள்ளனர். கிரிக்கெட்டில் நிலவும் பாகுபாட்டை போக்குவது இதன் மூலம் சாத்தியாகும் என ஆஸி. கேப்டன் மெக் லேன்னிங் கூறியுள்ளார்.

இறுதிப் போட்டிக்கு நியூஸி-பாகிஸ்தான் நடுவர்கள்: இந்திய-ஆஸி. அணிகளுக்கு இடையிலான மகளிர் டி20 இறுதி ஆட்டத்தின் நடுவர்களாக நியூஸிலாந்தின் கிம் காட்டன், பாகிஸ்தானின் ஆஸன் ராஸா ஆகியோர் செயல்பட உள்ளனர். மெல்போர்ன் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை இறுதி ஆட்டம் நடைபெறவுள்ளது. நியூஸி.யின் கிம் காட்டன் ஏற்கெனவே 4 ஆட்டங்களில் நடுவராக செயல்பட்டார். பாகிஸ்தான் நடுவரான ஆஸன் ராஸா கடந்த 2017 ஒரு நாள் கிரிக்கெட் போட்டி அரையிறுதியில் நடுவராக செயல்பட்டவர்.

சுழற்பந்து வீச்சை சமாளிக்க சிறப்புப் பயிற்சி

இந்திய அணியின் மெதுவான மற்றும் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ள சிறப்புப் பயிற்சி மேற்கொண்டோம் என ஆஸி. கேப்டன் மெக் லேன்னிங் கூறியுள்ளார். அவர் சனிக்கிழமை கூறியதாவது:

முதல் குரூப் பிரிவு ஆட்டத்தில் பூனம் யாதவின் சுழற் பந்து வீச்சில் நாங்கள் நிலைகுலைந்து போனோம். பூனம் மட்டுமே அபாயம் இல்லை. மற்ற வீராங்கனைகளும் அதிர்ச்சி தருபவர்கள் தான். ராஜேஸ்வரி கெய்க்வாட்டும் சவாலைத் தருவார். இதனால் சுழற்பந்து வீச்சாளர்களைக் கொண்டு நாங்கள் சிறப்புப் பயிற்சி பெற்றோம்.

பேட்டிங்கிலும் இந்தியா பலமாக உள்ளது. உலகத் தரம் வாய்ந்த ஸ்மிருதி, தீப்தி சர்மா ஆகியோர் எங்களுக்கு எதிராக சிறப்பாக ஆடியுள்ளனர். ஷபாலியும் அதிரடியாக ஆடுகிறார். மிகவும் கடினமான, சவாலை தரும் இறுதி ஆட்டத்துக்கு உத்திகளை வகுத்து வெற்றிக்கு தயாராக உள்ளோம் என்றார் லேன்னிங்.

8 நாள்கள் ஆடாதது ஏமாற்றத்தை தருகிறது: ஹர்மன்ப்ரீத்

இலங்கையுடன் இறுதியாக கடந்த 26-ஆம் தேதி லீக் சுற்று ஆட்டத்தில் ஆடினோம். அதன் பின்னர் 5-ஆம் தேதி அரையிறுதி ஆட்டத்தில் ஆட வில்லை. இதனால் தொடர்ந்து 8 நாள்கள் ஆடமுடியாதது ஏமாற்றத்தை தருகிறது.

இங்கிலாந்துடன் ஆடி இருந்தால், தயாராக இருந்திருப்போம். எனினும் உள்ளரங்க பயிற்சியில் ஈடுபட்டது, முழு நம்பிக்கையைத் தரவில்லை. தொடர்ந்து நீண்ட நாள் ஆடினால் தான் ஓய்வு தேவை. மெல்போர்ன் மைதானத்தில் ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் மீது ஆட தயாராக உள்ளோம். முதல் பந்தில் இருந்தே ஆடத் தொடங்க வேண்டும். இரு அணிகளுக்குமே அழுத்தம் உள்ளது. பட்டத்தை வெல்லும் திறன் கொண்டவை என்றார்.

ஈர்ப்பைத் தரும் மெல்போர்ன்:

கிரிக்கெட்ரசிகர்களை எப்போதும் கவரும் மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் (எம்சிஜி) இறுதிச் சுற்று நடைபெறுகிறது. 1 லட்சத்துக்கு மேற்பட்ட பார்வையாளர்கள் இம்மைதானத்தில் அமர்ந்து போட்டியை கண்டு களிக்கலாம்.

75000 டிக்கெட்டுகள் விற்பனை: மகளிர் டி20 இறுதி ஆட்டத்துக்காக இதுவரை 75,000 டிக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மொத்தம் 90,000-க்கு மேற்பட்டோர் ஆட்டத்தைக் காண வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒலிம்பிக் குத்துச்சண்டை தகுதிச் சுற்று: காலிறுதியில் அமித் பங்கால்



அம்மான், மார்ச் 7: ஒலிம்பிக் குத்துச்சண்டை தகுதிச் சுற்று போட்டி காலிறுதிக்கு இந்திய நட்சத்திர வீரர் அமித் பங்கால் தகுதி பெற்றார். மற்றொரு வீரர் கௌரவ் சோலங்கி தோல்வியுற்று வெளியேறினார்.

ஜோர்டான் தலைநகர் அம்மானில் நடைபெற்று வரும் இப்போட்டியில் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்கள் சனிக்கிழமை நடைபெற்றன. 23 வயதான நம்பிக்கை நட்சத்திரம் அமித் பங்கால் 52 கிலோ எடைப்பிரிவில் 3-2 என்ற புள்ளிக்கணக்கில் மங்கோலியாவின் கர்க்குவை வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

கடந்த ஆண்டு உலகப் போட்டியில் வெள்ளி வென்ற அமித் பங்கால், ஆசியப் போட்டி, ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியிலும் தங்கம் வென்றிருந்தார். 57 கிலோ எடைப்பிரிவில் கௌரவ் சோலங்கி 1-4 என்ற புள்ளிக் கணக்கில் நடப்பு உலக சாம்பியன் உஸ்பெகிஸ்தானின் மிராஸிஸ்பெக்கிடம் தோல்வியுற்று வெளியேறினார்.

ஞாயிற்றுக்கிழமை லவ்லினா 69 கிலோ), பூஜா ராணி 75 கிலோ, விகாஸ் கிருஷண் 69 கிலோ, ஆஷிஷ் குமார் 75 கிலோ, சச்சின் குமார் 81 கிலோ, சதிஷ்குமார் 91 கிலோ பிளஸ்) பிரிவுகளில் ஒலிம்பிக் தகுதி பெறுவதை நிர்ணயிக்கும் ஆட்டங்கள் நடக்கின்றன.

முதல் 20 இடங்களில் சரத்-சத்யன்...



சர்வதேச டேபிள் டென்னிஸ் கூட்டமைப்பின் தரவரிசையில் முதல் 20 இடங்களில் நுழைந்த இந்திய வீரர்கள் சரத்கமல்-சத்யன் ஞானசேகரன்.

லியான் டென்னிஸ்: அரையிறுதியில் சோபியா கெனின்

லியான், மார்ச் 7: லியான் டென்னிஸ் போட்டியில் அரையிறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றார் ஆஸி. ஓபன் சாம்பியன் சோபியா கெனின்.

லியான் நகரில் நடைபெற்று வரும் டபிள்யுடிஏ மகளிர் போட்டியில் காலிறுதி ஆட்டங்கள் வியாழக்கிழமை இரவு நடைபெற்றன. இதில் பிரான்ஸின் ஓஸேன் டோடினை 6-1, 6-7, 6-2 என்ற செட் கணக்கில் வீழ்த்திய கெனின் அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

ஆஸி. ஓபன் போட்டிக்கு பின் தொடர்ந்து 3 போட்டிகளில் தோல்வி கண்டிருந்த கெனின் தற்போது தான் அரையிறுதி வரை முன்னேறியுள்ளார்.

பெல்ஜிய வீராங்கனை அலிஸன் வேன் 6-2, 6-2 என பிரான்ஸின் கரோலின் கார்ஸியாவை வென்றார்.



பெடரேஷன் கோப்பை: பெடரேஷன் கோப்பை மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தோனேஷியாவுக்கு எதிரான முதல் ஒற்றையர் ஆட்டத்தில் தரவரிசையில் இல்லாத பிரிஸ்காவிடம் 3-6, 6-0, 3-6 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்தார் இந்தியாவின் ருட்டுஜா.

ஆசிய-ஓசேனியா குழுப் பிரிவுக்கு தகுதி பெற வேண்டும் என்றால் இந்தோனேஷியாவை கட்டாயம் வெல்ல வேண்டும் என்ற நிலையில் உள்ளது இந்தியா.

ஏற்கெனவே சீன தைபே அணிக்கு எதிராக மகளிர் இரட்டையர் பிரிவில் சானியா மிர்ஸா-அங்கிதா ரெய்னா இணை 6-4, 4-6, 6-4 என்ற செட் கணக்கில் வென்றிருந்தது.

ஓய்வு பெற்றார் ரன் இயந்திரம் வாசிம் ஜாஃபர்



மும்பை, மார்ச் 7: 25 ஆண்டுகள் கிரிக்கெட் வாழ்க்கையில் இருந்து ஓய்வு பெற்றார் ரன் இயந்திரம் என பெயர் பெற்ற இந்திய மற்றும் மும்பை வீரர் வாசிம் ஜாஃபர்.

இந்திய அணியின் முன்னாள் தொடக்க வீரரான ஜாஃபர் கடந்த 1997-97-இல் முதல்தர கிரிக்கெட் ஆட்டத்தில் அறிமுகமானார்.

சர்வதேச அளவில் 31 டெஸ்ட் ஆட்டங்களில் ஆடியுள்ள அவர் 1944 ரன்களை குவித்தார். இதில் 5 சதம், 11 அரைசதம், அதிகபட்சமாக 212 ரன்களும் அடங்கும்.

42 வயதான வாசிம் ஜாஃபர் ரஞ்சி கோப்பை மற்றும் இரானி கோப்பை போட்டிகளில் ஒட்டு மொத்தமாக அதிக ரன்களை குவித்த வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். ரஞ்சி கோப்பையில் மட்டுமே 12000 ரன்களை விளாசியுள்ளார்.

260 ஆட்டங்கள் மூலம் 19,410 ரன்களை விளாசியுள்ளார்.

150 ரஞ்சி ஆட்டங்களில் ஆடிய முதல் வீரரானஅவர், மும்பை 2 முறையும், விதர்பா 2 முறையும் சாம்பியன் பட்டம் வெல்ல உதவினார்.

இதுதொடர்பாக ஜாஃபர் கூறியதாவது: 25 ஆண்டுகள் கிரிக்கெட் வாழ்க்கைக்கு பின் ஓய்வு பெறுகிறேன். இதற்காக பிசிசிஐ, எம்சிஏ, விசிஏ போன்ற வற்றுக்கு நன்றி. ராகுல் திராவிட், கங்குலி, விவிஎஸ்.லஷ்மண், சேவாக், தோனி ஆகியோருடன் ஆடியது மறக்க முடியாதது. சச்சின் எனது முன்னோடி. மும்பை அணியில் நீண்ட காலம் ஆடியது சிறப்பானது.

துளிகள்...

- கிரிக்கெட் போட்டிகளில் ஆடும் 11 பேர் கொண்ட அணியை தீர்மானிப்பதில் தேர்வுக்குழுவினருக்கும் பங்கு இருக்க வேண்டியது அவசியம். முன்னாள் தேர்வுக் குழுத் தலைவர் எம்எஸ்கே.பிரசாத் கூறியுள்ளார்.
- டி20 உலகக் கோப்பை போட்டியில் இந்தியா சாம்பியன் பட்டம் வென்றால் மகளிர் கிரிக்கெட்டுக்கு புதிய உத்வேகமாக அமையும் என ஆஸி. முன்னாள் வீரர் பிரெட் லீ கூறியுள்ளார்.
- மேற்கு வங்கத்துக்கு எதிராக வரும் திங்கள்கிழமை ராஜ்கோட்டில் தொடங்கவுள்ள ரஞ்சி கோப்பை இறுதி ஆட்டத்தில் சௌராஷ்டிர அணியில் இந்திய டெஸ்ட் வீரர் சேதேஸ்வர் புஜாரா இடம் பெற்று ஆடுகிறார்.
- லாஸேனில் நடைபெற்று வரும் ஃபிடே மகளிர் கிராண்ட்ப்ரீ செஸ் போட்டியில் இந்தியாவின் டி.ஹரிகா 5-ஆவது சுற்று ஆட்டத்தில் ரஷியாவின் அலெக்சாண்டரா கோர்யசிக்னாவுடன் டிரா கண்டார்.
- ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டி நடுநிலையான இடத்தில் நடைபெறும் என பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத் தலைவர் ஈஷான் மானி தெரிவித்துள்ளார்.

தேசிய சீனியர் கபடி: சாம்பியன் ரயில்வே



ஜெய்ப்பூரில் நடைபெற்ற 67-ஆவது தேசிய சீனியர் கபடி சாம்பியன்ஷிப் போட்டியில் பட்டம் வென்ற இந்திய ரயில்வே மகளிர் அணி. இறுதிச் சுற்றில் ஹிமாசலப் பிரதேச அணியை வீழ்த்தியது ரயில்வே. அதே போல் ஆடவர் பிரிவிலும் சாம்பியன் பட்டம் வென்ற ரயில்வே அணி இறுதிச் சுற்றில் சர்வீஸஸ் அணியை கடும் போராட்டத்துக்கு பின் வென்றது.

1 லட்சத்தைத் தாண்டியது கரோனா வைரஸ் நோயாளிகளின் எண்ணிக்கை

பெய்ஜிங், மார்ச் 7: சீனாவில் உருவாகி, இந்தியா உள்பட உலகம் முழுவதும் 94 நாடுகளில் பரவியுள்ள கரோனா வைரஸால் (கொவைட்-19) பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1 லட்சத்தைத் தாண்டியுள்ளது.

மேலும், அந்த வைரஸ் பாதிப்பால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3,493-ஆக அதிகரித்துள்ளது.

இதுகுறித்து தகவல்கள் தெரிவிப்பதாவது:


சீனாவில் ஹுபே மாகாணம், வூஹான் நகரில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பரவத் தொடங்கிய புதிய வகை கரோனா வைரஸ், இந்தியா, அமெரிக்கா, ரஷியா, நேபாளம், இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட 94 நாடுகளுக்குப் பரவியுள்ளது.

இந்த நிலையில், கரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வெள்ளிக்கிழமை 1 லட்சத்தைத் தாண்டியது. சனிக்கிழமை நிலவரப்படி, அந்த வைரஸ் 1.02 லட்சம் பேரைத் தொற்றியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் சுமார் 80 சதவீதம் பேர், கரோனா வைரஸ் உருவான சீனாவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த நாட்டில் மட்டும் 80,651 பேருக்கு கரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. மேலும், அந்தவைரஸுக்குசீனாவில் பலியானவர்களின் எண்ணிக்கை 3,070-ஆக அதிகரித்துள்ளது.

சீனாவுக்கு அடுத்தபடியாக, தென் கொரியாவில்தான் கரோனா வைரஸ் பாதிப்பு அதிகம் பேருக்கு ஏற்பட்டுள்ளது. அந்த நாட்டில் 7,041 பேருக்கு கரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. சனிக்கிழமை நிலவரப்படி அந்த வைரஸ் காரணமாக தென் கொரியாவில் 48 பேர் பலியாகினர்.

இது தவிர, ஈரானில் 5,823 பேருக்கும் இத்தாலியில் 4,636 பேருக்கும் கரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன், இந்தியா உள்ளிட்ட பிறநாடுகளில் 4,104 பேருக்கு கரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.



கரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக, சவூதி அரேபியாவின் மெக்கா நகரிலுள்ள காபா மசூதி அருகே தொழுகை நடத்த மிகச்சொற்பமான எண்ணிக்கையில் அனுமதிக்கப்பட்ட புனிதப் பயணிகள்.

ஈரான்

பலி 145-ஆக உயர்வு

கரோனா வைரஸ் பாதிப்பால் ஈரானில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 145-ஆக உயர்ந்துள்ளது. அந்த நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் 21 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



இதுதவிர, கரோனா வைரஸ் தொற்று அறிகுறிகளுடன் 16,000-க்கும் மேற்பட்டவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கூறினர்.

அமெரிக்கா

21 பேருக்கு பாதிப்பு

கரோனா வைரஸ் அச்சம் காரணமாக அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ துறைமுகத்தில் 3,500-க்கும் மேற்பட்ட பயணிகளுடன் தனிமைப்படுத்தி நிறுத்திவைக்கப்பட்டுள்ள 'கிராண்ட் பிரின்ஸஸ்' சொகுசுக் கப்பலில் 21 பேருக்கு அந்த வைரஸ் பரவியுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 19 பேர் கப்பல் பணியாளர்கள் என தகவல்கள் தெரிவிக்கின்றன.



வாடிகன்

காணொலியில் பிரார்த்தனை

கத்தோலிக்க தலைமையகமான வாடிகனில் மதத் தலைவர் போப் ஃபிரான்சிஸ் (மார்ச் 8) காணொலிக் காட்சி மூலம் ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 8) பிரார்த்தனை நடத்துவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பிரார்த்தனைக்கு வருவோரிடையே கரோனா வைரஸ் பரவுவதைத் தவிர்ப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக வாடிகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



எகிப்து

தனிமைப்படுத்தப்பட்ட கப்பல்

கரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர் பயணித்த சொகுசுக் கப்பல், அந்த வைரஸ் மேலும் பரவுவதைத் தவிர்ப்பதற்காக எகிப்தின் லக்ஸார் துறைமுகத்தில் 150-க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகளுடன் தனிமைப்படுத்தி நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. அந்தக் கப்பலில் உள்ளவர்களில் இந்தியாவைச் சேர்ந்தவர்களும் அடங்குவர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.



ஆட்சிக் கவிழ்ப்பு குற்றச்சாட்டு: 3 சவூதி இளவரசர்கள் கைது



இளவரசர் அகமது பின் அப்துலஜீஸ் அல்-சவூத்

ரியாத், மார்ச் 7: சவூதி அரேபியாவில் ஆட்சிக் கவிழ்ப்பு சதித் திட்டம் தீட்டிய குற்றச்சாட்டின் பேரில் மன்னர் சல்மானின் சகோதரர் உள்ளிட்ட 3 இளவரசர்களை அந்த நாட்டு அதிகாரிகள் கைது செய்தனர்.

இதுகுறித்து அமெரிக்க ஊடகங்கள் தெரிவிப்பதாவது:

சவூதி மன்னர் சல்மானின் இளைய சகோதரரான இளவரசர் அகமது பின் அப்துலஜீஸ் அல்-சவூதை அந்த நாட்டு அதிகாரிகள் வெள்ளிக்கிழமை கைது செய்தனர். மன்னரின் ஆட்சியைக் கவிழ்க்க சதித் திட்டம் தீட்டியதன் மூலம், தேசத் துரோகத்தில் ஈடுபட்டதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதே குற்றச்சாட்டின் கீழ், மன்னரின் மருமகன் முகமது பின் நயெஃபையும் அதிகாரிகள் கைது செய்தனர். இதற்கிடையே, இளவரசர் நயெஃபின் இளைய சகோதரரான நவாஃப் பின் நயெஃபும் கைது செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. இந்த கைதுகள் குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அதிகாரிகள் பதிலளிக்கவில்லை.

இந்தக் கைதுகள் மூலம், சவூதி அரசவையில் மன்னர் சல்மானுக்குப் போட்டியாகத் திகழக் கூடிய 3 பேருக்கு, அதற்கான வாய்ப்புகள் முடக்கப்பட்டுள்ளதாக அரசியல் நோக்கர்கள் தெரிவித்தனர்.

சிரியா ஒப்பந்தத்தை ஆதரிக்கும் ஐ.நா. தீர்மானத்துக்கு அமெரிக்கா தடை

நியூயார்க், மார்ச் 7: சிரியாவின் இத்லிப் மாகாணத்தில் நடைபெற்று வரும் தீவிர சண்டையை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக, ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் மற்றும் துருக்கி அதிபர் எர்டோகனுக்கு இடையே ஏற்பட்டுள்ள அமைதி ஒப்பந்தத்தை ஆதரித்து ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் தீர்மானம் கொண்டு வரப்படுவதை அமெரிக்கா தடுத்துவிட்டது.

இதுகுறித்து ஐ.நா.வுக்கான ரஷியத் தூதர் வாஸிலி நெபென்ஸியா கூறியதாவது:

இத்லிப் மாகாணத்தில் சிரியா படையினருக்கும், துருக்கி ராணுவத்துக்கும் இடையே தீவிரமடைந்து வந்த சண்டையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ரஷியாவும், துருக்கியும் மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்துக்கு ஆதரவு தெரிவித்து, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த ஒப்பந்தத்தை வரவேற்ற அமெரிக்கா அல்லாத உறுப்பு நாடுகள், அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வர ஆதரவு தெரிவித்தன. இருந்தாலும், அமெரிக்கா மட்டும் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்தது.

'இத்லிப் மாகாணத்தில் சண்டை நிறுத்தம் மேற்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள அந்த ஒப்பந்தம், பலனளிக்கும் என்பதை இப்போதே முடிவு செய்ய முடியாது. எனவே, அந்த ஒப்பந்தத்துக்கு உடனடியாக ஆதரவு தெரிவிப்பது தேவையற்றது' என்று அமெரிக்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டது என்றார் வாஸிலி நெபென்ஸியா.

உள்நாட்டுப் போர் நடைபெற்று வரும் சிரியாவில், கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் கடைசியாக இருக்கும் இத்லிப் மாகாணப் பகுதிகளை மீட்கும் நோக்கில், ரஷியா ஆதரவுடன் சிரியா ராணுவம் கடந்த சில வாரங்களாக தீவிர தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்தக் கடுமையான தாக்குதலில், சிறுவர்கள் உள்பட 400-க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

இத்லிப் மாகாணத்தில் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வரும் துருக்கி ராணுவம், சிரியாவின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

சிரியா ராணுவம் கடந்த மாதம் 27-ஆம் தேதி நடத்திய வான்வழித் தாக்குதலில் 34 துருக்கி வீரர்கள் உயிரிழந்தனர். அதற்குப் பதிலடியாக, சிரியா படைகள் மீது துருக்கி ராணுவம் தாக்குதல் நடத்தியது. இதில், இரு தரப்புகளிலும் ஏராளமான வீரர்கள் உயிரிழந்தனர்.

இந்தச் சூழலில், இத்லிபில் ரஷியாவின் ஆதரவுடன் சண்டையிட்டு வரும் சிரியா படையினருக்கும், அந்தப் பகுதியில் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக சண்டையிட்டு வரும் துருக்கி ராணுவத்துக்கும் இடையே மோதலை முடிவுக்குக் கொண்டு வர புதினும் எர்டோகனும் வியாழக்கிழமை ஒப்புக்கொண்டனர்.

அந்த சண்டை நிறுத்த ஒப்பந்தம் வெள்ளிக்கிழமை முதல் அமலுக்கு வந்தது.



சண்டை நிறுத்தத்துக்கு முன்னர் சிரியாவின் இத்லிப் மாகாணம், மாரத் மிஸ்ரின் நகரில் அரசுப் படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் சேதமடைந்த கட்டடத்தைப் பார்வையிட்ட இளைஞர்.

பாகிஸ்தானின் சுனஹரி மசூதியில் பெண்களுக்கு முதல் முறையாக அனுமதி

பெஷாவர், மார்ச் 7: பாகிஸ்தானின் புகழ்பெற்ற சுனஹரி மசூதியில் பெண்கள் தொழுகை நடத்துவதற்கு 23 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.



இதுகுறித்து அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளதாவது:

கைபர் பாக்துன்கவா மாகாணத் தலைநகர் பெஷாவரில் அமைந்துள்ள புகழ்பெற்ற சுனஹரி மசூதியில் பெண்கள் நுழைய கடந்த 23 ஆண்டுகளுக்கு முன்னர் தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமை நடைபெற்ற தொழுகையில் முதல் முதலாக பெண்களும் அனுமதிக்கப்பட்டனர்.

இதுகுறித்து மசூதி நிர்வாகிகள் கூறுகையில், 'சுனஹரி மசூதியில் பெண்களும் தொழுகை நடத்துவதற்காக தனி பிரிவு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தத் தனிப் பிரிவில் இருந்தவாறு அவர்கள் ஆண்களுடன் தொழுகை நடத்தலாம். மேலும், மதச் சொற்பொழிவையும் அவர்கள் கேட்கலாம்.

பயங்கரவாதம் காரணமாகவே மசூதியில் பெண்கள் வருவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. தற்போது அந்தத் தடை விலக்கப்பட்டதையடுத்து, ஈகை தொழுகையிலும் அவர்கள் பங்கேற்கலாம்' என்றனர்.

சர்வதேச மகளிர் தினம் ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 8) கொண்டாடப்படுவதை முன்னிட்டு, சுனஹரி மசூதியில் தொழுகை நடத்த பெண்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது என்று ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தொழில்-வர்த்தகம்

கரன்சி நிலவரம் (இந்திய ரூபாயில்)		அமெரிக்கா		ஐரோப்பா		பிரிட்டன்		மலேசியா		சிங்கப்பூர்		ஜப்பான்	
		டாலர்	74.02	யூரோ	83.57	பவுண்ட்	96.57	ரிங்கிட்	17.74	டாலர்	53.70	யென்	0.70

டாடா ஸ்டீல் வர்த்தகம் 10 சதவீதம் வளர்ச்சி காணும்

கொல்கத்தா மார்ச் 7: டாடா ஸ்டீல் நிறுவனத்தின் பிராண்டட் உருக்கு வர்த்தகம் பொருளாதார மந்த நிலைக்கிடையிலும் நடப்பு நிதியாண்டில் 10 சதவீதம் வளர்ச்சி காணும் என அந்நிறுவனத்தின் சந்தைப்படுத்துதல் மற்றும் விற்பனைப் பிரிவு (பிராண்டட் தயாரிப்புகள்) தலைவர் சஞ்சய் எஸ் சஹ்னி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் பிடிஐ செய்தியாளரிடம் மேலும் கூறியுள்ளதாவது:

சில்லறை மற்றும் குறு, சிறு, நடுத்தர நிறுவனப் (எம்எஸ்எம்இ) பிரிவில் நிறுவனத்தின் பிராண்டட் உருக்கு வர்த்தகம் சிறப்பாக உள்ளது.



இதனை எடுத்துக் காட்டும் விதமாக, விநியோக அமைப்புகளின் மூலம் 44 லட்சம் டன் உருக்குப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன.

இதனை கருத்தில் கொள்ளும்போது, உருக்குத் துறை நடப்பு நிதியாண்டில் 5 சதவீத வளர்சியை மட்டுமே எட்டியபோதிலும் எங்களின் பிராண்டு உருக்கு வர்த்தகம் 10 சதவீத வளர்ச்சியைக் காணும் என்ற நம்பிக்கை உள்ளது. அடுத்த ஆண்டிலும் இதே அளவிலான வளர்ச்சியை எதிர்பார்க்கிறோம். நிறுவனத்தின் பிராண்டட் ஸ்டீல் வர்த்தகம் தற்போதைய நிலையில் ரூ.20,000 கோடியாக உள்ளது. வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ற வகையிலான உருக்கு பொருள்களை தயாரித்து அளிப்பதில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறோம் என்றார் அவர். சுமார் 8,000 டாடா ஸ்டீல் எம்எஸ்எம்இ வாடிக்கையாளர்களின் ஆண்டு உருக்கு நுகர்வு 24 லட்சம் டன்னாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அந்நியச் செலாவணி கையிருப்பில் புதிய உச்சம்


மும்பை, மார்ச் 7: நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு 48,154 கோடி டாலர் என்ற புதிய வரலாற்று உச்சத்தைத் தொட்டு சாதனை படைத்துள்ளது. இதுகுறித்து ரிசர்வ் வங்கி புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளதாவது:

அந்நியச் செலாவணி சொத்து மதிப்பு அதிகரித்து வருவதன் எதிரொலியாக, நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு பிப்ரவரி 14-ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 542 கோடி டாலர் அதிகரித்து 48,154 கோடி டாலர் (ரூ.33.70 லட்சம் கோடி) என்ற புதிய உச்சத்தை எட்டியது.



இதற்கு முந்தைய வாரத்தில், அந்நியச் செலாவணி கையிருப்பு 3 கோடி டாலர் உயர்ந்து 47,612 கோடி டாலராக இருந்தது. ஒட்டுமொத்த கையிருப்பில் பெரும்பங்கைக் கொண்டுள்ள அந்நியச் செலாவணி சொத்து மதிப்பு 436 கோடி டாலர் அதிகரித்து 44,582 கோடி டாலரானது. அதேபோன்று, தங்கத்தின் கையிருப்பும் 10.2 கோடி டாலர் உயர்ந்து 3,038 கோடி டாலராக இருந்தது.

சர்வதேச நிதியத்தில் எஸ்டிஆர் 50 லட்சம் டாலர் குறைந்து 143 கோடி டாலராகவும், நாட்டின் கையிருப்பு நிலை 3 கோடி டாலர் அதிகரித்து 361 கோடி டாலராகவும் இருந்தது என ரிசர்வ் வங்கி அந்தப் புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.



வாகன தயாரிப்பை குறைத்தது மாருதி சுஸுகி

புது தில்லி, மார்ச் 7: கார் தயாரிப்பு மற்றும் விற்பனையில் முதலிடத்தில் உள்ள மாருதி சுஸுகி இந்தியா கடந்த பிப்ரவரியில் வாகன தயாரிப்பை 5.38 சதவீதம் குறைத்துள்ளது.

இதுகுறித்து அந்த நிறுவனம் மும்பை பங்குச் சந்தையிடம் தெரிவித்துள்ளதாவது:

நடப்பாண்டு பிப்ரவரி மாதத்தில் நிறுவனம் 1,40,933 கார்களை தயாரித்தது. கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் நிறுவனத்தின் கார் தயாரிப்பு 1,48,959-ஆக அதிகரித்திருந்தது. ஆக, மதிப்பீட்டு மாதத்தில் கார் தயாரிப்பு 5.38 சதவீதம் அளவுக்கு குறைக்கப்பட்டது.

கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டு பிப்ரவரியில் மொத்த பயணிகள் வாகன தயாரிப்பு 1,47,550 என்ற எண்ணிக்கையிலிருந்து 4.87 சதவீதம் குறைந்து 1,40,370-ஆக இருந்தது.

ஒட்டுமொத்த அளவிலான வாகன தயாரிப்பு குறைக்கப்பட்டபோதிலும் ஆல்டோ, எஸ்-பிரெஸ்ஸோ உள்ளிட்ட சிறிய ரக கார்களின் உற்பத்தி 28,221-லிருந்து 5.16 சதவீதம் அதிகரித்து 29,676-ஆனது.



அதேசமயம், வேகன்ஆர், செலிரியோ, இக்னிஸ், ஸ்விஃப்ட், பலேனோ, டிசையர் உள்ளிட்ட காம்பாக்ட் ரக கார்களின் தயாரிப்பு 79,556 என்ற எண்ணிக்கையிலிருந்து 5.55 சதவீதம் குறைக்கப்பட்டு 75,142 ஆனது. சியாஸ் மாடல் கார் உற்பத்தி 8 சதவீதம் அதிகரித்து 2,729-லிருந்து 2,950 ஆனது.

ஈகோ, ஆம்னி ஆகியவற்றை உள்ளடக்கிய வேன்களின் தயாரிப்பு 16,898 என்ற எண்ணிக்கையிலிருந்து 10,865-ஆக 35.7 சதவீதம் குறைக்கப்பட்டது.

அதேபோன்று, இலகு ரக வர்த்தக வாகனமான சூப்பர் கேரி தயாரிப்பும் 1,409 என்ற எண்ணிக்கையிலிருந்து 563-ஆக 60 சதவீதம் குறைக்கப்பட்டது என மாருதி சுஸுகி மும்பை பங்குச் சந்தையிடம் தெரிவித்துள்ளது.



தினமணி

ஞாயிற்றுக்கிழமை, 8 மார்ச் 2020



திருச்செந்தூரில் இன்று மாசித் திருவிழா தேரோட்டம்

திருச்செந்தூர், மார்ச் 7: திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயிலில் மாசித் திருவிழா தேரோட்டம் ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 8) நடைபெறுகிறது.

இக்கோயிலில் மாசித் திருவிழா கடந்த பிப். 28இல் தொடங்கியது. விழா நாள்களில் காலையும் மாலையும் சுவாமி-அம்மன் தனித்தனி வாகனங்களில் விதியுலா வருதல் நடைபெற்றது.

8ஆம் திருநாளான வெள்ளிக்கிழமை சுவாமி சண்முகப்பெருமான் காலையில் வெள்ளைச் சாத்தி வீதியுலா, பகலில் பச்சைக் கடைசல் சப்பரத்தில் பச்சை சாத்தி வீதியுலா வந்து, சனிக்கிழமை காலை சண்முகர் கோயிலைச் சேர்ந்தார்.

இதையடுத்து, சுவாமி குமரவிடங்கப்பெருமான், சுவாமி அலைவாயுகந்த பெருமான் தனித்தனி வெள்ளிக் குதிரைகளில் எழுந்தருளி திருநெல்வேலி சாலையில் உள்ள வேட்டை வெளிமண்டபத்தில் திருக்கண் சாத்திய பின் வீதியுலா வந்து மேலக்கோயில் சேர்ந்தனர். பகலில் பல்லக்கிலும், இரவில் சுவாமி குமரவிடங்கப்பெருமான் தங்கக் கைலாய பர்வத வாகனத்திலும், தெய்வானை அம்மன் வெள்ளிக் கமல வாகனத்திலும் வீதியுலா வந்தனர்.

முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 8) நடைபெறுகிறது. இதையொட்டி, காலை 6 மணிக்கு மேல் விநாயகர், சுவாமி-அம்மன் தனித் தனி தேர்களில் ரத வீதியில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர். தேரோட்டத்தில் பங்கேற்பதற்காக சனிக்கிழமை மாலை முதலே பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திருச்செந்தூரில் குவியத் தொடங்கினர்.

தொடர்ந்து, 11ஆம் திருநாளான திங்கள்கிழமை இரவு தெப்பத் திருவிழா நடைபெறுகிறது. செவ்வாய்க்கிழமை திருவிழா நிறைவடைகிறது.

ஏற்பாடுகளை கோயில் செயல் அலுவலர் சா.ப. அம்ரித், தக்கார் இரா. கண்ணன் ஆதித்தன், கோயில் பணியாளர்கள் செய்து வருகின்றனர். பாதுகாப்புப் பணியில் காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆ. பாரத் தலைமையில் ஆய்வாளர்கள் ரஞ்சித்குமார், முத்துராமன், ரவிக்குமார், போலீஸார் ஈடுபட்டுள்ளனர். பக்தர்கள் வசதிக்காக சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இன்று உலக மகளிர் தினம்...



சேலம் எருமாபாளையத்தில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள பெண்கள். நாள்: சனிக்கிழமை. (படம்: வே.சக்தி)

கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழா நிறைவு



கச்சத்தீவு கடற்கரையில் உள்ள புனித அந்தோணியார் திருவுருவம்.

ராமேசுவரம், மார்ச் 7: கச்சத்தீவில் புனித அந்தோணியார் ஆலய திருவிழா சனிக்கிழமை நிறைவு பெற்றது. இந்திய- இலங்கை பக்தர்கள் கூட்டு பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இந்த திருவிழாவில் கலந்து கொள்ள இந்திய பக்தர்கள் 2,570 பேர் ராமேசுவரத்தில் இருந்து விசைப்படகு மற்றும் நாட்டுப்படகுகளில் சென்றிருந்தனர். வெள்ளிக்கிழமை மாலையில் கொடியேற்றத்துடன் திருவிழா தொடங்கியது. சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானபிரகாசம் தலைமையில் ஆயர்கள், இந்திய-இலங்கை பங்குத் தந்தைகள், குருமார்கள், இந்திய- இலங்கை பக்தர்கள் ஒன்றிணைந்து கூட்டுப் பிரார்த்தனை நடத்தினர். நிகழ்ச்சியின் இறுதியாக கொடியிறக்கம் நடைபெற்றது. இதனையடுத்து, இந்திய பக்தர்கள் 2,570 பேரும் படகுகளில் ராமேசுவரம் திரும்பினர். அவர்களை ராமேசுவரம் துறைமுகத்தில் சுங்கத்துறை, மத்திய, மாநில

காவல்துறையினர் சோதனையிட்டனர். மேலும் கரோனா வைரஸ் பாதிப்பு உள்ளதா என மருத்துவ பரிசோதனையும் நடைபெற்றது. பின்னர் பக்தர்கள் வீடுகளுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

இந்திய எல்லைக்குள் வந்த இலங்கை படகுகள்: இந்நிலையில், கச்சத்தீவு திருவிழாவிற்கு வந்த இலங்கை பக்தர்களின் 12 படகுகள் காற்றின் வேகம் காரணமாக இந்திய கடல் எல்லைக்குள் வந்தன. அதில் 7 படகுகளை இந்திய கடலோர காவல்படையினர் மீட்டு இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைத்தனர். ஒரு படகு ராமேசுவரம் கடற்கரையில் கரை ஒதுங்கியது.

பெண் காவலரை படம் எடுத்த சுங்கத்துறை ஊழியர்: ராமேசுவரம் துறைமுகத்தில் சனிக்கிழமை பாதுகாப்பு பணியில் இருந்த பெண் காவலர், மதியம் உணவு அருந்தும்போது சுங்கத் துறை ஊழியர் ஒருவர் செல்லிடப்பேசியில் படம் எடுத்துள்ளார். இதனைக் கண்ட பெண் காவலர் அந்த ஊழியரிடம் கேட்டதற்கு அவர் அலட்சியமாக பதில் அளித்தாராம். இதனை பெண் காவலர் உயர் அதிகாரிகளிடம் தெரிவித்த தையடுத்து காவல்துறையினர் மற்றும் சுங்கத்துறையினர் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனை கண்ட பக்தர்கள் அதிர்ச்சிடைந்தனர். இதனால் பக்தர்களை சோதனை செய்து அனுப்பி வைப்பதில் தாமதம் ஏற்பட்டது.

திருவண்ணாமலையில் பௌர்ணமி கிரிவலம்: இன்றும், நாளையும் சிறப்பு ரயில்கள்

சென்னை, மார்ச் 7: பௌர்ணமி கிரிவலத்தை ஒட்டி, பக்தர்கள் வசதிக்காக வேலூர்- திருவண்ணாமலைக்கு மார்ச் 8-ஆம் தேதியும், திருவண்ணாமலை- வேலூருக்கு மார்ச் 9-ஆம் தேதியும் சிறப்பு பயணிகள் ரயில் இயக்கப்படவுள்ளது.

வேலூர் கன்டோன்மென்டில் இருந்து மார்ச் 8-ஆம் தேதி இரவு 9.45 மணிக்கு புறப்பட்டு, திருவண்ணாமலையை இரவு 11.25 மணிக்குச் சென்றடையும். இந்த ரயில் கனியம்பாடியை இரவு 9.57 மணிக்கும், கண்ணமங்கலத்தை இரவு 10.09 மணிக்கும், ஆரணி சாலையை இரவு 10.24 மணிக்கும் ,போளூரை இரவு 10.40 மணிக்கும், அகரத்தை 10.51 மணிக்கும், துரிஞ்சாபுரத்தை இரவு 11.06மணிக்கும் சென்றடையும்.

மறுமார்க்கமாக, திருவண்ணாமலையில் இருந்து மார்ச் 9-ஆம் தேதி அதிகாலை 4 மணிக்கு பயணிகள் சிறப்பு ரயில் புறப்பட்டு, வேலூர் கன்டோன்மென்டை அதிகாலை 5.55 மணிக்கு வந்தடையும். இந்த ரயில் துரிஞ்சாபுரத்தை அதிகாலை 4.12 மணிக்கும், அகரத்தை அதிகாலை 4.29 மணிக்கும் போளூரை அதிகாலை 4.41 மணிக்கும், ஆரணி சாலையை அதிகாலை 5 மணிக்கும், கண்ணமங்கலத்தை அதிகாலை 5.16 மணிக்கும், கனியம்பாடியை அதிகாலை 5.33 மணிக்கும் வந்தடையும்.

இந்தத் தகவல் ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்தில் ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் ஆராதனை விழா

காஞ்சிபுரம், மார்ச் 7: காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் ஜயந்தியை முன்னிட்டு சங்கர மடத்தில் சனிக்கிழமை 2ஆவது ஆண்டு ஆராதனை விழா நடைபெற்றது. இதில் ஏழை, எளியோருக்கு பல்வேறு நல உதவிகளை மத்திய திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் மகேந்திரநாத் பாண்டே வழங்கினார்.

இவ்விழாவை முன்னிட்டு சங்கர மடத்தில் உள்ள காஞ்சி மகா பெரியவர் மற்றும் ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆகியோரின் பிருந்தாவனம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு தீபாராதனைகள் நடைபெற்றன. இதைத் தொடர்ந்து விழாவில் பங்கேற்ற வேத பண்டிதர்கள் 32 பேருக்கு புதிய வஸ்திரங்கள் வழங்கப்பட்டன. அவர்கள் காமாட்சி அம்மன் கோயில் குளத்தில் புனித நீராடி சங்கர மடம் வந்து சேர்ந்த பின்னர் தீர்த்த நாராயண பூஜை நடைபெற்றது. காஞ்சி காமகோடி பீடாதிபதி விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தலைமையில் தீபாராதனைகள் நடைபெற்றன. பின்னர் அனைவரும் ஒன்றிணைந்து பக்தர்களுக்கு அட்சதை தூவி ஆசீர்வதித்தனர்.



ஆராதனை விழாவையொட்டி, மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த மகா பெரியவர் மற்றும் ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆகியோரின் அதிஷ்டானம்.

இவ்விழாவையொட்டி, சனிக்கிழமை இரவு தங்கத்தேரில் மகா பெரியவர் உருவச்சிலையும், ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் உருவப்படமும் வைக்கப்பட்ட தேர் ராஜ வீதிகளில் பவனி வந்தது. ஆராதனை விழாவில் மத்திய திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் மகேந்திரநாத் பாண்டே, ராமஜென்ம பூமி தீர்த்த ஷேத்ர அறக்கட்டளையின் பொருளாளர் கோவிந்ததேவ் கிரிஜி மகராஜ், திருமலை,திருப்பதி தேவஸ்தானத்தின் தலைமைச் செயல் அலுவலர் அனில்குமார் சிங்கால், இணைச் செயல் அலுவலர் தர்மா ரெட்டி, பம்மல் சங்கரா கண் மருத்துவமனையின் தலைவர் பம்மல் விஸ்வநாதன், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள சாரதா பீடத்தின் தலைவர் ரவீந்தர் பாண்டித்யா, திருவண்ணாமலை மாவட்டம் தூசியில் உள்ள சஞ்சீவனி பீடத்தின் தலைவர் அனுமன் மாதாஜி, காஞ்சிபுரம் ராமகிருஷ்ண மடத்தின் நிர்வாகி ஆத்ம ஞானானந்தா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

நலத்திட்ட உதவிகள்: ஆராதனை விழாவையொட்டி, மாற்றுத் திறனாளிகள் மற்றும் ஏழை, எளிய மக்களுக்கு நல உதவிகளை காஞ்சி காமகோடி பீடாதிபதி விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் முன்னிலையில் மத்திய அமைச்சர் மகேந்திரநாத் பாண்டே வழங்கினார். 20 தையல் இயந்திரங்கள், 13 சலவைப் பெட்டிகள், 10 இட்லி பாத்திரங்கள், 8 பேருக்கு மூன்றுசக்கர சைக்கிள் உள்ளிட்ட நல உதவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் காஞ்சி காமகோடி பீடத்தின் கல்வி, கலாசார வரவேற்புக் குழுவின் தலைவர் டி.கணேஷ், பொருளாளர் எம்.ராஜேஷ், நிர்வாகிகள் கே.எம்.பாபு, ஆர்.சுரேஷ், ஒருங்கிணைப்பாளர் ஜீவானந்தம் உள்ளிட்டோர் கலந்து கொண்டர்.

பரிசுகள் வழங்கும் விழா: ஆராதனை விழாவை முன்னிட்டு காஞ்சிபுரம் சங்கரா கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற சுற்றுச்சூழல் மேம்பாடு தொடர்புடைய மாதிரிகள், சுவரொட்டிகள் தயாரித்தல் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவி துசிகா, 2ஆவது இடத்தைப் பெற்ற மாணவி கே.லெட்சுமிப்பிரியா, 3ஆவது இடத்தைப் பெற்ற மாணவி என்.தாரணி ஆகியோருக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதைத் தொடர்ந்து கழிவுப்பொருட்கள் மூலம் கலைப் பொருட்கள் தயாரித்தல் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவி ஆர்.நந்தினி,2ஆவது இடத்தைப் பெற்ற மாணவர் எஸ்.ஹரிஹரன், 3ஆவது இடம் பெற்ற ஆர். ராமச்சந்திரன் என மொத்தம் 75 பேருக்கு பரிசுகளையும், சான்றிதழ்களையும் மத்திய அமைச்சர் மகேந்திரநாத் பாண்டே வழங்கினார்.

விழாவில் சங்கரா கலை அறிவியல் கல்லூரி முதல்வர் ராம. வெங்கடேசன், நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் மணிகண்டன் ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

கீழடியில் மேலும் ஒரு செங்கல்சுவர் கண்டுபிடிப்பு



திருப்புவனம் அருகே கீழடியில் நடந்து வரும் 6 ஆம் கட்ட அகழாய்வில் சனிக்கிழமை கண்டறியப்பட்ட செங்கல் சுவர்.

மானாமதுரை, மார்ச் 7: சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே கீழடியில் தொடங்கியுள்ள 6 ஆம் கட்ட அகழாய்வில் சனிக்கிழமை மேலும் ஒரு பழமையான செங்கல் சுவர் கண்டுபிடிக்கப்பட்டது.

மத்திய, மாநில அரசுகள் தனித் தனியாக நடத்திய 5 கட்ட அகழாய்வில் கீழடியில் நகர நாகரீகம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு இங்கு 2,500 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பழங்காலத் தமிழர்கள் பயன்படுத்திய பலவகை பொருள்கள் கண்டறியப்பட்டு அவை காட்சிப்படுத்தப்பட்டன. மேலும் இங்கு ரூ. 12 கோடி மதிப்பீட்டில் இந்தப் பொருள்களை காட்சிப்படுத்தி வைக்க அருங்காட்சியகம் அமைக்கப்படவுள்ளது. இதற்காக தமிழக அரசு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்து அறிவித்துள்ளது.

இந்நிலையில் கீழடியில் தமிழக அரசு சார்பில் 6 ஆம் கட்ட அகழாய்வுப் பணி நடந்து வருகிறது. முதலில் கீழடியில் 6 ஆம் கட்ட அகழாய்வு தொடங்கி நீதியம்மாள் என்பரது நிலத்தில் குழி தோண்டப்பட்டு வருகிறது. முதல் குழியில் மூன்றரையடி தோண்டப்பட்ட நிலையில், பழங்காலத் தமிழர்கள் கட்டியிருந்த ஒன்றரையடி சுண்ணாம்பு சுவர் பகுதியாக வெளியில் தெரிந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த சுவரின் தொடர்ச்சியை கண்டறிய முழு அளவில் குழி தோண்டப்படுகிறது. இதற்கிடையில் அருகிலேயே இரண்டாவது குழி தோண்டப்பட்டு வருகிறது. மூன்றடி தோண்டப்பட்டபோது சனிக்கிழமை அங்கு 4 அடி நீளம், 2 அடி அகலம் கொண்ட பழமையான மற்றொரு செங்கல் சுவர் கண்டுபிடிக்கப்பட்டது. சுவரின் தொடர்ச்சியை கண்டறியும் பணியில் தொல்லியல் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

திருமலையில் இலவச முதன்மை தரிசனங்கள்

திருப்பதி, மார்ச் 7: திருமலையில் இம்மாதம் 10, 11, 17, 18ஆம் தேதிகளில் இலவச முதன்மை தரிசனங்கள் வழங்கப்படும் எனன்று திருப்பதி தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

திருப்பதி தேவஸ்தானம் மாதந்தோறும் இரு நாள் மூத்த குடிமக்கள் மற்றும் கைகுழந்தைகளின் பெற்றோர் உள்ளிட்டோருக்கு இலவச தரிசனம் வழங்கி வருகிறது. அதன்படி வரும் 10, 17ஆம் தேதிகளில் மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்டோருக்கு தரிசனம் வழங்கப்பட உள்ளது. காலை 10 மணிக்கு ஆயிரம் பேர், மதியம் 2 மணிக்கு 2 ஆயிரம் பேர், மாலை 3 மணிக்கு ஆயிரம் பேர் என ஒரு நாளைக்கு 4 ஆயிரம் பேர் வீதம் இரு நாட்களில் 8 ஆயிரம் பேருக்கு தரிசனம் வழங்க உள்ளது.

அதேபோல் வரும் 11, 18ஆம் தேதி காலை 9 மணி முதல் மதியம் 1.30 மணி வரை 5 வயது வரையுள்ள குழந்தைகளின் பெற்றோர்களுக்கு 'சுபதம்' வழியாக தரிசனம் வழங்கப்பட உள்ளது. தேவஸ்தானம் அளிக்கும் இந்த வாய்ப்பை பக்தர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கூண்டில் சிக்கிய சிறுத்தை

ஆலங்குளம், மார்ச் 7: திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம் மலையடிவார கிராம மக்களை அச்சுறுத்தி வந்த சிறுத்தை, வனத்துறையினர் வைத்த கூண்டில் சனிக்கிழமை சிக்கியது.

பாபநாசம்மேற்குத்தொடர்ச்சி மலையடிவாரத்தில் அமைந்துள்ள திருப்பதியாபுரம், வேம்பையாபுரம் கிராமங்களில் விவசாயிகள் வளர்த்துவரும் நாய்கள், கால்நடைகளை சிறுத்தைகள் தூக்கிச் செல்லும் சம்பவங்கள் அடிக்கடி நடந்துவந்தன. இரவு, அதிகாலை நேரங்களில் மட்டுமே இதுபோன்ற சம்பவங்கள் நடந்த நிலையில், அண்மையில் மலையடிவாரப் பகுதியில் பகல் நேரத்தில் மேய்ந்துகொண்டிருந்த ஆட்டு மந்தைக்குள் சிறுத்தை ஒன்று புகுந்து, ஆட்டைத் தூக்கிச் செல்ல முயன்றது.

இதனால், அச்சமடைந்த கிராம மக்கள், சிறுத்தையைப் பிடிக்க வனத் துறை விரைந்து நடவடிக்கை எடுக்க கோரிக்கைவிடுத்தனர். இதையடுத்து, வனப் பகுதியிலிருந்து சிறுத்தை வெளியேறிவரும் இடத்தைக் கண்டறிந்த வனத்துறையினர், அதைப் பிடிப்பதற்காக வேம்பையாபுரம் பகுதியில் கடந்த வாரம் கூண்டு வைத்து, கண்காணிப்பில் ஈடுபட்டனர். இந்நிலையில் சனிக்கிழமை அதிகாலை அந்தக் கூண்டில் சிறுத்தை சிக்கியது. அதை, அடர்ந்த வனப் பகுதியில் விடுமாறு களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் கயரத் மோகன்தாஸ் உத்தரவிட்டார்.

அதன்படி, வனச் சரகர்கள் முண்டந்துறை சரவணக்குமார், பாபநாசம் பாரத், அம்பை கார்த்திகேயன் , வனவர்கள் மோகன், ஜெகன் ஆகியோர் அந்தச் சிறுத்தையை கௌதலையாற்றுப் பகுதியில் கொண்டு விட்டனர்.

DINAMANI, Dharmapuri Ph: 268200; Fax: 04342-269207; RNI Reg. No. TNTAM/2010/36891, Published by R.K. Jhunjhunwala from 2nd floor, Neeva Complex, No.73F, Sidha Veerappa Chetty Street, Dharmapuri-636 701 and Printed by him at V.C. Printograph, 4/404, Palacode Main Road, K. Nadualli Village, Dharmapuri-636703 on behalf of Express Publications (Madurai) Private Limited., ஆசிரியர்: வைத்தியநாதன் - Editor: K. Vaidiyanathan Dharmapuri, Vol.11, No.67
COPYRIGHT : Express Publications (Madurai) Private Limited., All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited